# ஏசாயா முதல்
# தானியேல் வரை

**புத்தகம் - 8**

வேத பாடசாலை
67, பராக்கா ரோடு
கீழ்ப்பாக்கம்,
சென்னை-600 010.

**Isaiah through Daniel**
Booklet - 8
Tamil

© IBL
2004

Cover Credit : Cynthia Kingston
Printed by :

*For additional booklets write to*

**India Bible Literature,**
67, Beracah Road, Kilpauk,
Chennai - 600 010.

Ph : 26425166 Fax : 26428298
E-mail : ibl.maa@iblchennai.org

**Isaiah through Daniel**
Booklet - 8
Tamil

**India Bible Literature**
67, Beracah Road, Kilpauk,
Chennai - 600 010.

*(For private circulation only)*

ICM / Tam - 8 / 2004



# ஏசாயா முதல் தானியேல் வரை

## தரிசனங்களும் வெளிப்படுத்தல்களும்

அத்தியாயம் ஒன்று

# “ஒரு தீர்க்கதரிசியின் வாழ்க்கை வரலாற்று சுருக்கம்”

பழைய ஏற்பாட்டில் நடப்பவைகளையெல்லாம் குறித்து எழுதியிருப்பதைக் காணும்போது, பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசனங்களின் முக்கியத்துவம் விளங்குகிறது.

தீர்க்கதரிசன புத்தகங்கள் முக்கியம் வாய்ந்தவை. குறிப்பாகப் புதிய ஏற்பாட்டில், இயேசு கிறிஸ்து பழைய ஏற்பாட்டை, “நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசனங்களும்'' (மத்தேயு 7:12; 22:40) என்று குறிப்பிட்டார். நியாயப்பிரமாணம் என்பது வேதாகமத்தின் முதல் ஐந்து புத்தகங்கள் – ஆதியாகமம், யாத்திராகமம், லேவியராகமம், எண்ணாகமம் மற்றும் உபாகமம். நாம் இப்போது ஆய்வு செய்யப்போகும் தீர்க்கதரிசிகளின் புத்தகங்கள், ஏசாயாவில் துவங்கி மல்கியாவில் நிறைவுபெறுகிறது.

அப்போஸ்தலர் பவுல் ஒரு ராஜாவின் முன் நிற்கும்போது தீர்க்கதரிசிகளைப் பற்றித் தெரிவித்ததில் ஒரு நோக்கம் இருக்கிறது. பவுல் சங்கிலிகளால் கட்டப்பட்டிருந்தாலும், ஏறக்குறைய தம்மை ஒரு கிறிஸ்தவராகச் சம்மதிக்கும் அளவிற்கு பவுல் சுவிசேஷத்தை அழுத்தமாக வெளிப்படுத்தினார் என்று ராஜா குறிப்பிட்டார். அப்போஸ்தலரின் சாட்சியில் தெளிவான பகுதி, அவருடைய இந்தக் கேள்வி: ‘‘அகிரிப்பா ராஜாவே, தீர்க்கதரிசிகளை விசுவாசிக்கிறீரா? விசுவாசிக்கிறீர் என்று அறிவேன்.'' பவுலினுடைய கேள்வி தீர்க்கதரிசிகளைப் பற்றி அடிக்கடி கேட்கப்பட்ட ஒரு கேள்வி. அவர்களுடைய போதனையும் அவர்கள் எழுதியவைகளும் அபிஷேகம் பெற்றதாயும் இயல்புக்கு அப்பாற்பட்டதாயுமிருந்தன. ஒரு மனிதன் அல்லது பெண் விசுவாசமுள்ளவரா இல்லையா என்பதைக் காண்பதற்கு “நீ தீர்க்கதரிசிகளை விசுவாசிக்கிறாயா?” என்று கேட்பது ஒரு முறையாக இருந்தது.



புதிய ஏற்பாடு, தீர்க்கதரிசிகளைக் குறிப்பிடும்போது, பொதுவாக அது புத்தகங்களை எழுதிய தீர்க்கதரிசிகளை அல்லது தீர்க்கதரிசனப் புத்தகங்களைக் குறிப்பிடுகின்றன. பதினாறு தீர்க்கதரிசிகளால் எழுதப்பட்டப் பதினேழு தீர்க்கதரிசனப் புத்தகங்கள் இருக்கின்றன. (எரேமியா, புலம்பல் ஆகிய இரண்டு தீர்க்கதரிசனப் புத்தகங்கள் எரேமியாவால் எழுதப்பட்டவை).

தீர்க்கதரிசனப் புத்தகங்களை நாம் மேற்பார்வையிடுவதற்கு முன்பாக, இந்தக் கேள்விக்கு நான் பதிலளிக்க விரும்புகிறேன், “சரியானபடி, தீர்க்கதரிசிகள் என்பவர்கள் யார்?” எனது பதிலை ஒரு தீர்க்கதரிசியை ஒரு ஆசாரியரோடு ஒப்பிட்டுத் துவங்குகிறேன். நியாயப்பிரமாணப் புத்தகங்கள் எழுதப்பட்டபொழுது, முக்கிய ஆவிக்குரிய தலைவராக ஆசாரியன் இருந்தார். மக்கள் பாவம் செய்தபொழுது அவர்கள் பரிந்து பேசுபவர்களாக இருந்ததால், ஆசாரியர் முக்கிய பங்கு வகித்தனர். மேலும், அவர்கள் வேத வசனங்களை தேவனுடைய மக்களுக்கு விளக்கிக் கூறினார்கள். ஆசாரியர்கள் தேவனுடைய மக்களுக்குப் போதகர்களாயிருந்தனர். அவர்கள் வேதவாக்கியங்களைப் பற்றியும், பாலைவனத்தில் ஆசரிப்புக் கூடாரத்தில் செலுத்தப்பட்ட பலிகளைப் பற்றியும், ஆசாரங்களைப் பற்றியும், பின்னர் சாலொமோனின் தேவாலயத்தைப்பற்றியும் எழுந்த கேள்விகளுக்குப் பதிலளித்தனர்.

ஆரோன் வழி அல்லது லேவியர் வழித் தோன்றியவர்கள் என்பதால், ஆசாரியராக ஏற்றுக்கொள்ளப்பட்டார்கள். அதனால் அவர்களைப் பிறப்பால் ஆசாரியர்கள் என்று கூறலாம். துர்ப்பாக்கியவசமாக ஆசாரியர்கள் பல சமயங்களில் சீர்கெட்டவர்களாகவும் பாவிகளான மனிதர்களாகவும் மாறினர். ஓசியா, ‘‘ஆசாரியர்கள் எப்படியோ அப்படியே மக்களும்,'' என்ற தொடர்மொழியை உருவாக்கினார். பெரும்பாலும் மக்கள் தெய்வ நம்பிக்கையற்றவர்களாகவும், பாவம் மிகுந்தவர்களாகவும் இருக்கும்போது, ஆசாரியர்கள் பாவகரமான பழக்கவழக்கங்களுக்கு வழிநடத்தினர். ஆசாரியர்கள் சீர்கெட்டுப் பாவம் செய்தபோது, தேவன் தீர்க்கதரிசிகளை அனுப்பினார்.

தீர்க்கதரிசிகள் பிறப்பிலேயே தீர்க்கதரிசிகள் அல்ல. வாழ்க்கையின் வெவ்வேறு பிரிவிலிருந்தும் இந்த மக்கள் தீர்க்கதரிசிகளாக இருக்கும்படி அழைக்கப்பட்டவர்கள். இரண்டு அல்லது மூன்று தீர்க்கதரிசிகளே அவர்கள் அழைக்கப்பட்டபொழுது ஆசாரியர்களாக இருந்தவர்கள், எனினும் அவர்கள் விதிவிலக்கானவர்கள். சில தீர்க்கதரிசிகள், அழைக்கப்பட்டபொழுது யூத பிரபுக்களின் ஒரு பகுதியாயிருந்தவர்கள். சிலர் சாதாரண வேலை செய்தவர்கள். ஆமோஸ், அத்திப்பழம் சேகரிப்பவனாகவும் மேய்ப்பனாகவும் இருந்தவர். சுருக்கமாகச்

சொன்னால், ஒரு ஆசாரியன் தேவனுடைய சமுகத்தில் தேவனுடைய மக்களுக்காக தேவனோடு பரிந்து பேசுபவராயிருந்தார். தீர்க்கதரிசியோ தேவனுடைய சமுகத்திலிருந்து மக்களுக்கு தேவனுடைய செய்தியோடு வருபவர்.

தீர்க்கதரிசன புத்தகங்களை எழுதிய எல்லா தீர்க்கதரிசிகளும் சுமார் நானூறு ஆண்டு காலத்துக்குள் வாழ்ந்தவர்கள், ஏறக்குறைய கி.மு. 800 முதல் கி.மு. 400 வரை. இந்தக் காலவரையில் மக்கள் பாவம் செய்தவர்களாயிருந்தனர், குறிப்பாக விக்கிரகாராதனை செய்யும் பாவம். அவர்கள் வேறு தேவர்களை வழிபட்டதால், தேவனுடைய நியாயத்தீர்ப்பு அவர்கள் மேல் வரும் நிலையிலிருந்தது. வடதிசை ராஜ்ஜியம் ஆசீரியர்களின் படையெடுப்பு வடிவில் அவர்கள் மேல் வருவதாயிருந்தது. இதைத் தொடர்ந்து ஏறக்குறைய நூறு ஆண்டுகளுக்குப்பின், தென் திசை ராஜ்ஜியத்தை பாபிலோன் படையெடுத்துச் சிறைப்படுத்தியது. புத்தகங்களை எழுதிய தீர்க்கதரிசிகள், இந்தச் சிறையிருப்புக்கு முன்னாக இருந்தவர்கள் அல்லது இந்தச் சிறையிருப்பின்போது ஊழியஞ்செய்து பிரசங்கித்தவர்கள் அல்லது இந்தத் துக்கச் சம்பவங்களுக்குப்பின் மீட்பின் காலத்தில் வாழ்ந்து பிரசங்கித்தவர்கள்.

புத்தகங்களை எழுதிய இந்தப் பதினாறு தீர்க்கதரிசிகளில், மூன்று பேர் இந்தச் சிறையிருப்புக்குப்பின் ஊழியஞ்செய்து பிரசங்கித்தவர்கள், இவர்களுடைய பிரசங்கம் தேவனுடைய மக்கள் பாபிலோனிய சிறையிருப்பிலிருந்து வந்த பின் மீட்பு மற்றும் திரும்பக்கட்டும் பணியைப் பற்றிய பிரசங்கம், எனினும் பெரும்பாலானோர், இந்தப் படையெடுப்பு, சிறையிருப்பு ஆகியவைகளுக்கு முன்பாக வாழ்ந்தவர்கள் அல்லது இந்த நிகழ்ச்சிகளின்போது ஊழியஞ்செய்தவர்கள்.

வட திசை ராஜ்ஜியத்தின் அசீரிய சிறையிருப்புக்கும் தென்திசை ராஜ்ஜியத்தின் பாபிலோனிய சிறையிருப்புக்கும் முன்பாக வாழ்ந்த தீர்க்கதரிசிகள் ''உங்களுக்கு ஆவிக்குரிய ஒரு எழுப்புதல் இருந்தால், விக்கிரகாராதனை செய்யும் உங்கள் பாவத்திலிருந்து உண்மையாகவே நீங்கள் மனந்திரும்பினால், அசீரிய படையெடுப்பும் சிறையிருப்பும் அல்லது இந்தப் பாபிலோனிய படையெடுப்பும் சிறையிருப்பும் உங்களுக்கு நேரிடாது'' என்று பிரசங்கித்தனர். இந்தத் தீர்க்கதரிசிகள் மனந்திரும்புதலுக்கும் ஆவிக்குரிய எழுப்புதலுக்கும் செய்தியளிக்க அழைக்கப்பட்டவர்கள். எனினும், பெரும்பாலும் அவர்களுடைய செய்திகள் நிராகரிக்கப்பட்டன. தீர்க்கதரிசிகள் கேலி செய்யப்பட்டுப் பரிகசிக்கப்பட்டு, பெரும்பாலும் துன்புறுத்தப்பட்டு, இரத்த சாட்சிகளானார்கள். ஒருவரும் கேட்க விரும்பாத ஒரு செய்தியை அவர்கள் பிரசங்கித்ததால் அநேகர் மரணமடைந்தனர்.



தங்களுடைய செய்திக்கு பலனில்லை என்று தீர்க்கதரிசிகள் தெரிந்துகொண்டதும், அவர்கள் "சிறையிருப்பு வரப்போகிறது, அது வரும்போது, நீங்கள் உங்கள் விக்கிரகாராதனையிலிருந்து மனந்திரும்பாதவர்களாயிருப்பதால், சர்வ வல்லமையுள்ள தேவனின் நியாயத்தீர்ப்பு வரும்'' என்று சொன்னார்கள். அவர்கள் சொல்லியது சரியே. வடதிசை ராஜ்ஜியத்தை அசீரியர்கள் தோற்கடித்து, சிறையிருப்புக்குள் கொண்டுவந்தபின் அதைப்பற்றி எதுவுமே தெரியவில்லை. நூறு ஆண்டுகளுக்குப் பின், பாபிலோனியர்கள் தென்தசை ராஜ்ஜியத்தை முற்றுகையிட்டனர்.

பாபிலோனின் படையெடுப்பையும் சிறையிருப்பையும் பற்றி, தீர்க்கதரிசிகள் ஒரு நம்பிக்கையின் செய்தியை பிரசங்கித்தனர். அவர்கள் ஒரு தீர்க்கதரிசன வெளிப்பாட்டைப் பெற்றுக்கொண்டு, ''இப்போதிலிருந்து எழுபது வருடங்களுக்குப்பின் இந்தச் சிறையிருப்பிலிருந்து நீங்கள் மீண்டு வரப்போகிறீர்கள்'' என்று பிரசங்கித்தனர். பாபிலோனிய சிறையிருப்பிலிருந்து திரும்பி வருவதை அவர்கள் தேவனுடைய இரக்கம் மற்றும் கிருபையின் ஒரு வெளிப்பாடாகக் கண்டார்கள். இவர்களின் பெரும்பாலான தீர்க்கதரிசிகள் அந்த அற்புதம் நடைபெறுவதைக் காண்கிறவரை உயிரோடிருக்கவில்லை.

## மேசியா பற்றிய தீர்க்கதரிசனங்கள்

தீர்க்கதரிசிகள் கூறியவற்றில் மற்றொரு முக்கிய செய்தி, தேவனுடைய மக்கள் பூமியின் கடையாந்தரமட்டும் சிதறடிக்கப்படுவார்கள் என்பது. அந்தப் பரவுதலைப்பற்றி அவர்கள் பிரசங்கித்தபோது, பெரும்பாலும் அதிலிருந்து திரும்பி வருதலைப்பற்றியும் தீர்க்கதரிசனமுரைத்தனர். பாபிலோனிய சிறையிருப்பிலிருந்து திரும்பி வருதலைப்பற்றி அவர்கள் பிரசங்கித்தபோது, அவர்கள் அந்தச் சிறையிருப்பிலிருந்து திரும்பிவருவதான தங்கள் தீர்க்கதரிசனங்களோடு மேசியா பற்றிய தீர்க்கதரிசனங்களையும் சேர்த்துக் கூறினர்.

கிறிஸ்துவின் தோற்றத்தை இரண்டு வருகைகளாக தீர்க்கதரிசிகள் அளித்தனர். முதல் முறை, உலகத்தின் பாவங்களுக்காக மரிக்கும், துன்புறுத்தப்படும் இரட்சகராக வருவார். அவர் இரண்டாம் முறை வரும்போது அதை இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகை என்று அழைக்கிறோம். தீர்மானமாக தீமையின் வல்லமைகளை ஜெயித்து, நீதி ஆட்சி செய்யும் ஒரு புதிய வானத்தையும், ஒரு புதிய பூமியையும் நிலைநாட்டும் ராஜாதி ராஜாவாக, கர்த்தாதி கர்த்தராக அவர் வருவார்.

ஒரு தீர்க்கதரிசியின் பங்கு, பருவ நிலையைப் பற்றிக்கூறும் ஒரு "ஆவிக்குரிய வானிலை அறிக்கையாளர்" போல் இருக்கும் என்று நான் நம்புகிறேன். "தீர்க்கதரிசி" என்ற வார்த்தைக்கு "தேவனுக்காகப் பேசும் ஒருவர்" என்று அர்த்தம். அதாவது ஒரு தீர்க்கதரிசி மூலம் தேவன் பேசினார். தீர்ககதரிசிகள் தேவனுக்காக இரண்டு வழிகளில் பேசினார்கள். முதலாவதாக, அவர்கள் தேவனுடைய "வார்த்தைகளை அறிவித்தார்கள்," அதாவது அவர்கள் வேதாகமத்தின் மிகப்பெரிய போதகர்கள். இரண்டாவதாக, இன்னும் நடைபெறாத நிகழ்ச்சிகளை அவர்கள் "முன் அறிவித்தனர்". அவர்கள் முன்னறிவித்த நிகழ்ச்சிகளில் சில, வரப்போகும் காலங்களில் நடைபெறவுள்ளது.

ஒரு தீர்க்கதரிசியின் முன்னறிவிக்கும் ஊழியத்தின் பரிமாணம் நம்மை திகைக்கவைப்பதாயிருக்கிறது. அது அவருடைய ஊழியத்தில் முக்கியமானது. எனினும் அது ஒரு சிறிய பகுதிதான். அடிப்படையில் தீர்க்கதரிசிகள் ஆசாரியர்களாயிருந்தவர்கள். தேவனுடைய வசனங்களுக்குக் கீழ்ப்படிந்து, தங்கள் வாழ்க்கைகளில் அவைகளைச் செயல்படுத்த மக்களுக்கு அவர்கள் ஊக்கமளித்தனர். அடிக்கடி தீர்க்கதரிசிகள் புதிய சத்தியங்களின் தீர்க்கதரிசன வெளிப்பாடுகளைப் பெற்றுக்கொண்டார்கள், எனினும் யோசுவாவின் காலந்துவங்கி, தேவனால் மோசேக்குக் கொடுக்கப்பட்ட வசனங்களையே பிரசங்கித்தனர். இதனாலேயே நான் மோசே தீர்க்கதரிசிகளுக்குள் மிகப் பெரியவன் என்று சொல்லுகிறேன், ஏனென்றால், அவர் தேவனிடமிருந்துப் பெற்றுக்கொண்ட வார்த்தைகளை தீர்கதரிசிகள் பிரசங்கித்தனர்.

"தீர்க்கதரிசி" என்ற வார்த்தை இரண்டு வார்த்தைகளால் ஆனது, அவை "முன்னால் நிற்பது", "விளக்கமளிப்பது" என்பவை. தீர்க்கதரிசி, எழுதப்பட்ட தேவனுடைய வசனங்களின் முன்னால் நின்று அவைகளுக்கு விளக்கமளித்தார் அல்லது பிரகாசிக்கச் செய்தார். தேவனுடைய வசனங்களுக்குக் கீழ்ப்படிந்து தங்கள் வாழ்க்கைகளில் அவைகளைச் செயல்படுத்த மக்களுக்கு அவர்கள் ஊக்கமளித்தனர். அவர்கள் எப்பொழுதும், எதிர்கால நிகழ்வுகளைப்பற்றி தம்முடைய மக்களோடு பகிர்ந்துகொள்ளும்படி தேவன் கொடுத்த வெளிப்பாடுகளைப் பின்பற்றி தேவனுடைய மக்கள் தூய வாழ்க்கை வாழவேண்டும் என்று உற்சாகப்படுத்தினார்.

## பிரச்சினை இல்லையா, தீர்க்கதரிசி இல்லை

பிரச்சினைகள் இருந்த இடங்களுக்கு தீர்க்கதரிசிகள் வந்தார்கள். "பிரச்சினை இல்லையா, தீர்க்கதரிசி இல்லை" என்ற கருத்து நிலவியது. ஒவ்வொரு தீர்க்கதரிசியின் வாழ்க்கையையும் செய்தியையும் நீங்கள் ஆய்வு செய்யும்போது, இவை போன்ற கேள்விகளைக் கேட்க



வேண்டும், ''இந்தக் குறிப்பிட்ட மனிதன் ஒரு தீர்க்கதரிசியாக அழைக்கப்பட்டபோது, தேவனுடைய செயலை தடுத்துக்கொண்டிருந்த பிரச்சினை என்ன, அவருடைய நாட்களில் தேவனுடைய கிரியையை தடுத்துக்கொண்டிருந்தத் தடையை அவருடைய ஊழியம் எப்படி எடுத்துப்போட்டது?''

எடுத்துக்காட்டாக, ஆகாய் தீர்க்கதரிசியின் காலத்தில், அதாவது பாபிலோனிய சிறையிருப்பிலிருந்து திரும்பி வரும் காலத்தில், தேவனுடைய செயல் எருசலேம் தேவாலயத்தைத் திரும்பக் கட்டுவதாயிருந்தது. தேவனுடைய மக்கள் தேவாலயத்தைத் திரும்பக் கட்டத் துவங்கியபொழுது, கடும் துன்புறுத்தல்களைச் சமாளிக்க வேண்டியிருந்தது. ஒரு பெர்சிய ராஜா அவர்கள் சிறையிருப்பிலிருந்து திரும்பிவர அனுமதி கொடுத்து தேவாலயத்தைக் கட்ட வேண்டிய கட்டிடப்பொருட்களைக் கொடுத்த போதிலும், அவர்கள் வேலையைத் துவங்கியதும் எதிர்க்கப்பட்டனர்.

துன்புறுத்துதல் துவங்கியதும், அவர்கள் தேவாலயத்தைக் கட்டும் வேலையை நிறுத்தினார்கள். பின்னர் இவர்களுடைய கவனம் சிதறடிக்கப்பட்டுத் தங்கள் சொந்த வீடுகளைக் கட்டுவதில் கவனம் செலுத்தினர். தேவன் ஆகாய் தீர்க்கதரிசியை அழைத்த பதினைந்து ஆண்டு காலம் வரை இப்படி நடைபெற்றது. ஆகாய் தேவாலயத்துக்காகப் பிரசங்கித்தார். ''இந்த வீடு பாழாய்க் கிடக்கும்போது, நீங்கள் மச்சுப்பாவப்பட்ட உங்கள் வீடுகளில் குடியிருக்கும்படியான காலம் இதுவோ?" (ஆகாய் 1:4), என்று அவர் மக்களிடம் கேட்டார். அவர்கள் அந்த வேலைக்குத் திரும்பிப் போய், தேவாலயத்தைத் திரும்பக் கட்டும்படி ஆகாய் மக்களுக்கு ஊக்கமளித்தார்.

ஆகாயின் பிரசங்கத்தினால் மக்கள் தங்கள் வீடுகளைக் கட்டும் வேலையை நிறுத்தினார்கள். அவர்கள் தங்கள் முன்னுரிமைகள் மேல் கவனம் செலுத்தி, தேவனுக்கும் தேவனுடைய வீட்டுக்கும் முதலிடமளித்து, தங்கள் சொந்த வீடுகளுக்கு இரண்டாம் இடமளித்தனர். அப்பொழுது தேவனுடைய வேலை நடைபெறத் துவங்கியது. ஆகாய் அந்த இடத்திலிருந்து விடைபெற்றார்.

புதிய ஏற்பாட்டு நிருபங்கள் கூட இதற்கு இணையானவை. புதிய ஏற்பாட்டில் கிறிஸ்துவின் சபையைக் கட்டுதலையோ தேவனுடைய வேலையையோ, தடுக்கும் பிரச்சினைகள் வந்தபொழுது, ஒரு நிருபத்தை எழுத அப்போஸ்தலர் ஒருவரை அவர் எழுப்பினார். அந்த அப்போஸ்தலரின் கடிதத்தின் நோக்கம் என்ன? அந்தப் பிரச்சினைகள் நீக்கப்பட்டுக் கர்த்தருடைய வேலை தொடருமட்டும், உயிர்த்தெழுந்த

கிறிஸ்துவின் சபையைக் கட்டுவதற்குத் தடையாயிருப்பவைளுக்கு எதிராகக் கூக்குரலிடுவதே அதன் நோக்கம்.

தீர்க்கதரிசிகள் எதிர்கொண்ட பிரச்சினைகள் / தடைகள் புதிய ஏற்பாட்டின் நிருபங்கள் எதிர்கொண்ட அதே தடைகள் அல்ல. தீர்க்கதரிசிகளின் செய்திகளையும் புதிய ஏற்பாட்டின் புத்தகங்களையும் ஒன்றாக சேர்த்தால், இன்று தேவனுடைய வேலையைத் தடைசெய்யும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைக்கொண்ட ஏறக்குறைய நாற்பது புத்தகங்கள் வேதாகமத்தில் இருக்கின்றன.

தம்முடைய மக்கள் மூலமாகத் தம்முடைய வேலையை செய்ய தேவன் விரும்புகிறார். அது தீர்க்கதரிசிகளின் நாட்களிலும் அப்போஸ்தலரின் நாட்களிலும் உண்மையாயிருந்ததுபோல, இன்றும் உண்மையாயிருக்கிறது. தேவன் முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் உங்களை வைத்திருக்கும்போது, ஒரு பிரச்சினையால் தடை இருப்பதை நீங்கள் தெரிந்துகொள்ளும்போது, தேவன் தாம் விரும்பியபடி செயல்படவில்லை என்ற திடநம்பிக்கை உங்களுக்கிருக்குமானால், தேவனுடைய வேலையைத் தடைசெய்யும் இடையூரின் மீது கவனம் செலுத்தும்வரை ஜெபியுங்கள். அந்த இடையூறு என்ன என்று நீங்கள் தெரிந்துகொள்ளும்போது, தீர்க்கதரிசிகள் அல்லது அப்போஸ்தலர்கள் எழுதியவைகளுக்குப் போய், நீங்கள் இருக்குமிடத்தில் தேவனுடைய வேலைக்கு எதிராயிருக்கும் பிரச்சினைகளுக்கு அவர்களுடைய செய்திகளை அப்பியசிக்கும்படி ஞானத்தையும், கிருபையும், தைரியத்தையும் கொடுக்கும்படி தேவனைக் கேளுங்கள்.

தீர்க்கதரிசிகள், அப்போஸ்தலர்கள் மூலமாக, தேவனுடைய வேலையைத் தடைசெய்யும் இடையூறுகளை எப்படி எடுத்துப்போட முடியும் என்று தேவன் உங்களுக்குக் காட்டுவார். உலகத்தில் நீங்கள் இருக்கும் பகுதியில் தேவனுடைய வேலையைத் தடுக்கும் இடையூறுகளை நீக்க தீர்க்கதரிசிகளும் அப்போஸ்தலர்களும் எழுதவில்லையென்றால், அவருடைய வேலை தொடரும்வரை பிரச்சினை தடைகள் நீக்கப்படும்படி கூக்குரலிட வேண்டும் என்று தேவன் விரும்புகிறார் என்பது தெளிவாகிறது.



## அத்தியாயம் 2
# “ஏசாயாவின் வருகையும், தேவனுக்காகப் போவதும்”

தீர்க்கதரிசிகள், ‘‘பெரிய தீர்க்கதரிசிகள்’’ என்றும் ‘‘சிறிய தீர்க்கதரிசிகள்” என்றும் பிரிக்கப்பட்டிருக்கின்றனர். இந்தப் பெயர்கள் “பெரிய தீர்க்கதரிசிகள்”, சிறிய தீர்க்கதரிசிகளைவிட உயர்ந்தவர்கள் என்ற அர்த்தமுடையதல்ல. இந்த வேறுபாடுகள் அவர்கள் எவ்வளவு எழுதியிருக்கிறார்கள் என்பதன் அடிப்படையிலானது. ஏசாயா தீர்க்கதரிசியின் புத்தகம் எல்லாத் தீர்க்கதரிசனப் புத்தகங்களையும்விட நீண்டதாயிருப்பதால் ஏசாயா ஒரு பெரிய தீர்க்கதரிசி ஆவார்.

ஏசாயா யூதர்களின் உயர்ந்த குடும்பத்திலிருந்து வந்தவர். அவருடைய தகப்பன் வழியில் உசியா ராஜாவுக்கும், யோசியா ராஜாவுக்கும் நெருங்கிய உறவினர் என்று யூத பாரம்பரியம் தெரிவிக்கிறது. ஏசாயா அநேக ராஜாக்களுக்கு ஊழியம் செய்ததால், தேவன் அவரை அழைத்த ஊழியத்துக்கு இந்த ராஜ பிறப்புரிமை அவரை நன்றாக ஆயத்தப்படுத்தியிருந்தது.

### சில முக்கிய வரலாற்றுக் கண்ணோட்டங்கள்

இப்புத்தகம் வேதாகமத்தைத் தியானிப்பதையும் நடைமுறைப் படு த்துவதையும் மேற்பார்வையிடுவதாக இருந்தாலும், தீர்க்கதரிசிகளின் செய்திகளை தெரிந்துகொள்ளுவதற்கு சிறிது வரலாற்றுக் கண்ணோட்டமும் உங்களுக்கு அவசியம். தீர்க்கதரிசிகள் வாழ்ந்த இந்த வரலாற்றுக் காலத்தில், அவர்கள் பிரசங்கித்தனர், எழுதினர். இன்னும் தங்கள் ஊழியங்களை நடத்தினர். ஏறக்குறைய கி.மு. 800 முதல் கி.மு. 400 வரை மூன்று மாபெரும் உலக பேரரசுகள் இருந்தன: மிகப்பெரிய அசீரியப் பேரரசு, இஸ்ரவேலின் வடதிசை ராஜ்ஜியத்தைக் கைப்பற்றியது; அசீரிய பேரரசை தோல்வியடையச் செய்தபின் பாபிலோனியப் பேரரசு

இஸ்ரவேலின் தென்திசை ராஜ்ஜியத்தை முறியடித்து, மற்றும் பாபிலோனை வெற்றிகண்ட மீதியரையும் பெர்சியரையும் கூட வெற்றி கண்டது.

ஏசாயா வாழ்ந்த காலத்தில் அசீரியா உலகத்தில் சக்திவாய்ந்த நாடாயிருந்தது. ''இஸ்ரவேல்'' என்றழைக்கப்பட்ட பத்துக் கோத்திரத்தாரும் சிறை பிடிக்கப்பட்டனர், இதன் பின் இவர்களைப் பற்றி எந்த செய்தியுமில்லை. ஏசாயாவின் பிரசங்கத்தின் பெரும்பகுதி, வடதிசை ராஜ்ஜியத்தினரின் விக்கிரகாராதனையாகிய பாவத்திற்கு தேவனுடைய நியாயத்தீர்ப்பாக அசீரியரின் படையெடுப்பு வரப்போகிறது என்று அவர்களுக்கு எச்சரிக்கை அளிப்பதாயிருந்தது.அசீரியர்கள் வடதிசை ராஜ்ஜியத்தை சிறை பிடித்து பத்துக் கோத்திரத்தாரையும் நாடுகடத்தியபின் தெற்கே திரும்பி, தென்திசை ராஜ்ஜியத்தின்மேல் படையெடுத்தனர். அவர்கள் யூதாவின் சுவர்கள் கட்டப்பட்ட நகரங்களைக் கைப்பற்றினர். அசீரியப் படைகள் எருசலேம் நகரத்தின் வாசல்கள் வரை வந்து இரண்டு லட்சம் மக்களை அசீரியாவிற்கு சிறைபிடித்துக் கொண்டு சென்றார்கள். எனினும், அசீரியப்படை எருசலேமின் வாசல்கள் வரை வந்தவேளை, ஒரு தீர்க்கதரிசியாக ஏசா யாவுக்கு அது பிரகாசமான வேளையாயிருந்தது.

அந்த சமயத்தில் தென்திசை ராஜ்ஜியத்துக்கு எசேக்கியா ராஜாவாயிருந்தார். அவர் ஆவிக்குரிய தலைவரும், பெரிய ஜெப வீரருமாயிருந்தார். அவர் பத்து சங்கீதங்களை எழுதியவர். அசீரியர்கள் எருசலேமின் வாசல்களை அடைந்தபோது, அவர்களின் அதிபதி நகரகாவலர்களை இகழ்ந்து சத்தமிட்டு அவர்களைச் சரணமடையும்படி சவாலிட்டான்.

எசேக்கியா ராஜா தேவாலயத்தில் தம்முடைய மக்களின் உயிர்களுக்காக தேவனோடு மன்றாடிக்கொண்டிருந்தபோது, ஏசாயாவுக்கு ஒரு வெளிப்படுத்துதல் காணப்பட்டது. எனவே தீர்க்கதரிசி தேவாலயத்துக்குப்போய், எசேக்கியாவிடம் தேவன் அவருடைய ஜெபத்தைக் கேட்டதால் விடுதலை வரப்போகிறது என்று சொன்னார். அவர் ராஜாவிடம் அசீரியப்படைகள் தலைநகரில் தேவைப்படுவதால் அவர்கள் திரும்பிவரவேண்டும் என்ற செய்தி அவர்களுக்குக் கிடைக்கப்போகிறது என்றார். அசீரியா வந்து சேர்ந்ததும் அசீரியாவின் ராஜா கொல்லப்படுவான் என்று சொன்னார்.

அந்த இரவில், 185,000 அசீரியப் போர்வீரர்கள் தங்கள் பாளையங்களில் கர்த்தருடைய தூதனால் கொல்லப்பட்டனர். அவர்கள் அசீரியா வந்து சேர்ந்ததும் ஏசாயாவின் தீர்க்கதரிசனம் நிறைவேறியது. ராஜாவின் இரண்டு மகன்களும் அவனைக் கொலை செய்தனர்.



ஏசாயாவின் செல்வாக்கும் ஊழியமும் இல்லாவிட்டால், அசீரியர்கள் வடதிசை மற்றும் தென்திசை ராஜ்ஜியங்களை நிர்மூலமாக்கியிருப்பார்கள் என்று நீங்கள் சொல்ல முடியும்.

ஏசாயா பெர்சியா பாபிலோனை சிறைபிடித்து, தங்கள் தேவாலயங்களைத் திரும்பக் கட்டுவதற்கு சிறையிருப்பிலிருப் பவர்களுக்கு கோரேஸ் மன்னன், அனுமதியளிப்பான் என்று முன்னறிவித்தார். அவர் கோரேசின் பெயரை இரண்டு முறை குறிப்பிட்டு, எபிரெய வரலாற்றில் இந்தப் பெரிய நிகழ்வை முன்னறிவிக்கிறார். ஒரு தீர்க்கதரிசியின் முன்னறிவிக்கும் ஊழியத்தைப் பற்றிய வேதாகமத்தின் மிகப்பெரிய எடுத்துக்காட்டுகளில் ஒன்றை ஏசாயா நமக்குக் கொடுக்கிறார்.

வரலாறுகளில் யூத கோத்திரத்தலைவர்கள் ஏசாயாவின் இந்தத் தீர்க்கதரிசன உரையை கோரேஸ் மன்னனுக்குக் காண்பித்தனர் என்று பார்க்கிறோம். கோரேஸ் மன்னன் அப்போது ஒரு அசாதாரணக் கட்டளையைக் கொடுத்தார். அவர் திரும்ப வருவதற்கு அனுமதி கொடுத்ததோடு தேவாலயத்தைத் திரும்பக் கட்டுவதற்கான கட்டுமான பொருட்களையும் கொடுத்தார். இது ஏசாயா முன்னறிவித்தது போல அப்படியே நிறைவேறியது. பெர்சியர் பாபிலோனை கைப்பற்றியவுடன் முதலாவதாகக் கொடுத்து கட்டளை, சிறைப்பிடிக்கப்பட்ட யூதர்கள் தங்கள் நாட்டுக்குத் திரும்பலாம்; அங்கே தங்கள் தேவாலயத்தைத் திரும்பக் கட்டலாம் என்பதே (ஏசாயா 44:28–45:7; எஸ்றா 1:2–4).

## ஒரு சிறந்த பிரசங்கி

ஏசாயா ஒரு மிக அற்புதமான பிரசங்கியாய் இருந்திருக்க வேண்டும். இயேசு கிறிஸ்து கூறியபடி, பெண்களிடத்திலே பிறந்தவர்களில் பெரிய தீர்க்கதரிசி யோவான்ஸ்நானன் (லூக்கா 7:28). எனினும் யோவான் வனாந்தரத்தில் பிரசங்கித்தபொழுது, அவர் ஏசாயாவின் பிரசங்கங்களைப் பிரசங்கித்தார் என்று சொல்லப்பட்டிருக்கிறது (லூக்கா 3:4). ''ஸ்திரீகளிடத்திலே பிறந்தவர்களில் பெரிய தீர்க்கதரிசியாகிய யோவான்ஸ்நானன்'' ஏசாயாவின் போதனைகளைப் பிரசங்கித்தது ஏசாயாவை, "தீர்க்கதரிசிகளின் தீர்க்கதரிசியாக'' ஆக்குகிறது.

ஏசாயா ஐம்பது அல்லது அறுபது ஆண்டுகள் பிரசங்கித்திருக்கக் கூடும். அவர் யூதாவின் ஐந்து ராஜாக்களின் காலத்திலும், இஸ்ரவேலின் ஆறு ராஜாக்களின் காலத்திலும் வாழ்ந்தார். வட ராஜ்ஜியத்தின் மேல் அசீரியரிடமிருந்து வரப்போவதைப் பற்றி அவர் அதிகம் கூறினாலும், அவருடைய அடிப்படை ஊழியமும் அக்கறையும் தென்திசை ராஜ்ஜியமான யூதாவின்மேல் இருந்தது.

ஏசாயாவின் வரலாற்றைப் பற்றி அறிந்துகொள்ள வேண்டுமானால், அவருடைய தீர்க்கதரிசனத்தின் துவக்க வசனங்களைக் கவனமாக வாசியுங்கள். தீர்க்கதரிசன புத்தகங்கள் பெரும்பாலும் ஒரு தீர்க்கதரிசி குறிப்பிட்ட ராஜாக்களின் காலத்தில் வாழ்ந்ததையும், ஊழியஞ்செய்ததையும் பற்றிக் கூறுகிறது. அவர் வாழ்ந்த காலத்தையும் காட்டுகிறது. ஏசாயாவின் வாழ்நாளில் ஆட்சி செய்த சில ராஜாக்கள் நல்ல ராஜாக்கள், சிலர் தீயவர்கள். தீய அரசர்களில் ஒருவன் மனாசே. இவன் ஏசாயாவை இரண்டாக வெட்டி அவனை மரணமடையச் செய்தான் என்பது மரபுவழி வந்த செய்தி. வேதாகமத்தின் விசுவாச அதிகாரம் சில பழைய ஏற்பாட்டு விசுவாச வீரர்கள் ''வாளால் அறுப்புண்டார்கள்'' (எபிரெயர் 11:37) என்று பதிவுசெய்தது ஏசாயாவின் இரத்தசாட்சியின் விவரணம் என்று அநேகக் கல்விமான்கள் நம்புகின்றனர்.

## புத்தகத்தைப் பிரித்தல்

ஏசாயாவின் புத்தகத்தைப் பிரித்தறிய ஒரு சரியான வழி இருக்கிறது. முதல் முப்பத்தொன்பது அதிகாரங்களும் அசீரியர்களின் படையெடுப்பும் சிறையிருப்பும் பற்றி தேவனுடைய மக்களுக்கு ஏசாயா அளித்த எச்சரிக்கையின் செய்தியாயிருக்கிறது. அதைத் தொடர்ந்த இருபத்தேழு அதிகாரங்களும் குணப்படுத்துவதும் ஆறுதலளிப்பதுமான ஒரு செய்தி. ஏறக்குறைய முதல் முப்பத்தொன்பது அதிகாரங்களும், "ஆவிக்குரிய அறுவை சிகிச்சை" போலவும், கடைசி இருபத்தேழு அதிகாரங்கள் "அறுவை சிகிச்சை" முடிந்தபின் நடைபெறும் குணமாக்கும் சிகிச்சையைப் போலவுமிருக்கிறது.

ஏசாயா புத்தகத்தின் இந்த அறுபத்தாறு புத்தகங்களும் பிரிக்கப்பட்ட முறை, வேதாகமத்தின் இந்தப் புத்தகங்களுக்கும், வேதாகமத்துக்கும் கூட இணையானவைகளை நிர்ணயிக்கிறது என்று சிலரை நம்பச் செய்கிறது. இந்த வியப்பூட்டும் ஒற்றுமைகளைப் பற்றி சிந்தியுங்கள்: ஏசாயா புத்தகத்தில் அறுபத்தாறு அதிகாரங்கள் இருக்கின்றன. வேதாகமத்தில் அறுபத்தாறு புத்தகங்கள் இருக்கின்றன. ஏசாயா இரண்டு பகுதிகளாகப் பிரிகிறது, இவை முப்பத்தொன்பது அதிகாரங்களும் இருபத்தேழு அதிகாரங்களும் கொண்டவை. வேதாகமம் முப்பத்தொன்பது புத்தகங்களைக் கொண்ட பழைய ஏற்பாடாகவும், இருபத்தேழு புத்தகங்களைக் கொண்ட புதிய ஏற்பாடாகவும் பிரிகிறது. ஏசாயா புத்தகத்தின் முதல் பகுதி பழைய ஏற்பாட்டைப்போல அநேக பயபக்தியோடு கூடிய எச்சரிக்கைகள், ஆக்கினை தீர்ப்பின் செய்தி ஆகியவைகளோடும் காணப்படுகிறது. இது மனிதனுடையத் உண்மையான நிலையையும், தேவனிடமிருந்து மனிதன் காணக்கூடிய தீர்வையும் வெளிப்படுத்துவதாயிருக்கிறது.



ஏசாயாவின் இரண்டாம் பகுதி, மக்களுக்கு ஆறுதலும் நம்பிக்கையுமளிக்கும் ஒரு இரட்சகரையளிக்கும் ''புதிய ஏற்பாடு'' போலிருக்கிறது, ஏனென்றால் அவர்கள் ஒரு இரட்சகருக்கு வழியை சுட்டிக்காட்டும் ''பழைய ஏற்பாட்டு'' ஏசாயாவின் பகுதியை வாசித்திருக்கிறார்கள். பழைய ஏற்பாடு, "நீ எங்கே இருக்கிறாய்?" என்ற கேள்வியோடு ஆரம்பிக்கிறது (ஆதியாகமம் 3:9). புதிய ஏற்பாடு, "அவர் எங்கே இருக்கிறார்?" என்ற கேள்வியோடு துவங்குகிறது (மத்தேயு 2:2). ஏசாயாவின் இந்த இரண்டு பகுதிகளும் ஒரு இரட்சகரின் அவசியத்தை நமக்கு உணர்த்துகிறது. பின்னர் ஐம்பத்து மூன்றாம் அதிகாரத்தில் துன்பம் அனுபவிக்கும் ஊழியரை நமக்கு அறிமுகப்படுத்துகிறது.

## ஏசாயாவின் அழைப்பு

ஏசாயா என்ற மனிதனைப் பற்றியும், அவருடைய ஊழியம், அவருடைய செய்தி ஆகியவைகளைப்பற்றியும் நாம் அறிமுகப்படுத்தப்பட ஏசாயாவின் இரண்டு வசனப்பகுதிகள் நமக்கு உதவுகின்றன. அப்படிப்பட்டப் பகுதிகளில் ஒன்று ஆறாம் அதிகாரம். இது ஏசாயாவின் அழைப்பு அல்லது அவருக்குக் கொடுக்கப்பட்டக் கட்டளையின் விவரணம். அது ஏசாயாவின் மனந்திரும்புதலின் விவரணமாகக் கூட இருக்கலாம். வேத வாக்கியங்களில், தேவனுடைய மக்கள் எல்லாரும் ஒரு அர்த்தமுள்ள காரியத்துக்காக தேவனிடம் வருகின்றனர். இதனால் தேவனுக்காக அர்த்தமுள்ள செயல்களைச் செய்ய அவர்கள் போக முடியும். ஏசாயாவின் ஆறாவது அதிகாரம், ஏசாயாவின் வரப்போகிற அனுபவம், தேவனுக்காக அவன் போக வேண்டிய கட்டளை ஆகியவற்றின் விவரணம் ஆகியவைகளைக் கொண்டது.

ஏசாயா தேவனிடம் வரும் அனுபவத்தைப் பெறும்போது, "யாரை நான் அனுப்புவேன், யார் நமது காரியமாய்ப் போவான்?" (8) என்று கர்த்தர் சொல்லுவதைக் கேட்டான். இதற்குப் பதிலாக ஏசாயா, "இதோ அடியேன் இருக்கிறேன்; என்னை அனுப்பும்" என்று சொல்லித் தம் அர்ப்பணிப்பை வெளிப்படுத்தினார். இந்த மாதிரி, வேதவசனங்களில் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. தேவனண்டை வரும் எல்லா தேவனுடைய மக்களும் ஒரு கட்டளையைக் கேட்டு, தேவனுக்காகப் போகின்றனர்.

தேவன் அவரிடம், ''ஏசாயாவே, இந்த மக்கள் உனக்கு செவிகொடுக்க மாட்டார்கள். நீ போவதின் நோக்கம் மக்கள் மனந்திரும்பக் கூடும் என்பதல்ல. என்னைவிட்டு விலகிச் செல்லுவதை அவர்கள் தெரிந்துகொண்டார்கள். எனினும் என்னுடைய செய்தியை அவர்கள் கேட்க வேண்டும் என்பதால் எப்படியானாலும் நீ அவர்களிடம்

போக வேண்டும்,'' என்று விளக்கினார். ஒரு பிரசங்கியாயிருப்பது கடினமான ஒரு காரியம். ஐம்பது அல்லது அறுபது ஆண்டுகள் ஒரு போதகராயிருந்து, உங்கள் பிரசங்கத்துக்கு யாரும் செவிகொடுத்துப் பின்பற்றவில்லை என்பதைக் கற்பனை செய்து பாருங்கள்!

தம்முடைய கட்டளைக்கு ஏசாயாவின் அர்ப்பணிப்பு வியப்பளிக்கக் கூடியது. அவர், "ஆண்டவரே, எதுவரைக்கும்" அவர்கள் கேட்பதற்கு ஆயத்தமில்லாதிருப்பார்கள் என்று கேட்டார். அதற்கு தேவன், "பட்டணங்கள் குடியில்லாமலும் வீடுகள் மனுஷ சஞ்சாரமில்லாமலும் பாழாகி, பூமி அவாந்தரவெளியாகி, கர்த்தர் மனுஷரைத் தூரமாக விலக்குவதினால், தேசத்தின் நடுமையம் முற்றிலும் வெறுமையாக்கப் படும் வரைக்குமே" (6:11,12) என்று சுருக்கமாகச் சொன்னார். ஏசாயாவின் பொறுப்பு நம் எல்லாருக்கும் ஒரு மாதிரியாயிருக்க வேண்டும். உண்மையில் இந்த எல்லாத் தீர்க்கதரிசிகளின் பொறுப்பு அவர்கள் பிரசங்கித்தவைகளில் எல்லாம் மிகப்பெரிய பிரசங்கமாயிருந்தது. அவர்கள் தேவனோடு ஒரு ஒப்பந்தத்துக்குள் இருந்தனர். தேவன் அவர்களைப் போகச் சொன்னார், அவர்கள் போனார்கள். அவர்கள் போனபொழுது, அவர்கள் தேவனுக்கு உண்மையுள்ளவர்களாய் இருந்தனர் என்பதும் அவர்களுக்குத் தேவன் கட்டளையிட்டதை அவர்கள் செய்ததும் முக்கியமான காரியங்கள்.

தேவன் நம்மை எதற்காக அழைக்கிறாரோ, எதைச் செய்யும்படிக் கட்டளையிடுகிறாரோ அவற்றை செய்துமுடிப்பதே நம்முடைய பொறுப்பு. நம்முடைய கீழ்ப்படிதலின் பலனைத் தீர்மானிப்பவர் தேவன். தேவனும், பரிசுத்த ஆவியானவரும் மட்டுமே பலனைக் கொடுக்க முடியும். நம்முடைய பொறுப்பு உண்மையானவவர்களாயிருப்பது. கனிகொடுக்கச் செய்வது தேவனுடைய பொறுப்பு. தேவன் நாம் செய்யவேண்டும் என்று சொல்லுவதைச் செய்து முடிப்பதே நம் பொறுப்பு.



### அத்தியாயம் மூன்று

# மேசியாவைப் பற்றிய செய்திகள்

தீர்க்கதரிசனப் புத்தகங்கள் எதையும் விட ஏசாயாவின் புத்தகத்தில் மேசியாவைப் பற்றிய தீர்க்க தரிசனங்கள் அதிகமாகக் காணப்படுகிறது. மற்ற எல்லா பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகளையும் விட ஏசாயாவைப் பற்றி புதிய ஏற்பாட்டில் அதிகமாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஏசாயாவின் புத்தகத்தை வாசிக்கும்போது அவருடைய பிரசங்கத்தில் மேசியாவைப் பற்றிய தீர்க்கதரிசனங்களைக் காணுங்கள். மேசியா வரும்போது அவர் எந்தப் பெயர்களால் அழைக்கப்பட வேண்டும் என்ற இந்தத் தீர்க்கதரிசனத்தை நீங்கள் ஏசாயாவில் காண்பீர்கள்: "அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனைக் கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதானப்பிரபு என்னப்படும்" (எசாயா 9:6). மேசியா என்பவர் மனித மாம்சத்தில் தேவன் இருப்பார் அல்லது "தேவன் நம்மோடிருக்கிறார்" என்ற அர்த்தமுடைய "இம்மானுவேல்" என்பதை ஏசாயா தெளிவாக்கியிருக்கிறார் (மத்தேயு 1:23).

இன்னும் மேசியா வரும்போது அவர் மூலமாக வெளிப்படுத் தப்படும் ஆவியானவரின் முக்கியத்துவத்தைக் குறித்தும் ஏசாயா நமக்குச் சொல்லியிருக்கிறார்: "ஈசாயென்னும் அடிமரத்திலிருந்து ஒரு துளிர் தோன்றி, அவன் வேர்களிலிருந்து ஒரு கிளை எழும்பிச் செழிக்கும். ஞானத்தையும் உணர்வையும் அருளும் ஆவியும், ஆலோசனையையும் பெலனையும் அருளும் ஆவியும், அறிவையும் கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்தையும் அருளும் ஆவியாகிய கர்த்தருடைய ஆவியானவர் அவர்மேல் தங்கியிருப்பார்'' (ஏசாயா 11:1-2). வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தில் இது "தேவனுடைய ஏழு ஆவிகள்" என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது (வெளி. 3:1, 4:5, 5:6).

வேதாகமத்தில் ஏழு என்ற எண் பூரணத்தைக் குறிப்பிடுவதாக

இருப்பதால், ஏசாயா வரும் மேசியாவைப் பற்றி நமக்குச் சொல்லுவது எதைக் குறிக்கிறதென்றால், "மேசியா தேவனுடைய ஆவியின் பூரண வெளிப்பாடாக இருப்பார்" என்பதே. இந்த ஏழு வழிகளில் மேசியா ஆவிக்குரிய சாராம்சத்தை வெளிப்படுத்துவார். அவருடைய வாழ்க்கையிலிருந்து அறிவின் ஆவியும், உணர்வின் ஆவியும், ஞானத்தின் ஆவியும், ஆலோசனை அருளும் ஆவியும், பெலனை அருளும் ஆவியும், ஆராதிக்கும் ஆவியும், கர்த்தருடைய ஆவியும் வெளிவரும்.

நான்கு சுவிசேஷங்களையும் நீங்கள் வாசிக்கும்போது, எந்த மாதிரியான இயேசுவின் ஒரு சித்திரம் உங்கள் மனதில் உருவாகுகிறது? ஏசாயாவின் கருத்துப்படி மேசியா இப்படி இருப்பார் (இருந்தார்): அவருடைய வாழ்க்கை அறிவின் ஆவியையும் உணர்வின் ஆவியையும் வெளிப்படுத்தும். அவர் தேவனுடைய வசனங்களைப் பூரணமாகத் தெரிந்துகொண்டு உணர்ந்து கொள்ளுவார். ஞானத்தின் ஆவி என்பது அறிவை வெளிப்படுத்துதல். அதனால் இயேசு தேவனுடைய வசனங்களைத் தம்முடைய வாழ்க்கையிலும், மற்றவர்களுடைய வாழ்க்கைகளிலும் செயல்படுத்தும்போது அவர் ஞானத்தின் ஆவியையும் செயல்படுத்துவார். இதன் அர்த்தம் அவர் ஆலோசனையின் ஆவியையும் செயல்படுத்துவார். அவர் அப்படிச் செய்யும்போது, அவருடைய வாழ்க்கையிலும் ஊழியத்திலும், வாழ்க்கையை மாற்றும் வல்லமை வந்து, வல்லமையையும் பெலனையும் அருளுள் ஆவியை செயல்படுத்தும்.

கடைசியாக ஏசாயா, மேசியா ஆராதனையின் ஆவி அல்லது கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்தின் ஆவியை வெளிப்படுத்தி செயல்படுத்துவார் என்று தீர்க்கதரிசனம் உரைத்தார். தாம் ஆராதனையின் ஆவியாகிய இந்தக் கடைசி வெளிப்பாட்டில் களிகூருவார் என்று ஏசாயா தம்முடைய வியாக்கியானத்தில் கூடுதலாகச் சொல்லுகிறார். சுவிசேஷங்களை நீங்கள் வாசிக்கும்பொழுது, இயேசு மக்களுக்கு ஊழியஞ்செய்யாமலிருக் கும்போது அவர் தனிமையில் ஜெபித்து ஆராதித்துக் கொண்டிருந்தார் என்று காண்பீர்கள். நான்கு சுவிசேஷங்களையும் வாசித்து, இயேசுவினுடைய வாழ்க்கையில் தேவ ஆவியானவர் நிறைவேற்றிய ஏழு பூரண வெளிப்பாடுகளைப் பாருங்கள்.

இருபதாம் நூற்றாண்டின் கடைசி பாதிப்பகுதியில், பரிசுத்த ஆவியானவரைப் பற்றிய உற்சாகமான எழுப்புதல் ஏற்பட்டது. பரிசுத்த ஆவியானவரைப்பற்றிய அனுபவங்களைப் பற்றி நாம் அர்த்தம் சொல்லும்போது, பெரிய பிரிவுகளையும் குழப்பத்தையும் நாம் உருவாக்குகிறோம், ஏனென்றால் பரிசுத்த ஆவியானவரோடு நமக்கு ஏற்பட்ட அனுபவங்களை நாம் பிரித்தெழுதும்போது நாம் சில



தவறுகளைச் செய்கிறோம். எடுத்துக்காட்டாக, எப்பொழுதாவது ஆவியால் நிறைந்த விசுவாசி, போதகர் அல்லது சபை என்று மக்கள் சொல்லக் கேட்டிருக்கிறீர்களா? இதிலுள்ள கருத்து என்னவெனில், இரண்டு விதமான விசுவாசிகள், போதகர்கள் அல்லது சபைகளிருக்கின்றன. ஆவியால் நிறைந்த விசுவாசிகள், போதகர்கள் சபைகள்; ஒருபோதும் ஆவியால் நிறைக்கப்படாத விசுவாசிகள், போதகர்கள், சபைகள்.

வேதாகமம் விசுவாசிகளைப்பற்றி ஆவியால் நிரப்பப்பட்டவர்கள் என்று விவரிக்கும்போது அதன் அர்த்தம் இது தானா? வேதம் எல்லா விசுவாசிகளும், ''ஆவியினால் நிறைந்து'' (எபேசியர் 15:8) இருக்கவேண்டும் என்று நமக்குக் கட்டளையிடுகிறது. இது மூலமொழியில், ''ஆவியினால் நிறைந்திருங்கள்'' என்று அர்த்தப்படுகிறது. கிரேக்க மொழியில் இது, இயேசு கிறிஸ்துவின் உண்மையான சீஷர்களுக்கான ஒரு கட்டளையாகக் கொடுத்ததைக் காட்டுகிறது.

ஆவியினால் நிறைந்திருப்பது என்றால் என்ன? அப்போஸ்தலர் புத்தகத்தில் பேதுரு, "ஆவியினால் நிறைந்து" பெந்தெகொஸ்தே நாளில் அந்த மிகப்பெரிய பிரசங்கத்தைப் பிரசங்கித்தான் என்று சொல்லப்பட்டிருக்கிறது. பின்னர் "பேதுரு ஆவியினால் நிறைந்து" மறுபடியும் பிரசங்கித்தான், ஆயிரக்கணக்கான மக்கள் இரட்சிக்கப்பட்டார்கள் என்று வாசிக்கிறோம். இன்னும் "பேதுரு ஆவியினால் நிறைந்து" பல அற்புதங்களைச் செய்தான் என்று வாசிக்கிறோம். பேதுரு ஆவியினால் நிறைந்திருந்தான் என வேதவசனங்கள் நமக்குச் சொன்ன நேரங்கள் தவிர, இடைப்பட்ட நேரங்களில் அவன் ஆவியினால் நிறைந்திருந்தானா?

பரிசுத்த ஆவியானவர் ஒரு திரவமல்ல. பரிசுத்த ஆவியானவர் ஒரு நபர், பரிசுத்த ஆவியானவர் நம்முடைய வாழ்க்கைகளில் இருக்கிறார் அல்லது இல்லாமலிருக்கிறார். அவ்வளவே. சரியான கேள்வி, ''நமக்குள் எவ்வளவு ஆவியானவர் இருக்கிறார்?'' என்பதல்ல, ''ஆவியானவர் நம்மில் எவ்வளவு பகுதியை வைத்திருக்கிறார்?'' என்பதே. நாம் எல்லாமாக அவருக்குள்ளிருந்தால், அப்போது ஆவியானவரால் நிறைந்திருக்கிறோம்.

ஆவியினால் நிறைந்த ஒரு விசுவாசி, ஆவியானவரின் கட்டுப்பாட்டுக்குள்ளிருக்கும் ஒரு விசுவாசி. பரிசுத்த ஆவியானவரால் நிறைந்தவர்களாக இருக்கும்படி பவுல் கட்டளையிட்டதற்கு முன் அவர், "மதுபான வெறி கொள்ளாமல், ஆவியினால் நிறைந்து" (எபேசியர் 5:18) இருங்கள் என்று எழுதினார். மதுவருந்திய ஒருவன் மதுபானத்தின்

ஆதீக்கத்துக்குள் அல்லது கட்டுப்பாட்டுக்குள் இருப்பதுபோல, நாம் பரிசுத்த ஆவியானவரின் ஆதீக்கத்துக்குள் அல்லது கட்டுப்பாட்டுக்குள் இருக்க வேண்டும்.

ஏசாயாவின் இந்த அழகிய தீர்க்கதரிசனம் நம்மில் எவரும் ஆவியால் நிறைந்திருக்கப் பயப்படக் கூடாது என்று போதிக்கிறது ஏனென்றால் நாம் ஆவியால் நிறைந்திருந்து, தேவனுடைய ஆவியானவரால் முழுமையாகக் கட்டுப்படுத்தப்பட்டு தேவனுடைய ஆவியின் சாராம்சத்தை வெளிப்படுத்துபவர்களாயிருந்தால், அப்போது நாம் தேவ ஆவியின் ஏழு பரிமாணங்களை இயேசு வெளிப்படுத்திய போது இருந்ததைப் போலிருப்போம்.

இயேசு கிறிஸ்து தேவனுடைய ஆவியானவரின் பூரண வெளிப்பாடாக இருந்தார் என்று இங்கே ஏசாயா சொல்லுகிறார். இயேசு கிறிஸ்து எல்லா நேரங்களிலும் நூற்றுக்கு நூறு ஆவியானவரின் கட்டுப்பாட்டுக்குள்ளிருந்தார். அல்லது எப்பொழுதும் அவர் ஆவியால் நிறைந்திருந்தார். இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கையில் தேவனுடைய ஆவி முற்றிலும் வெளிப்படுத்தப்பட்டது. அவர் எப்படியிருந்தார்? நான்கு சுவிசேஷங்களையும் வாசித்துப் பாருங்கள். சுவிசேஷங்களை வாசித்தும் இயேசுவைப் போல் இருக்க வேண்டும் என்று விரும்பாத யாராவது இருக்க முடியுமா? ஆவியாயிருக்கும் நம்முடைய தேவனின் ஆவிக்குரிய சாராம்சத்தை வாழ்க்கையில் வெளிப்படுத்தும்படியாக நாம் வாழவேண்டும். இதற்கு அவருடைய வாழ்க்கை ஒரு மாதிரி.

## தேவனுடைய நெடுஞ்சாலை

ஏசாயா 40-ல் மற்றுமொரு மேசியா பற்றிய ஏசாயாவின் அழகான தீர்க்கதரிசனத்தைக் காண்கிறோம்: ‘‘கர்த்தருக்கு வழியை ஆயத்தப்படுத்துங்கள், அவாந்தர வெளியிலே நம்முடைய தேவனுக்குப் பாதையைச் செவ்வைபண்ணுங்கள் என்றும், பள்ளமெல்லாம் உயர்த்தப்பட்டு, சகல மலையும் குன்றும் தாழ்த்தப்பட்டு, கோணலானது செவ்வையாகி, கரடு முரடானவை சமமாக்கப்படும் என்றும், கர்த்தருடைய மகிமை வெளியரங்கமாகும், மாம்சமான யாவும் அதை ஏகமாய்க் காணும், கர்த்தருடைய வாக்கு அதை உரைத்தது என்றும் வனாந்தரத்திலே கூப்பிடுகிறவனுடைய சத்தம் உண்டாயிற்று’’ (40:3-5).

ஏசாயாவின் பிரசங்கத்தை யோவான்ஸ்நானன் பிரசங்கித்துக் கொண்டிருந்தபோது, அவன் பிரசங்கித்த பிரசங்கம் இதுவே (லூக்கா 3:4-6). இது ஏசாயாவின் மிக உயர்ந்த பிரசங்கங்களில் ஒன்று. தேவன் இந்த உலகத்தினுள் தம்முடைய குமாரன் என்ற நபராக மேசியாவாக வருவார் என்று அவர் பிரசங்கித்தார். ஏசாயா இதை ஒரு ராஜா ஒரு பயணம் மேற்கொள்ளுவதற்கு ஒப்பிடுகிறார். தூரத்திலுள்ள ஒரு



கிராமத்துக்கு ஒரு ராஜா பிரயாணமாய்ப் போனால் அவனுடைய மக்கள் அவனுக்கு ஒரு பாதையை உண்டுபண்ணுவார்கள். இதை அவர்கள் “ராஜபாதை” என்றழைப்பார்கள். ஒரு பாதையை அமைக்கும்போது நீங்கள் நான்கு காரியங்களைச் செய்வீர்கள்: மலைகளை சமப்படுத்துவீர்கள், பள்ளத்தாக்குகளை நிரப்புவீர்கள், கோணலான பாதைகளை நேராக்குவீர்கள், கரடுமுரடான இடங்களை சீராக்குவீர்கள்.

ஏசாயா இந்த சாதாரண எடுத்துக்காட்டைப் பயன்படுத்தி, “தேவன் இந்த உலகத்தினுள் பிரயாணம் செய்ய விரும்புகிறார், ஆனால் அவர் பிரயாணம் செய்ய ஒரு பாதை வேண்டும். இந்த உலகத்தினுள் தேவன் வரும் பாதை அவருடைய குமாரனின் வாழ்க்கையாயிருக்கும். அவருடைய குமாரனின் வாழ்க்கையில் பெருமையாகிய மலைகள் தகர்த்து மட்டமாக்கப்பட்டு, பள்ளத்தாக்குகள் அல்லது வெற்றிடங்கள் நிரப்பப்பட்டு, பாவத்தின் கோணலான இடங்கள் நேராக்கப்பட்டு, கரடுமுரடான இடங்கள் சீராக்கப்படும். அப்பொழுது இந்த உலகத்தினுள் தேவன் பிரயாணம் செய்யக் கூடிய ஒரு பாதை உண்டாகும். இந்தப் பாதை மூலமாக மாம்சமான யாவும் இரட்சிப்பையும் தேவனுடைய மகிமையையும் காண்பார்கள்’’ என்று சுருக்கமாகச் சொல்லுகிறார்.

இயேசு நாம் எப்படி வாழ வேண்டும் என்று காட்டுகிறார், அதாவது இது காடுமுரடாயிருந்தாலும் சீராக்கப்படும். நம்முடைய வாழ்க்கை தேவனுக்கான பாதைகளாக அமைய வேண்டும் என்பதாகும். இந்த ஜெபத்தை நீங்கள் ஜெபிக்க வேண்டும் என்று நான் உங்களுக்குச் சவாலிடுகிறேன், ‘‘தேவனே, நீர் இந்த உலகத்தினுள் பிரயாணம் செய்யக்கூடிய ஒரு பாதையாக என் வாழ்க்கையை உருவாக்கும்.” இந்த ஜெபத்தை ஒருமுறை நீங்கள் ஜெபித்த பின், தேவனுடைய சாலை அமைக்கும் இயந்திரங்கள் வந்து, பெருமையாகிய மலைகளைத் தகர்த்து மட்டமாக்கி, உங்கள் பள்ளத்தாக்குகளையும் வெற்றிடங்களையும் நிரப்பி, பாவத்தின் கோணலான இடத்தை நேராக்கி, கரடுமுரடான இடங்களைச் சீராக்குவதைப் பார்த்து ஆச்சரியப்படாதீர்கள். நீங்களும் நானும் அந்த ஜெபத்தை ஜெபிக்கும்போது, தேவன் நம்முடைய வாழ்க்கைகளில்: “எச்சரிப்பு: தேவனுடைய வேலை நடை பெறுகிறது!” என்ற அடையாளப் பலகையைத் தொங்க விடுவார்.

## நாசரேத் அறிக்கை

ஏசாயாவின் ஆச்சரியப்படத்தக்க மற்றொரு பிரசங்கம் அறுபத்தொன்றாம் அதிகாரத்தில் காணப்படுகிறது. இது இயேசுவினுடைய பொது ஊழியத்தைப்பற்றிய மேசியாவின் தீர்க்கதரிசனம். இயேசு தம்முடைய மூன்று வருட பொது ஊழியத்தை, “நாசரேத் அறிக்கை’’ என்று வேதபண்டிதர்கள் அழைக்கப்பட்ட ஒரு

அறிக்கையுடன் ஆரம்பித்தார். இயேசு தம்முடைய சொந்த ஊரிலுள்ள தேவாலயத்துக்குப் போய், ஏசாயா தீர்க்கதரிசியின் சுருள்களைக் கேட்டார். அந்தச் சுருளைத் திறந்து கிட்டத்தட்ட கடைசிப் பகுதியில் இந்த வார்த்தைகளை வாசித்தார்: “கர்த்தருடைய ஆவியானவர் என் மேலிருக்கிறார்; தரித்திரருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி என்னை அபிஷேகம் பண்ணினார்; இருதயம் நருங்குண்டவர்களை குணமாக்கவும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், குருடருக்குப் பார்வையையும் பிரசித்தப்படுத்தவும், நொறுங்குண்டவர்களை விடுவிக்கவும், கர்த்தருடைய அநுக்கிரக வருஷத்தைப் பிரசித்தப்படுத்தவும் என்னை அனுப்பினார்” (ஏசாயா 61:1, 2; லூக்கா 4:18, 19). வாசித்தபின் அவர் தாம் வாசித்த வசனங்கள் அந்த நாளிலேயே நிறைவேற்றிற்று என்று அறிவித்தார்.

ஏசாயாவின் புத்தகத்தில் அறுபத்தொன்றாம் அதிகாரத்தை லூக்கா நான்காம் அதிகாரத்தோடு ஒப்பிட்டுப் பார்த்தால், அவர் ஏசாயா குறிப்பிட்டவைகளில் ஒரு வாக்கியத்தின் நடுவே நிறுத்திவிட்டார் என்று காண்பீர்கள். தொடர்ந்து ஏசாயா, ‘‘நம்முடைய தேவன் நீதியைச் சரிக்கட்டும் நாளையும்’’ என்று கூறுகிறார். இயேசு வசனத்தின் இந்தப் பகுதியை வாசிக்கவில்லை ஏனென்றால் அது அவருடைய இரண்டாம் வருகையை விவரிப்பதாயிருந்தது. மேசியா திரும்ப வந்து, தேவனுடைய எதிரிகள் எல்லாரையும் பழிவாங்குவார். இயேசு நிறுத்தி, சுருளை ரபியினிடம் கொடுத்துவிட்டார் ஏனென்றால் அவர் அன்று துவங்கிய தம்முடைய மூன்று வருடத்துக்கான அறிக்கையை அறிவித்துக் கொண்டிருந்தார். இதன்பின் அவர், ‘‘இந்த வேதவாக்கியம் இன்றையத்தினம் நிறைவேறிற்று” (ஏசாயா 61:1, 2; லூக்கா 4:18-21) என்றார்.

இயேசு, “தேவனுடைய ஆவியானவர் என் மேல் இருக்கிறார். எளிய மக்களுக்கு ஒரு செய்தியைப் பிரசங்கிக்க அவர் என்னை அபிஷேகம் செய்திருக்கிறார்,’’ என்று சொல்லுகிறார். இந்த எளிய மக்கள் பார்வையற்றவர்கள் என்ற அர்த்தத்தில் எளியவர்கள். அவர்களின் பார்வைக் குறைவு என்பதன் அர்த்தம், தங்களுடைய வலது கை எது, இடதுகை எது என்று அறிந்துகொள்ள முடியாதவர்களாயிருக்கிறார்கள் என்பது. அவர்கள் எளியவர்கள் என்பதன் கருத்து அவர்கள் கட்டப்பட்டிருந்தார்கள், அவர்கள் சுதந்தரராய் இல்லை என்பதாகும். அவர்கள் எளியவர்கள் ஏனென்றால் அவர்கள் நொறுங்குண்டவர்களும் காயப்பட்டவர்களாயும் இருந்தனர்.

தம்முடைய சொந்த ஊர் தேவாலயத்தில் அந்த நாளில் இயேசு அறிவித்ததின் சாராம்சம், “என்னுடைய ஊழியம் பார்வையற்ற, கட்டுண்ட, நொறுங்குண்ட, காயப்பட்ட மக்களுக்கு நேரானது. இந்த எளிய மக்களுக்கு நான் சுவிசேஷத்தை பிரகடனம் செய்யும்போது,



பார்வையற்றவர்கள் பார்வையடைவார்கள், கட்டுண்டவர்கள் விடுதலையடைவார்கள், நொறுங்குண்டவர்களும் காயப்பட்டவர்களும் குணமடைவார்கள்,” என்பதே. இந்த மிகப்பெரிய நாசரேத் அறிக்கையை அறிவித்து, இயேசு தம்முடைய மூன்று வருஷ பொது ஊழியத்தைத் துவங்கினார்.

நாசரேத் அறிக்கை, இயேசு கிறிஸ்துவின் ஊழியத்தை ஏதாவது ஒரு சுவிசேஷத்தில், குறிப்பாக லூக்கா சுவிசேஷத்தில் நீங்கள் காணும் ஒரு அழகிய திட்டம். இயேசு தேவனாக நம்மோடிருந்தபொழுது, தாம் யார், எப்படிப்பட்டவர், இங்கே அவர் என்ன செய்கிறார் என்ற அறிக்கையை அறிவிக்க விரும்பினார். அவர் யோவான்ஸ்நானனைப் போல ஏசாயாவின் பிரசங்கங்களில் ஒன்றைப் பிரசங்கித்தார்.

தம்முடைய அறிக்கையை அறிவித்தபின் மூன்று ஆண்டுகள் என்ன செய்தார் என்பதை நான்கு சுவிசேஷங்களையும் வாசிக்கும்போதும் கவனியுங்கள். அவர் குருடருக்குப் பார்வையளித்தார். சரியானபடி அவர் குருடருக்குப் பார்வையளித்திருந்தாலும், தம்முடைய உபதேச ஊழியத்தின் மூலம், ஆவிக்குரிய பிரகாரமாய் குருடராயிருந்தவர்க ளுக்கு ஆவிக்குரிய பார்வையையும் கொடுத்தார். திரள் கூட்டத்தினருக்காக அவர் அதிகமாய் மனதுருகினார். ஏனென்றால் அவர் கள் தங்கள் வலப்புறத்தை இடப்புறத்திலிருந்து தெரிந்து கொள்ளாத செம்மறி ஆடுகளைப் போலிருந்தனர். ஆவிக்கேற்றபடி குருடராயிருப்பவர்க ளுக்குப் பார்வையளித்தல் என்பது அவருடைய உபதேச ஊழியத்தை சித்தரிக்கும் ஒரு உவமை.

தம்முடைய ஆலோசனையளிக்கும் ஊழியத்தில் அவர் சிறைப்பட்டவர்களை விடுதலை செய்தார். அவரை அவர்கள் பின்பற்றினால், கட்டுண்டவர்களைச் சத்தியத்திற்குள் வழிநடத்தி, அவர்களைக் கட்டவிழ்த்து விடுதலை செய்வதாக வாக்குறுதியளித்தார் (யோவான் 8:30-35).

ஆவிக்குரிய ரீதியில் நீங்கள் குருடராய் குழப்பமடைந்தவராய், வலதுக்கும் இடதுக்கும் வித்தியாசம் தெரியாதவர்களாயிருந்தால், மேசியாவின் ஊழியம் உங்களுக்கானது. அவர் அனுப்பப்பட்டதன் நோக்கம் உங்கள் குருட்டு நிலையிலிருந்து உங்களுக்குப் பார்வையைக் கொடுக்க வேண்டும் என்பதற்காகவே. நீங்கள் விடுதலை பெறாமலிருந்தால், அடிமைத்தனத்துக்குட்பட்டிருந்தால், பழக்க வழக்கங்களாலும் ஆசைகளாலும், மாம்ச இச்சைகளாலும் கட்டுப்படுத்தப்பட்டவர்களாயிருந்தால், மேசியாவின் ஊழியம் உங்களுக்காகவே உள்ளது. அவர், உங்களைப் போன்ற மக்களுக்காகவே வந்தார். உங்களை அவர் விடுவிக்க விரும்புகிறார். உங்கள் வாழ்க்கை கடினமானதாயிருப்பதால் நீங்கள் காயமடைந்து நொறுங்குண்டவர்களா

யிருந்தால், இயேசு உங்களைப் போன்றவர்களுக்காகவே வந்தார் என்பதை ஞாபகத்தில் வைத்திருங்கள். நீங்கள் குணமடையவேண்டும், உங்களை முழுமையாக்க வேண்டும் என்று அவர் விரும்புகிறார்.

மேசியாவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்ட இயேசு மற்றும் ஏசாயாவின் அற்புத இரட்சிப்பை இதற்கு முன்பாகவே நீங்கள் அனுபவப்படவில்லை என்றால், இப்போது உலகத்தினுள் போய் மக்களோடு இடர்படும்போது, இயேசுவின் ஊழியம் அவர்களுக்குமானது என்பதை ஞாபகத்தில் வைத்திருங்கள். "அவர்கள் பார்வையற்றவர்களா? அவர்கள் கட்டப்பட்டவர்களா? அவர்கள் நொருங்குண்டவரா?" என்று உங்களையே கேளுங்கள். உங்கள் வாழ்க்கையில் இருந்ததுபோலவே, உங்களுக்குள் இருக்கும் கிறிஸ்து அவர்களுடைய வாழ்க்கைகளிலும் ஊழியஞ்செய்ய விரும்புகிறார். உங்கள் மூலமாக அந்த ஊழியத்தை அடைய இப்பொழுது அவர் விரும்புகிறார்.

தம்முடைய சிலுவையில் தாம் மரணமடையுமுன் தம்முடைய கடைசி சில மணி நேரத்தைத் தம்முடைய அப்போஸ்தலர்களோடு செலவிட்டபொழுது, இயேசு, அவர்களுக்குள் வாசம் செய்யப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனை அனுப்புவதாகச் சொன்னார். இதைத்தான் புதிய ஏற்பாடு, இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றுபவர்கள், அவருடைய சபை, "கிறிஸ்துவின் சரீரமாயிருக்கிறது" என்று நமக்குச் சொல்லுவதின் அர்த்தம். அவர் நமக்குள் வாசம் செய்கிறார். பார்வையற்றவர்களுக்குப் பார்வையையும், கட்டுண்டவர்களுக்கு விடுதலையையும், நொறுங்குண்ட காயமுற்ற உலக மக்களுக்கு குணமளிக்கவும் தம்மை வெளிப்படுத்தும் அதே சரீரத்தின் அவருடைய கைகளும், அவருடைய கால்களுமாய் இன்று நாம் இருக்கிறோம்.

## துன்பப்படும் இரட்சகர்

ஏசாயாவின் மேசியா பற்றிய பிரசங்கத்தின் மற்றொரு பரிமாணம், இயேசு கிறிஸ்துவின் மரணத்தை மையப்படுத்துகிறது. வேதாகமத்தில் இயேசு கிறிஸ்துவின் மரணத்தின் பொருளைக் குறிக்கும் ஏசாயாவின் மிகப்பெரிய அதிகாரம் ஐம்பத்து மூன்றாம் அதிகாரம். இந்த அழகிய அதிகாரம், "எங்கள் மூலமாய்க் கேள்விப்பட்டதை விசுவாசித்தவன் யார்? கர்த்தருடைய புயம் யாருக்கு வெளிப்பட்டது?" என்ற கேள்விகளோடு துவங்குகிறது. ஏசாயாவுக்குக் கொடுக்கப்பட்டக் கட்டளை, அவரை நம்பாத மக்களுக்கு தேவனுடைய வார்த்தையை பிரசங்கிக்க வேண்டியது என்பதை மறவாதீர்கள். அவர் தேவனுடைய வசனங்களைப் பிரசங்கித்தபொழுது, ஆவியானவர் அந்த வசனத்தின் அர்த்தத்தை வெளிப்படுத்தாவிட்டால், அவர்கள் அதைத் தெரிந்துகொள்ளவோ விசுவாசிக்கவோ முடியாது என்ற சத்தியத்தை அவர் தெளிவாகவே உணர்ந்திருந்தார்.



உண்மையிலேயே ஏசாயா, "இயேசுவின் மரணத்தின் அர்த்தத்தை யார் உண்மையாகவே தெரிந்துகொண்டவர்?" என்று கேட்கிறார். ஏசாயாவின் இந்த போதனையின் முக்கியப் பகுதி, ஆறாம் வசனத்தில் காணப்படுகிறது, "நாமெல்லாரும் ஆடுகளைப் போல் வழிதப்பித் திரிந்து அவனவன் தன் தன் வழியிலே போனோம்; கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப்பண்ணினார்." தேவன் எப்படி நம்முடைய அக்கிரமத்தை மேசியாவின் மேல் விழப்பண்ணினார்? "நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்"(5).

ஆறாவது வசனத்தில் "நாம்" பற்றிய வார்த்தைகள் இரண்டு இடத்தில் வருகின்றன. முதல் முறை நாமெல்லாரும் என்ற வார்த்தையைப் பயன்படுத்தும்போது, நாம் ஆடுகளைப் போலிருக்கிறோம் என்று சொள்லுகிறார். இதில் நீங்களும் அடங்கியிருக்கிறீர்களா? 23-ஆம் சங்கீதத்தில், "கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார்... அவர் என்னைப் புல்லுள்ள இடங்களில் மேய்த்து... கொண்டுபோய் விடுகிறார்" (1-2) என்று எழுதப்பட்டிருப்பதை நினைவுகூருங்கள். கர்த்தர் நம்முடைய மேய்ப்பர் என்று நாம் அறிக்கையிடும்போது, நாம் அவர் ஆடுகள் என்று அறிக்கையிடுகிறோம். இங்கே இந்த ஏசாயாவின் ஆழ்ந்த கருத்துடைய வசனத்தில், வேதவாக்கியங்கள் நாம் ஆடுகள் என்று அறிக்கையிட ஊக்கமளிக்கிறது. நாம் எல்லாரும் வழிதவறிப் போன ஆடுகள். இதை வேறு விதமாகச் சொன்னால், நாம் எல்லாரும் பாவிகள், நாம் எல்லாரும் நம்முடைய சொந்த வழிகளுக்குத் திரும்பிவிட்டோம்.

இரண்டாம் முறை ஏசாயா ''நம்மெல்லாருடைய'' என்ற வார்த்தையைப் பயன்படுத்தும்போது அவர் நமக்கு நற்செய்தியளிக்கிறார். ''கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப்பண்ணினார்". ஏசாயா நாமெல்லாரும் என்று சொல்லும்போது அதில் நீயும் இருக்கிறாய் என்று நம்புகிறாயா? ''நாமெல்லாரும்'', "நம்மெல்லாருடைய" இந்த இரண்டிலும் நீயிருந்தால், நீ அறிக்கையிட வேண்டியதை அறிக்கையிடுகிறாய். அதாவது உன்னுடைய வாழ்க்கைக்காக இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணத்தின் அர்த்தம் என்ன என்று செயல்முறைப்படுத்துவதாக அறிக்கையிடுகிறீர்கள். தம்முடைய குமாரனின் வாழ்க்கையை, இந்த உலகத்தினுள் பிரயாணம் செய்யும் ஒரு பாதையாக தேவன் பயன்படுத்தியபொழுது வெளிப்படுத்தப்பட்ட இரட்சிப்பின் அனுபவத்தை நீங்கள் பெற முடியும்.

அத்தியாயம் நான்கு

# எரேமியாவின் தீர்க்கதரிசனம் “தேம்பியழுதலின் ஒரு தொடர்”

பழைய ஏற்பாட்டில் அடுத்த பெரிய தீர்க்கதரிசி எரேமியா தீர்க்கதரிசி. அவர் ‘‘அழுதுகொண்டிருக்கும் தீர்க்கதரிசி’’ என்றழைக்கப்படுகிறார் ஏனென்றால் அதிக நேரம் அழுது கொண்டிருந்தவர். உண்மையில் எரேமியாவின் தீர்க்கதரிசனம் “தேம்பியழுதலின் ஒரு தொடர்”. அவருடைய புத்தகத்திற்கு சுருக்கமான வர்ணனை கொடுக்க முடியாது ஏனென்றால் மக்கள் சுருக்க வர்ணனை வடிவில் அழமாட்டார்கள். ஐம்பத்திரண்டு அதிகாரங்களில் அழுது முடித்தபின் எரேமியா தம்முடைய தீர்க்கதரிசனத்துக்குப் பின்சேர்க்கையாக “அழுகைகள்” என்ற அர்த்தமுடைய “புலம்பல்” என்ற அற்புதமானப் பாடலை எழுதினார். ஒரு மிகச் சிறந்த இலக்கிய சாதனையான இந்த அழகிய இரங்கற்பாட்டில் எரேமியா இன்னும் கொஞ்சம் அழுகிறார்.

## சில வரலாற்றுப் பார்வை

எரேமியா எதைப்பற்றி அழுகிறார்? அவர் ஏன் துக்கமாயிருக்கிறார்? அவருடைய இருதயத்தின் வேதனை என்ன? இந்தக் கேள்விகளுக்குப் பதிலளிக்க, இந்தத் தீர்க்கதரிசி அசாதாரண வாழ்க்கை வாழ்ந்து, பிரசங்கித்து “எரேமியா தீர்க்கதரிசியின் புத்தகம்” எழுதப்பட்ட வரலாற்று சந்தர்ப்பத்தை நாம் தெரிந்துகொள்ள வேண்டும்.

ஆரம்ப வசனங்களில், நாம் இந்தத் தீர்க்கதரிசி யோசியா ராஜாவின் பதின்மூன்றாம் வருஷத்தில் நம்முடைய ஊழியத்தைத் துவங்கி, சிதேக் கியா ராஜாவின் அரசாட்சி காலம் வரை அல்லது நாற்பத்தொரு வருஷங்கள் ஊழியஞ்செய்தான் என்று காண்கிறோம். நல்ல ராஜாவான யோசியா யூதாவை ஆண்ட காலத்தில் அவர் தம்முடைய ஊழியத்தை



ஆரம்பித்தார். யோசியாவின் ஆட்சிகாலத்தில் தேவாலயத்தை திரும்பக் கட்டியபோது சில வேலையாட்கள் தேவனுடைய வசனங்கள் எழுதப்பட்ட அநேக சுருள்களைக் கண்டுபிடித்தார்கள். ஆவிக்குரிய பிரகாரமாக தேவனுடைய மக்கள் அவரிடமிருந்து பரிதாபமான நிலையிலிருந்ததால் தேவனுடைய பிரமாணம் இருப்பதையே மறந்துபோனார்கள். எரேமியாவின் ஆரம்ப வசனங்களில் சொல்லப்பட்ட மற்ற ராஜாக்களெல்லாம் யோசியாவின் ஆட்சிக்குப் பின் வந்த ராஜாக்கள். இவர்கள் எருசலேமின் வீழ்ச்சியிலும் பாபிலோனிய சிறையிருப்பிலும் தொடர்புடையவர்கள்.

எருசலேமின் வீழ்ச்சி இருபது ஆண்டு காலங்களுக்கு தொடர்ந்த ஒரு கோர சம்பவம். முதல் முறை எருசலேம் வீழ்ச்சியடைந்தபோது யோயாக்கீம் ராஜாவாயிருந்தான். அவன் நேபுகாத்நேச்சாரின் சேனைகளிடம் சரணடைந்து மூன்று வருஷம் எருசலேமில் நேபுகாத் நேச்சாருக்கு ஊழியஞ்செய்தான். நேபுகாத்நேச்சார் எருசலேமைத் தோற்கடித்தபின், பாபிலோனியப் படைகள் உள்ளே நுழைந்தன. யூதர்கள் பாபிலோனியர்களுக்கு வேலைசெய்து, அவர்களுக்குக் கப்பம் செலுத்தும்படி கட்டாயப்படுத்தப்பட்டனர். எனினும் மூன்று வருஷங்களுக்குப்பின் யோயாக்கீம் கலகம் செய்தான். இதனால் நேபுகாத்நேச்சாரின் சேனைகள் இரண்டாவது முறை எருசலேமைத் தோற்கடித்தது. எருசலேம் இரண்டாம் முறையாகத் தோற்கடிக்கப் பட்டபின், சிறுபிள்ளையாயிருந்த யோயாக்கீமின் மகனான எகொனியா முறைப்படிப் பட்டணத்தோடு மறுபடியும் சரணடைந்தான். இந்தத் தடவை பாபிலோனியர்கள் ஏராளமான யூதா மக்களை பாபிலோனுக்கு கைதிகளாகக் கொண்டுசென்றனர்.

இரண்டாவது முறை எகொனியா பட்டணத்தை ஒப்படைத்தபோது, அவனுடைய சகோதரன் சிதேக்கியாவை எருசலேமுக்கு “பொம்மை ராஜா’’ வாக அதாவது, பெயரளவில் மட்டும் ஆட்சி செய்த ராஜாவாக நியமித்தனர். அவன் பதினொரு வருடங்கள் ஆட்சி செய்து, பின் பாபிலோனியருக்கு எதிராகக் கலகம் விளைவித்தான். இந்த முறை பாபிலோனிய சேனைகள் எருசலேம் நகரத்தை முற்றிலுமாக அழித்துத் தரைமட்டமாக்கினார்கள். ஒரு கல் இன்னொரு கல்லுக்கு மேல் இல்லாமல் செய்து விட்டனர். எருசலேமை பாபிலோனியர்கள் மூன்றாம் முறை தோற்கடித்தபோது, அவர்கள் மிகவும் வயது முதிர்ந்தவர்களையும், நோயாளிகளையும், பலவீனர்களையும் அழுது கொண்டிருக்கும் தீர்க்கதரிசி, எரேமியாவையும் தவிர மற்ற எல்லாரையும் பாபிலோனுக்குக் கொண்டுசென்றனர்.

யோசியாவின் ஆட்சிகாலத்தில், நடக்கப்போகிற கோர சம்பவத்தைப்பற்றி தேவன் எரேமியாவுக்கு ஒரு வெளிப்பாட்டுத் தீர்க்கதரிசனம் அளித்தார். பாபிலோனிய படையெடுப்பு வருகிறதென்றும், அந்த மக்களின் பாவங்களின் விளைவால் அவர்கள் அடிமைகளாக்கப்பட்டு தோற்கடிக்கப்படுவார்கள் என்றும் பிரசங்கிக்க ஆரம்பித்தார். இதற்கு முக்கிய காரணம் விக்கிரகாராதனை, எனினும் அவர்கள் தங்கள் விசுவாசத்தை விட்டு ஓடி தேவனுடைய வசனங்களைப் புறக்கணித்ததாலும் தேவன் அவர்களை சத்துருக்களிடம் ஒப்புவித்தார்.

முதலாவதாக எரேமியாவின் மற்றும் இதர தீர்க்கதரிசிகளின் செய்தி முக்கியமாக இதுவே: ''என் நாமம் தரிக்கப்பட்ட என் ஜனங்கள் தங்களைத் தாழ்த்தி, ஜெபம்பண்ணி, என் முகத்தைத் தேடி, தங்கள் பொல்லாத வழிகளை விட்டுத் திரும்பினால், அப்பொழுது பரலோகத்திலிருக்கிற நான் கேட்டு, அவர்கள் பாவத்தை மன்னித்து, அவர்கள் தேசத்துக்கு க்ஷேமத்தைக் கொடுப்பேன்'' (2 நாளாகமம் 7:14). எனினும் மக்கள் அவர்களுடைய பிரசங்கத்துக்குச் செவிகொடாததால், தீர்க்கதரிசனச் செய்தி மாறியது. அப்பொழுது எரேமியாவைப் போன்ற தீர்க்கதரிசிகள், ''தேவனுடைய நியாயத் தீர்ப்பு வருகிறது. அதைத் தவிர்க்க உங்களுக்கு எந்த வழியுமில்லை!'' என்று பிரசங்கித்தனர். அவர் வெறுக்கப்பட்ட ஒருவரானார். அவரது செய்தி இரட்டைச் செய்தியாயிருந்தது. செய்தியின் முதல் பகுதியில் அவர் அடிமையாக்கப்படுவதும் தோற்கடிக்கப்படுவதும் தவிர்க்கமுடியாதது என்றார். எனினும் அடுத்த பகுதி நம்பிக்கையளிப்பதாயிருந்தது. அதாவது, ''பாபிலோனுக்குள் அடிமைகளாகப் போய் எழுபது ஆண்டுகளுக்குப் பின் நீங்கள் திரும்புவீர்கள்'' என்ற செய்தி.

எரேமியா இந்த நம்பிக்கையின் செய்தியை விசுவாசித்து அழுத்தமாகப் பிரசங்கித்தார். பாபிலோனிய படைகள் எருசலேமை முற்றுகையிட ஆரம்பித்ததும், ''இது தேவனுடையத் திட்டம். இதைத் திரும்பப் பெற முடியாது. நீங்கள் அங்கே போய் நேபுகாத்நேச்சாரிடம் சரணடைவது உங்களுக்கு நன்மையாயிருக்கும். பாபிலோனுக்குப் போங்கள். ஏனெனில் எவ்வளவு சீக்கிரமாய்ப் போகிறீர்களோ அவ்வளவு சீக்கிரமாய்த் திரும்ப வருவீர்கள்'' என்று அவர் பிரசங்கித்தார்.

யூதாவின் மக்கள் சரணடைய வேண்டும் என்று எரேமியா பிரசங்கித்ததால் அவர்கள் அவரை வெறுத்தார்கள். எரேமியாவின் செய்தி ராஜதுரோகம் என்று அவர்கள் சொன்னார்கள். ஒரு வகையில் அது சரியே. அவர்கள் அவரை சகதியால் நிரம்பிய தண்ணீர் தொட்டியில் இருண்ட நிலவறையில் போட்டனர். அங்கே பட்டினியாய் எலிகளுடன் இருக்கும்படிக் கீழே விட்டுவிட்டனர்.



## குயவனும் களிமண்ணும்

எரேமியாவும் மற்ற தீர்க்கதரிசிகளில் சிலரும் தங்கள் கருத்துக்களைத் வெளிப்படுத்த எதையும் செய்யக்கூடியவர்கள். அவர்கள் கூற வேண்டியவைகளை தெளிவாக விவரித்துக் கூற முயற்சித்தனர். சில வேளைகளில் ''அடையாள செயல்'' மூலம் பிரசங்கித்தனர். எடுத்துக்காட்டாக, பதினெட்டாம் அதிகாரத்தில் ''திரும்ப வனையப்பட்ட மண்பாண்டம்'' என்றழைக்கப்பட்ட அடையாளத்தைக் கூறி எரேமியா பிரசங்கித்தார். தேவன் தம்மை ஒரு குயவன் வீட்டுக்குப் போகும்படிச் சொன்னார் என்று எரேமியா பிரசங்கித்தார். அங்கே இருந்தபோது அவர் குயவன் ஒரு மண்பாண்டத்தை வனைவதைப் பார்த்துக் கொண்டிருந்தார். குயவன் ஒரு அழகிய மண்பாண்டத்தை வனைய முயற்சித்தான், எனினும் அவன் விரும்பியபடி அது அமையவில்லை. மண்பாண்டத்தின்மீது வெறுப்படைந்து அதைத் தரையில் எறிந்து, நொறுக்கினான். அவன் களிமண்ணைத் திரும்ப வனைந்து வேறு ஒரு மண்பாண்டமாக மாற்றினான்.

இந்தப் பிரசங்கத்தை எரேமியா பிரசங்கித்தபொழுது, அவர் மக்களுக்கு, ''தெய்வீகக் குயவரான தேவன் உருவாக்கும் மண்பாண்டத்தைப் போல் நீங்கள் இருக்கிறீர்கள். தேவன் விரும்பிய வழியில் நீங்கள் உருவாகவில்லை. எனவே அவர் உங்களைத் தண்டிக்கிறார். தேவன் உங்களை பாபிலோனுக்குக் கொண்டுவந்து, திரும்பவும் வனைந்து, முற்றிலும் ஒரு புதிய பாண்டமாக திரும்பக் கொண்டு வருவார்'' என்று சொல்லுகிறார்.

இதை நம் தனிப்பட்ட வாழ்வில் செயல்படுத்த வேண்டும் என்பது தெளிவாகிறது. சில நேரங்களில் நம்முடைய வாழ்க்கை தேவனுடைய வடிவமைப்பின்படி நடைபெறுவதில்லை. எனவே, தேவன் நம்மைத் திரும்பவும் வனைகிறார். இதை எப்போதாவது நீங்கள் உணர்ந்ததுண்டா? திடீரென்று உங்கள் வாழ்க்கை அழிந்துபோகிறது. நீங்கள் களிமண் குவியலில் எறியப்பட்டு, அதன்பின் ஒரு புதிய பாண்டமாக உருவாக்கப்படுவதைப் போன்று உணருகிறீர்கள். பழைய பாண்டத்திலிருந்து புதிய பாண்டத்தை உருவாக்கும் மாற்றம் பொறுக்க முடியாத துன்பத்தைக் கொடுக்கக் கூடியதாயிருக்கலாம், எனினும் புதிய பாண்டம் உருவாக்கப்பட்டபின் அது எவ்வளவு மகிமை பொருந்தியதாக இருக்கிறது! அப்போஸ்தலர் பவுல் எழுதியதுபோல ''ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால், புதுச் சிருஷ்டியாயிருக்கிறான்'' (அப்போஸ்தலர் 5:17).

எரேமியாவின் புத்தகம் முழுவதிலும், இந்தத் தீர்க்கதரிசியின் கருத்துக்களையுடைய பிரசங்கங்களிலிருந்து, நம் வாழ்க்கையில் பின்பற்ற வேண்டிய காரியங்களைப் பார்க்கலாம். தேவன் நம்மைத் தண்டித்து

புதிய பாண்டங்களாக திரும்பவும் மாற்ற அவசியப்படும் நேரங்களும் இருக்கின்றன. நம்முடைய பாவங்களின் விளைவுகளை திரும்ப சரி செய்ய முடியாததாகவும், தழும்புகள் பழைய நிலைக்குக் கொண்டுவர முடியாதவைகளாகவும் இருக்கும்போது, எரேமியா பிரசங்கித்த மிகப்பெரிய மண்பாண்ட பிரசங்கத்தைப்போல நாம் ஒரு புதிய பாத்திரமாக மாற்றப்பட வேண்டும். எரேமியாவின் பிரசங்கத்தை மக்கள் புறக்கணித்ததுபோல, நாமும் இன்று தேவனைப் புறக்கணிக்கிறோம். அநேகர் தம் வாழ்க்கையை மாற்றவேண்டும் என்று தேவனைத் தேடி அவரிடம் கேட்காமலிருப்பது துக்ககரமான காரியமாகும்.

## நொறுக்கப்பட்ட பாத்திரம்

ஒரு நாள் தேவன் எரேமியாவிடம் ஒரு பெரிய விலையுயர்ந்த கலசத்தை வாங்கி, சில மூப்பர்களையும் ஆசாரியர்களையும் அவனோடு கூட்டிக்கொண்டு, கிழக்குவாசல் நுழைவிடத்தினருகே போகச் சொன்னார். அவன் மக்களின் கவனத்தைக் கவர்ந்ததும், இந்தக் கலசத்தை அவர் எடுத்து நடைபாதையின்மேல் துண்டு துண்டாக நொறுக்கினார்! அப்பொழுது எரேமியா, ‘‘நேபுகாத்நேச்சாரோடு போரிட்டு பாபிலோனியர்களுக்கு எதிராக கலகம் விளைவித்து அவர்களிடம் சரணடையாத நீங்கள் இந்தக் கலசத்தைப்போல் நொறுக்கப்படுவீர்கள். திரும்ப வனையப்படுவதோ திரும்ப வருவதோ முடியாது. நீங்கள் இல்லாமலாக்கப்படுவீர்கள்! நீங்கள் நிர்மூலமாக்கப்படுவீர்கள்!” என்று பிரசங்கித்தார் (எரேமியா 19:10, 11).

## மேசியாவைப் பற்றிய தீர்க்கதரிசனங்கள்

எரேமியா சிறையிருப்பைப்பற்றியும் அடுத்து நம்பிக்கையைப் பற்றியும் செய்திகளைக் கொடுக்கும்போது, சிறையிருப்பிலிருந்து திரும்பிவரும் தீர்க்கதரிசனங்களோடு மேசியாவின் வருகையைப் பற்றிய தீர்க்கதரிசனங்களையும் கலந்து பேசுகிறார். மேசியாவின் வருகை, யூதாவுக்கு மட்டுமல்ல உலக முழுவதற்கும் மேலான நம்பிக்கை.

இப்படிப்பட்ட செய்திகளில் ஒன்று இறுபத்தொன்பதாம் அதிகாரத்தில் காணப்படுகிறது. மக்கள் பாபிலோனில் சிறையிருப்பைத் துவங்கும் நிலையிலிருந்தனர். எரேமியாவிடமிருந்து ஒரு கடிதம் மூலமாக தேவன், “நீங்கள் எதிர்பார்த்திருக்கும் முடிவை உங்களுக்குக் கொடுக்கும்படிக்கு நான் உங்கள் பேரில் நினைத்திருக்கிற நினைவுகளை அறிவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; அவைகள் தீமைக்கல்ல, சமாதானக்கேதுவான நினைவுகளே. அப்பொழுது (உங்கள் சிறையிருப்பில்) நீங்கள் கூடிவந்து, என்னைத் தொழுதுகொண்டு, என்னை நோக்கி விண்ணப்பம் பண்ணுவீர்கள்; நான் உங்களுக்குச் செவிகொடுப்பேன். உங்கள் முழு இருதயத்தோடும் என்னைத் தேடினீர்களானால், என்னைத் தேடுகையில் கண்டுபிடிப்பீர்கள். நான் உங்களுக்குக் காணப்படுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். நான்



உங்கள் சிறையிருப்பைத் திருப்பி... உங்களைத் திரும்பி வரப்பண்ணுவேன்” (எரேமியா 29:11-14) என்று அவர்களுக்குச் சொன்னார்.

சிறையிருப்பிலிருந்தும் அடிமைத்தனத்திலிருந்தும் யூதாவின் மக்கள் திரும்பிவந்தபோது எரேமியா அவர்களோடு பகிர்ந்துகொண்ட உன்னதமான பிரசங்கத்தின் சுருக்கம்: “உங்களை நேசிக்கும் பிதாவாகிய தேவன் உங்களை ஆக்கினைக்குள்ளாக்குகிறார், எனினும் அது உங்கள் நன்மைக்கேயன்றி உங்களுக்குத் தீங்கு செய்வதற்கல்ல. தேவன் உங்களுக்கு நம்பிக்கையையும் ஒரு எதிர்காலத்தையும் கொடுக்க விரும்புகிறார். பாபிலோனிலிருக்கும்போது தேவனைக் கூப்பிடுங்கள். வந்து தேவனிடம் ஜெபியுங்கள். உங்கள் முழு இருதயத்தோடும் தேவனை நீங்கள் தேடுவீர்களானால், தேவன் உங்களுக்குச் செவிகொடுத்து நீங்கள் சொல்லுவதைக் கேட்பார். தேவன் உங்களைக் கண்டுபிடித்து, உங்கள் சிறையிருப்பிலிருந்து உங்களைத் திரும்பக் கொண்டு வருவார்.”

எரேமியா அவர்களுடைய சிறையிருப்பைப் பற்றி தீர்க்கதரிசனமாகச் சொன்னபொழுது, அதைக் கேட்பவர்களால் ஏற்படும் எல்லாவிதமான கடினங்களையும் துன்புறுத்தலையும் சகித்துக்கொள்ள சித்தமாயிருந்தார். எனினும் தம்முடைய செய்தியை தேவனே கொடுத்தார் என்பதை அவர் விசுவாசித்தார். அது சத்தியமாயிருந்தது. அது சத்தியமாயிருந்தது! எரேமியாவின் தீர்க்கதரிசனங்களைப்பற்றி முக்கியமான காரியம் என்னவென்றால், அவர் கூறிய தீர்க்கதரிசனங்கள் எல்லாம் நிறைவேறின.

எரேமியாவின் தீர்க்கதரிசனத்தை நீங்கள் வாசிக்கும்பொழுது, யூதாவின் மக்களின்மீது தேவனுடைய ஆக்கினையையும் நியாயத்தீர்ப்பையும் பற்றிய செய்தியைத் தேடிப் பாருங்கள். எனினும் நம்பிக்கையின் செய்தியைத் தவறவிடாதீர்கள். இந்த இரண்டு செய்திகளையும் உங்கள் வாழ்க்கையில் செயல்படுத்தி, இதை ஞாபகத்தில் வைத்திருங்கள்: தேவன் உங்களைத் தண்டிக்கும்போது, உங்களுக்காக அவரிடமிருக்கும் திட்டங்கள் அவருக்குத் தெரியும், அதாவது ஆவிக்குரிய பிரகாரமாய் உங்களைச் செழுமையாக்குவதற்காக அவர் வைத்திருக்கும் திட்டங்கள், மற்றும் உங்களுக்கு நம்பிக்கையையும் ஒரு எதிர்காலத்தையும் கொடுக்கும் திட்டங்கள் ஆகும். நீங்கள் தேவன் கொடுக்கும் தண்டனைகளைச் சரியானபடி ஏற்றுக்கொண்டு, அவருக்குக் கீழ்ப்படிந்தால், உங்கள் கடினமான நிலையிலிருந்து உங்களை இரட்சித்து உங்களை ஒரு புதிய பாண்டமாக கொண்டுவர முடியும் என்பதே முக்கியம்.

அத்தியாயம் ஐந்து

# சிறையிருப்பு குழுத் தலைவர்

யூதர்களைச் சங்கிலிகளால் கட்டி பாபிலோனுக்குக் கொண்டுபோகும் முன்பாக எரேமியா அவர்களுடைய சிறையிருப்பை தைரியமாய் எதிர்கொள்ளும்படி நம்பிக்கை தரும் வார்த்தைகளைச் சொன்னார். எருசலேம் வீழ்ச்சியடைந்தபொழுது, படுகொலையிலிருந்து தப்பியவர்கள் துக்கத்தாலும், பயங்கரத்தாலும் திகிலாலும் ஸ்தம்பித்துப் போயிருந்தனர். எரேமியாவின் இந்த அபிஷேகிக்கப்பட்ட வார்த்தைகள், சிறையிருப்பின் எழுபது ஆண்டுகள் உயிரோடிருக்க உதவி செய்யும்: ‘‘ஞானி தன் ஞானத்தைக்குறித்து மேன்மைபாராட்டவேண்டாம்; பராக்கிரமன் தன் பராக்கிரமத்தைக்குறித்து மேன்மைபாராட்ட வேண்டாம்; ஐசுவரியவான் தன் ஐசுவரியத்தைக் குறித்து மேன்மைபாராட்ட வேண்டாம்; மேன்மைபாராட்டுகிறவன் பூமியிலே கிருபையையும் நியாயத்தையும் நீதியையும் செய்கிற கர்த்தர் நான் என்று என்னை அறிந்து உணர்ந்திருக்கிறதைக் குறித்தே மேன்மை பாராட்டக்கடவன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; இவைகளின்மேல் பிரியமாயிருக்கிறேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்’’ (எரேமியா 9:23,24).

மேன்மைபாராட்டுவது என்ற சொல்லுக்கு சில மொழிபெயர்ப்புகள் “மகிமை” என்ற சொல்லை பயன்படுத்துகின்றன. சுருக்கமாக எரேமியா, “செல்வந்தனாய் நீ இருந்தால் செல்வத்தில் மகிமைகொள்ளாதே. நீ பலசாலியாயிருந்தால், உன் பலத்தில் மகிமை கொள்ளாதே. நீ நன்கு கல்வி பயின்றவனாயிருந்தால், உன் ஞானத்திலும் கல்வியறிவும், மகிமைகொள்ளாதே” என்று சொன்னார். “மகிமை” என்ற சொல், “உங்கள் எல்லா திறமைகளையும் வெளிக் கொண்டுவந்து உங்கள் வாழ்க்கையில் தேவன் யார், அவர் எப்படிப்பட்டவராயிருக்கிறார் என்பதை முற்றிலும் வெளிப்படுத்துவது” என்ற அர்த்தமுடையது.



இந்தச் சூழ்நிலையில், எரேமியா வார்த்தைகளை, முக்கியமாகத் தேவனுக்கு நேராகச் சொல்லாமல் சிறையிருப்பிலிருக்கிறவர்களுக்கே சொல்லுகிறார். எடுத்துக்காட்டாக, எரேமியா செல்வந்தனான ஒரு மனிதனிடம், “உன் வாழ்வில் உள்ள திறமைகள் யாவையும் வெளிப்படுத்த இன்னும் உன் செல்வத்தை நீ நம்பியிருக்க முடியாது. உன் செல்வத்தில் நீ நிறைவு காண முடியாது,” என்று சொல்லுகிறார். சிறைப்பிடிக்கப்பட்ட செல்வந்தர்களிடமிருந்து செல்வம் எடுக்கப்பட்டது. எருசலேம் விழுவதற்கு முன்னால், அவர்கள் தங்கள் செல்வத்தினால் மகிமையான ஸ்தானத்தில் இருந்திருப்பார்கள், ஆனால் இப்போது அல்ல. அப்படியே, எரேமியா கல்வியறிவுடையவர்களிடமும் பலவான்களிடமும், “ஞானமுள்ள மனிதனே, இப்போது உன்னைச் சங்கிலிகளால் கட்டிக் கூட்டிச் செல்லும்போது நீ அவ்வளவு புத்திசாலி என்று உணரவில்லை அல்லவா? பலசாலியே, இனிமேல் உனக்கு உன் பலத்தினால் மகிமை இல்லை. பாபிலோனில் சிறிதளவே கொடுக்கப்படும் உணவை உண்டு, அதிக சரீர பலவீனத்தை அனுபவிப்பாய், ” என்று கூறினார்.

இது வரையில் இது ஒரு எதிர்மறையான செய்தியாய் மட்டுமே காணப்படுகிறது. எனினும் இங்கே எரேமியாவின் நேர்மறையான செய்தியின் பகுதி காணப்படுகிறது. தேவன் எரேமியாவின் மூலமாக சிறைப்பட்டவர்களுக்கு, ‘‘வாழ்க்கையின் அர்த்தத்தையும் நோக்கத்தையும் உண்மையாகவே நீ புரிந்து கொண்டு, உனக்குள் இருக்கும் யாவற்றையும் நிறைவேற்றவேண்டுமென்று விரும்பினால், நான் யார், எப்படிப்பட்டவர் என்பவற்றை அறிந்து கொள்ளும் உறவோடு என்னிடம் வா,” என்று சொல்லுகிறார். எரேமியா, “பரலோகத்திலிருக்கும் தேவன் எப்படிப்பட்டவர் என்பதை பூமியில் நீ தெரிந்துகொள்ளும் பொழுது உனக்குள் மறைந்திருக்கும் முக்கியமானவற்றை நீ கண்டு கொள்ளுவாய். தம்முடைய பண்புகள் மூலம் தேவன் தம்மை வெளிப்படுத்துகிறார் என்பதை நீ தெரிந்துகொண்டால் அவர் இருக்கிறார் என்பதன் சாராம்சத்தையும் நீ இருப்பதன் சாராம்சத்தையும் தெரிந்து கொள்ள முடியும்,” என்று பிரசங்கிக்கிறார். தேவனுடைய பண்புகள் அவருடைய தனிப்பண்பை உருவாக்குகிறது.

இந்த எரேமியாவின் உன்னதப் பிரசங்கத்தில், அவர், “தேவனை அவர் எப்படி இருக்கிறார் என்று தெரிந்து கொள்ளுவதன் மூலம் தெரிந்துகொள்ள முடியும். அவருடைய தளராத அன்பினாலும் நேர்மையினாலும் பரிபூரண நீதியினாலும் நாம் அவரைத் தெரிந்துகொள்ள முடியும்,” என்று பிரசங்கித்தார். பாபிலோனில் அடிமை வேலை செய்யும்போது, இதைப்பற்றியெல்லாம் அவர்கள் சிந்தித்திருப்பார்கள். அவர்கள் செல்வத்திலோ அல்லது கல்வியறிவிலோ அல்லது சரீர பலத்திலோ திருப்தி கிடைக்காது, காண முடியாது என்பது

அவர்களுக்குத் தெரியும். இவற்றை வேறு எங்காவது கண்டுகொள்ள வேண்டும் என்பதும் அவர்களுக்குத் தெரியும். தீர்க்கதரிசியின் கூற்றுப்படி இதுவே தேவனைப்பற்றி அறிந்து கொள்ள ஒரு நல்ல நேரம். அவர்களுடைய எஜமானர்கள் அவர்களிடமிருந்து எடுத்துவிட முடியாத ஒரு காரியம் இது.

## அவர்கள் திரும்ப வருவார்கள் என்பதன் நிரூபணம்

எரேமியா 32-33 அதிகாரங்களில், எரேமியா செய்த நேர்த்தியான காரியங்களில் ஒன்றைப் பற்றி வாசிக்கிறோம். கிதேக்கியாவின் ஆட்சி காலத்தின் இறுதிப்பகுதியில் முற்றுகையின் உச்ச நிலையிருக்கும் நேரம் அது, பட்டணம் விழுகிறது. எரேமியா பிரசங்கித்ததற்காக அவரைச் சிறையிலடைத்தனர்; அந்த வேளையில் எரேமியா தேவனிடமிருந்து ஒரு வெளிப்பாட்டைப் பெற்றார். எரேமியாவின் ஒன்றுவிட்ட சகோதரன் அனாமெயேல் அவனிடம் வந்து ஆன்தோத்திலிருக்கிற தன்னுடைய நிலத்தை விலைக்கு வாங்கிக்கொள்ளும்படிக் கேட்பான் என்று தேவன் வெளிப்படுத்தினார். எருசலேம் முற்றுகையிடப்பட்டிருக்கும்போது அதன் அருகில் நிலம் வாங்க அது ஒரு நல்ல நேரமல்ல. எனினும் தேவன் எரேமியாவிடம் அந்த நிலத்தை வாங்கும்படிச் சொன்னார். அப்படியே அனாமெயேல் வந்து, ''ஆனதோத்தூரிலுள்ள என்னுடைய நிலத்தை நீர் வாங்கிக்கொள்ளும். அந்த நிலத்தை உமக்குக் கொடுக்கும்படி தேவன் என் இருதயத்தில் அதை வைத்தார்'' என்று சொன்னான்.

எரேமியா அந்த நிலத்தை வாங்கச் சம்மதித்து அதற்கான ஆயத்தங்களைச் செய்தான். அவன் சாட்சிகள், வக்கீல்கள், குமாஸ்தாக்கள் ஆகியோரைக் கொண்டு வந்து சட்டரீதியாக தான் நிலத்தை வாங்கியதை முறைப்படுத்தி, எல்லாருக்கும் தெரியப்படுத்தினார். அப்பொழுது அவர் பத்திரத்தில் கையெழுத்திட்டு, முத்திரையிட்டு அவைகளை ஒரு மண்பாண்டத்தில் வைத்தார். இதன்பின் அவர் இன்னொரு மிகப்பெரிய 'அடையாள நடவடிக்கை'யைப் பிரசங்கம் செய்தார். இதன்படி, ''பாபிலோனிய சிறையிருப்பிலிருந்து நீங்கள் திரும்பிவருவீர்கள் என்று நான் சொல்லிக்கொண்டிருந்தேன். இதை நான் உண்மையாகவே நம்புகிறேன் என்று நான் உங்களுக்குக் காட்டட்டும். எருசலேமிலிருந்து மூன்று மைல் தொலைவிலுள்ள ஒரு இடத்தில் சமீபத்தில் நான் கொஞ்சம் நிலம் வாங்கியிருக்கிறேன். நீங்கள் திரும்பி வருவீர்கள் என்று நம்பாவிட்டால் நான் அப்படிச் செய்திருப்பேன் என்று நீங்கள் நினைக்கிறீர்களா? தேவன் இஸ்ரவேலரின் பாத்தியதைகளைத் திரும்பக் கொடுப்பார்!'' என்று அவர் பிரசங்கித்தார். இந்த விசுவாசத்தின் உயர்ந்த நடவடிக்கையைப் பெரிதாக்கி விளக்கிய எரேமியாவின் பேச்சு சாதுரியமும் வல்லமையுமுள்ள பிரசங்கத்தை நிச்சயமாய் வாசியுங்கள் (அதிகாரம் 32).



நம்பிக்கை பற்றிய இந்த அழகிய பிரசங்கம் முப்பத்திரண்டாம் அதிகாரத்தில் துவங்குகிறது. இந்த மிகப் பரிச்சயமான வார்த்தைகளைப் பிரசங்கித்த வரலாற்று சந்தர்ப்பம், ''என்னை நோக்கிக் கூப்பிடு, அப்பொழுது நான் உனக்கு உத்தரவு கொடுத்து, நீ அறியாததும் உனக்கு எட்டாததுமான பெரிய காரியங்களை உனக்கு அறிவிப்பேன்'' (எரேமியா 33:3). நீ எப்பொழுதாவது தேவனை நோக்கி கூப்பிட்டிருக்கிறாயா? நாம் எல்லாரும் அவரைக் கூப்பிடவேண்டும் என்று அவர் விரும்புகிறார். ஏனென்றால் நாம் ஒருபொழுதும் கண்டிராத மிகப்பெரிய வல்லமையான காரியங்களை நமக்குக் காட்ட அவர் விரும்புகிறார்.

எரேமியாவின் பிரசங்கம் முழுவதும் அழிவும் துக்கமும் பற்றியதல்ல. அவருடைய பிரசங்கங்களின் மூலம் தேவனுடைய மக்களுக்கு அதிக நம்பிக்கை கிடைத்தது. எருசலேம் விழுந்து அவர்கள் பாபிலோனிய சிறையிருப்புக்குள் கொண்டு சென்றபோது யூதா மக்களுக்கு இருந்த ஒரே நம்பிக்கை அதுவே.

## இருதயத்தின் காரியங்கள்

எரேமியாவின் மற்றப் பிரசங்கங்களின் சிலவற்றை சுருக்கமாகப் பார்க்கும்போது, அவர் அவற்றை நாம் நிகழ்ச்சிகளின் காலக்கிரம வரிசையில் ஆய்வு செய்யவில்லை என்பதை தெரிந்துகொள்வோம். அவரும் அவரைப்பற்றி எழுதிய ''பாருக்'' என்பவரும் எரேமியா பிரசங்கித்தபோது உடனே எழுத்துப்பதிவு செய்யவில்லை, அநேக வருடங்களுக்குப் பின் அவர் சிறையிலிருக்கும்போது அவற்றை ஞாபகப்படுத்தி எழுதினார்.

எரேமியாவின் மிகப்பெரிய பிரசங்கங்களின் சுருக்கங்களில் ஒன்று, இந்தப் புத்தகத்தின் முற்பகுதியில் காணப்படுகிறது. எரேமியாவின் மூலமாகக் கர்த்தர், ''என் ஜனங்கள் இரண்டு தீமைகளைச் செய்தார்கள்; ஜீவத்தண்ணீர் ஊற்றாகிய என்னை விட்டுவிட்டார்கள்; தண்ணீர் நிற்காத தொட்டிகளாகிய வெடிப்புள்ள தொட்டிகளைத் தங்களுக்கு வெட்டிக் கொண்டார்கள்,'' (எரேமியா 2:13) என்று கூறினார்.

மக்கள் தேவனிடமிருந்தும், அவருடைய வசனங்களிலிருந்து வரும் ஞானத்திலிருந்து தூரமாய் விலகிச் சென்றார்கள். எரேமியா சொல்லியபடி அவர்கள் தேவனுடைய பிரமாணங்களை எழுதியவர்கள் பொய்யர்கள் என்று நம்பினார்கள். எரேமியா தீர்க்கதரிசி, ''வேதபாரகரின் கள்ள எழுத்தாணி அதை அபத்தமாக்குகிறது,'' (எரேமியா 8:8) என்று எழுதுகிறார். தேவனுடைய வசனங்கள் நம்பக்கூடியதல்ல என்பதை மக்கள் நம்பும்படிச் செய்தால், அப்பொழுது நீங்கள் எதை விசுவாசிப்பீர்கள்? உங்களுக்கிருப்பதெல்லாம் மனித ஞானமும் தத்துவமும் மட்டுமே. தேவனுடைய வசனங்களில் காணப்படாத

ஞானத்தை ஒப்பிடும்போது அவர்களில் என்ன ஞானம் இருக்கிறது என்று எரேமியா கேட்கிறார்.

## மக்கள் மாற்றமடைய முடியுமா?

நீங்கள் மாற வேண்டும் என்றோ, நன்றாகச் செயல்படக் கடினமாக முயற்சிக்க வேண்டுமென்றோ வேதாகமம் ஒருபொழுதும் சொல்லவில்லை என்ற உண்மை உங்களுக்குத் தெரிகிறதா? வேதாகமம் கீழ்க்கண்டவற்றைப் பற்றியதே என்று நினைக்கும் திரளான மக்களைப் பார்த்து நான் வியப்படைகிறேன்: அதாவது உன்னால் முடிந்தவரை முயற்சிசெய், இன்னும் நன்றாகச் செய்ய அதிகமாய் முயற்சி செய் என்பதே. வேதவாக்கியங்கள் அப்படிச் செய்ய வேண்டும் என்று சொல்லவில்லை. நம்மை நாம் மாற்றிக்கொள்ள முயற்சி செய்வதைப்பற்றி உண்மையில் எரேமியா வேடிக்கையாய்ப் பேசுகிறார். அவர், "நீ உன் வழியை மாற்றி மாற்றி இவ்வளவாய் விலகிப்போகிறது என்ன?" (எரேமியா 2:36). சிவிங்கித் தன் புள்ளிகளையும் எத்தியோப்பியன் தன் தோலையும் மாற்றும்போது, தீமையைச் செய்ய பழகிபோன நீங்கள் நன்மை செய்யத் துடங்குவீர்கள்.

நம்மை நாமே மாற்றிக்கொள்ள முடியாது. நாம், "உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்'' (ரோமர் 12:2) என்று ஊக்கமளிக்கப்படுகிறோம். நாம் மறுபடியும் பிறக்க வேண்டும் என்று இயேசு சொல்லுகிறார். நாம் மறுரூபமடையும்போது அல்லது மறுபடியும் பிறக்கும்போது அது நமக்கு ஒரு கடினமாக உழைக்காத ஒரு அனுபவமாயிருக்கிறது. அது நாம் மாறவேண்டும் என்று சொல்லுகிற, அல்லது இன்னும் நன்றாகச் செயல்பட வேண்டுமென்று முயற்சிப்பது அதே காரியம் அல்ல.

## நம்முடைய இருதயங்களைத் தெரிந்தவர் யார்?

மனித இருதயத்தைப்பற்றி எரேமியா இதைச் சொல்லுகிறார், ''எல்லாவற்றைப் பார்க்கிலும் இருதயமே திருக்குள்ளதும் மகா கேடுள்ளதாயுமிருக்கிறது, அதை அறியத்தக்கவன் யார்?'' (எரேமியா 17:9). இதற்கு பதில், நிச்சயமாக, தேவன் மட்டுமே நமது இருதயங்களைத் தெரிந்தவர். "கர்த்தராகிய நானே ஒவ்வொருவனுக்கும், அவனவன் வழிகளுக்கும் செய்கைகளின் பலன்களுக்கும் தக்கதைக் கொடுக்கும் படிக்கும், இருதயத்தை ஆராய்கிறவரும் உள்ளிந்திரியங்களைச் சோதித்தறிகிறவருமாயிருக்கிறேன்'' (10).

தேவன் உங்கள் இருதயங்களை அறிந்திருக்கிறார். நீ உன் குடும்பத்தையும் நண்பர்களையும், ஏன் உன்னையுங்கூட ஏமாற்றியிரு க்கலாம், ஆனால் தேவனை உன்னால் ஏமாற்ற முடியாது. அவருக்கு



உன் இருதயத்தைத் தெரியும் அதைப் புதிதாக்க விரும்புகிறார். ஞானமுள்ள தாவீது ஜெபித்ததுபோல ஜெபியுங்கள்," தேவனே, என்னை ஆராய்ந்து, என் இருதயத்தை அறிந்துகொள்ளும்; என்னைச் சோதித்து என் சிந்தனைகளை அறிந்துகொள்ளும். வேதனை உண்டாக்கும் வழி என்னிடத்தில் உண்டோ என்று பார்த்து, நித்திய வழியிலே என்னை நடத்தும்'' (சங்கீதம் 139:23-24).

எரேமியா புத்தகம் முழுவதிலுமுள்ள, ஆழ்ந்த கருத்துக்களை யுடைய பிரசங்கங்களை நம்முடைய வாழ்க்கையில் செயல்படுத்த, தேடிப்பார்க்க வேண்டும். நம்மைத் தண்டித்து புதிய பாத்திரங்களாக வனைய வேண்டிய நேரங்கள் தேவனுக்கிருந்தன. நம்முடைய பாவங்களின் விளைவுகள் மாற்ற முடியாததும் தழும்புகள் முன்நிலைக்கு மாற்றக் கூடாததுமாயிருக்கும்பொழுது, தேவன் எரேமியாவை குயவன் வீட்டிற்கு அனுப்பி காணச் செய்தது போல நாம் ஒரு புதிய பாண்டமாக உருவாக்கப்படுவது அவசியம்.

அத்தியாயம் ஆறு

# தேவனுடைய சோகமான செய்தி

எரேமியாவிற்கு இரண்டு கூடை அத்திப் பழங்களின் தரிசனம் உண்டாயிற்று (அதிகாரம் 34). சில அத்திப்பழங்கள் புதிதானவைகளாகவும் பழுத்தவைகளாகவுமிருந்தன, சில கெட்டுப்போய் பூசணம்பிடித்து சாப்பிடக்கூடாத அளவிற்கு அழுகிப்போயிருந்தன. கர்த்தர் எரேமியாவிடம், ''நல்ல அத்திப்பழங்கள் பாபிலோனுக்கு நாடுகடத்தப்பட்டவர்களைக் குறிப்பிடுகிறது. அவர்களுடைய நன்மைக்காகவே நான் அவர்களை நாட்டைவிட்டு வெளியேற்றினேன். அவர்கள் நன்றாகப் பராமரிக்கப்பட்டு திரும்பவும் இங்கே அவர்களைக் கொண்டு வருவேன். நான் அவர்களுக்கு உதவி செய்வேன், அவர்களைக் காயப்படுத்த மாட்டேன். அவர்களை நடுவேன், பிடுங்க மாட்டேன். எனக்குப் பதிலளிக்கும் இருதயங்களை நான் அவர்களுக்குக் கொடுப்பேன். அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள். நான் அவர்கள் தேவனாயிருப்பேன்.

''எனினும் அழுகிய அத்திப்பழங்கள் யூதாவின் ராஜாவாகிய சிதேக்கியாவையும், அவனுடைய அதிகாரிகளையும், இந்த நாட்டில் எருசலேமை விட்டுப்போன மற்ற எல்லாரையும் குறிப்பிடுகிறது. எகிப்தில் வசிப்பவர்களையுங்கூட குறிப்பிடுகிறது. உண்ண முடியாத அழுகிய அத்திப் பழங்களைப்போல நான் அவர்களை நடத்துவேன். அவர்கள் அழிந்து போகுமட்டும் சங்காரத்தையும், பஞ்சத்தையும், நோயையும், அவர்கள் மத்தியில் அனுப்புவேன்'' என்று சொன்னார்.

இந்தச் செய்தியை எரேமியா தொடர்ந்து பிரசங்கித்தார். பாபிலோனிய வல்லரசுக்கு எருசலேம் விழும்போது அங்கே இரண்டு வகையான மக்கள் இருந்தார்கள் - பாபிலோனிய சிறையிருப்பு தேவனுடைய ஆக்கினைத்தீர்ப்பு என்று உணர்ந்துகொண்டு, பாபிலோனுக்குப் போய், தேவனுடைய சீராக்கும் முறையை



ஏற்றுக்கொண்டு மனந்திரும்பி னவர்கள். சிதேக்கியாவைப்போல இது தேவனுடைய சித்தம் என்று தெரிந்துகொள்ள மறுத்து, எரேமியாவின் பிரசங்கத்தை புறக்கணித்து பாபிலோனியர்களுக்கு எதிராகக் கலகம் செய்தவர்கள். மனித நேயத்துக்கு எதிரான விவாதம் எரேமியாவின் முந்தைய பிரசங்கங்களில் சொல்லப்பட்ட நொறுக்கப்பட்ட கலசத்தைப் போலவும், அழுகிய அத்திப்பழங்களைப் போலவும் அவர்கள் ஆனார்கள்.

மனித நேயத்திற்கு எதிரான வாதங்கள் இன்று ''மனித நேயம்'' என்றழைக்கப்படுவதை எரேமியாவின் சில பிரசங்கங்கள் எதிர்த்தன. சில கொள்கைகள் தோன்றி நம்முடைய காலத்தில் அதிகப் புகழ் பெற்றதாகிவிடுகின்றன. நாம் அவைகளை இப்பொழுது தோன்றியவை என்றும் இக்காலத்தைச் சேர்ந்தவை என்றும் நினைக்கிறோம். எனினும் அவைகள் உண்மையில் புதியவை அல்ல. அவைகள் பழைய கருத்துக் களே மீண்டும் தலைதூக்குவதாகும். மனிதனுக்குத் தேவையானது மனிதனே என்று கூறும் போதனை, பழைய வரலாற்றில் காணப்படுகின்றன. "நானே என் விதியை நிர்ணயிக்கிற எஜமானும், என் ஆத்துமாவுக்கு கப்பல் தலைவனுமாயிருக்கிறேன்'' என்பதே மனித நேயத்தை பின்தொடருபவர்களின் மந்திரமாயிருக்கிறது. எனினும், மோசே போன்ற மனிதர்களின் வாழ்க்கைகளை ஆராயும்போது இதற்கு எதிரான கொள்கையை நாம் காண்கிறோம். "நான் அல்ல, எனினும் தேவனே, தேவன் என்னோடிருக்கிறார். என்னால் முடியாது, அவரால் முடியும், அவர் என்னோடிருக்கிறார்,'' என்பவைகளைப் போன்ற ஆவிக்குரிய பூரணத்துவம் அவர்கள் வாழ்க்கையில் வெளிப்படுவதை நாம் காண்கிறோம்.

### நமக்குத் தேவன் அவசியமா?

பத்தாம் அதிகாரத்தில் இதைப் போன்ற பிரசங்கங்களில் ஒன்றை அவர் பிரசங்கிக்கும்போது, எரேமியா மனித நேய சிந்தனைக்கு எதிராக வாதாடுகிறார், ''கர்த்தாவே, மனுஷனுடைய வழி அவனாலே ஆகிறதல்லவென்றும், தன்னை நடத்துவது நடக்கிறவனாலே ஆகிறதல்லவென்றும் அறிவேன்'' (23). இதையும் சிந்தித்துப் பாருங்கள், ''மனுஷன்மேல் நம்பிக்கைவைத்து, மாம்சமானதைத் தன் புயபலமாக்கிக்கொண்டு, கர்த்தரை விட்டு விலகுகிற இருதயமுள்ள மனுஷன் சபிக்கப்பட்டவன்'' (17:5). இந்தச் சத்தியத்தின் நேர்மறையான விளைவை எரேமியா நமக்குக் கொடுக்கிறார், "கர்த்தர் மேல் நம்பிக்கை வைத்து, கர்த்தரைத் தன் நம்பிக்கையாகக் கொண்டிருக்கிற மனுஷன் பாக்கியவான்'' (17:7).

அநேக மக்கள் தங்களுக்கு ஒரு மேய்ப்பன் அவசியமில்லை என்று நம்புகிறார்கள். அவர்களால் தீர்வுகாண முடியாத பிரச்சினை ஒரு

பொழுதும் இருந்ததில்லை. அவர்களுக்குத் தேவையானது மனிதனின் புத்தி சாதுர்யமும், அறிவும், தாலந்துகளும் மட்டுமே என்று விசுவாசிக்கிறார்கள். எனினும் வேதவாக்கியங்கள் எப்போதும், "இல்லை, இவைகள் மட்டும் உனக்குப் போதாது. உனக்கு ஒரு மேய்ப்பன் தேவை. உனக்குத் தேவனிடமிருந்து ஞானமும், தேவனிடமிருந்து பெறும் ஞானத்தைச் செயல்படுத்த அவரிடமிருந்து சக்திவாய்ந்த வல்லமையும் (கிருபை) வேண்டும்'' (யோவான் 1:5; 2 கொரிந்தியர் 9:8 என்று கூறுகின்றன. இதுவே பழைய புதிய ஏற்பாடுகளிலுள்ள எல்லா தீர்க்கதரிசிகளின் முரண்பாடற்ற தத்துவமும் போதனையாயுமிருக்கிறது.

## வசனத்துக்காக ஆயத்தமாயிருப்பது

நான்காவது அதிகாரத்தில் மற்றொரு பெரிய பிரசங்கம் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. இது யூதாவின் மதத்தைவிட்டு விலகிச் சென்று பாபிலோனிய சிறையிருப்பைக் கொண்டு வந்த பாவத்துக்குப் பரிகாரம் கூறுகிறது. "யூதா மனுஷரோடும், எருசலேமியரோடும் கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: நீங்கள் முள்ளுகளுக்குள்ளே விதையாதிருங்கள், உங்கள் தரிசு நிலத்தைப் பண்படுத்துங்கள். யூதா மனுஷரே, எருசலேமின் குடிகளே, உங்கள் கிரியைகளுடைய பொல்லாப்பினிமித்தம் என் உக்கிரம் அக்கினியைப்போல எழும்பி, அவிப்பார் இல்லாமல் எரியாதபடிக்கு நீங்கள் கர்த்தருக்கென்று உங்களை விருத்தசேதனம் பண்ணி, உங்கள் இருதயத்தின் நுனித்தோலை நீக்கிப் போடுங்கள்'' (3, 4).

எரேமியாவின் இந்த அழகிய பிரசங்கம், "விதைப்பவனின் உவமை'' என்று நான்கு சுவிசேஷங்களிலும் காணப்படும் நம்முடைய ஆண்டவரின் பிரசங்கத்தைப் போலிருக்கிறது. வேத வசனங்கள் பிரசங்கிக்கப்படும்போது அது ஒரு உழவன் விதைகளை விதைப்பது போலிருக்கிறது என்று இயேசு கூறினார். ஒரு உழவன் விதைகளை விதைக்கும்போது அது நான்கு வகையான நிலத்தில் விழுகின்றன.

நான்கு வகை நிலங்கள், வேத வசனம் போதிக்கப்பட்டு அது பிரசங்கிக்கப்படும்போது பெறும் நான்கு வித்தியாசமான பதில்களைச் சித்தரிக்கின்றன: சிலவேளைகளில் வசனம் கேட்பவரின் மனதை ஊடுருவிச் செல்லவில்லை; சிலவேளைகளில் கேட்பவரின் சித்தத்தைத் துளைத்துச் செல்லவில்லை; சிலவேளைகளில் மனதை ஊடுருவிச் சென்றாலும், வளரும்போது உலகக் கவலைகள், செல்வம், இதர கவர்ச்சிகள் போன்ற களைகளால் நெருக்கப்படுகிறது; சிலவேளைகளில் வெவ்வேறு அளவுகளில் கனிகொடுக்கின்றன.

இயேசு தமது அற்புதமான உவமையை எரேமியாவின் பிரசங்கங்களின் அடிப்படையில் அமைத்திருக்கக்கூடும். மக்களிடம்



தீர்க்கதரிசி, "உன்னுடைய வாழ்க்கை உழுதுபோடப்படாத நிலத்தைப் போலிருக்கிறது. நீண்ட நாட்களாக எந்த விதையும் அங்கே விதைக்கப்படவில்லை. மக்கள் தேவனுடைய வார்த்தையை மறந்து விட்டார்கள். மக்களுடைய எல்லாப் பிரச்சினைகளும், வாழ்க்கையின் சூழ்நிலைகளும் தேவனுடைய வசனத்தை (விதைகளை) வாழ்க்கைகளில் ஏற்றுக் கொள்ள அவர்களை ஆயத்தப்படுத்துகின்றன'' என்று சொன்னார்.

எரேமியாவிடம் சொல்ல எந்த நல்ல செய்தியும் இல்லாமலிருந்ததால் மக்கள் அவரைப் பரிகசித்தனர். பேராபத்து வரப் போவதைப் பற்றி கூறியதால் அவருடைய செய்தி அவர்களுக்குப் பிடிக்கவில்லை. அவர் சொன்ன எல்லாம் - துக்கமோ, தண்டனையோ, நம்பிக்கையுங்கூட அப்படியே நடைபெற்றது. எரேமியாவின் பிரசங்கம் அவர் போதனைகளைக் கேட்ட யூதர்களுக்கு நம்பிக்கை அளித்தது. மேசியா பற்றிய தீர்க்கதரிசனங்கள் சிறையிருப்பிலிருந்து அவர்கள் திரும்பிவருவார்கள் என்ற அவருடைய வாக்குத்தத்தத்தோடு சேர்ந்து, இன்றைக்கும் நமக்குள்ள ஆசீர்வதிக்கப்பட்ட நம்பிக்கையைக் குறிப்பிடுகிறது.

## எரேமியாவின் பாரம்

அவருடைய செய்தி மனதை உருக்குகிறதாயிருக்கிறது, ''என் குடல்கள், என் குடல்களே நோகிறது; என் உள்ளம் வேதனைப்படுகிறது, என் இருதயம் என்னில் கதறுகிறது; நான் பேசாமல் அமர்ந்திருக்கக் கூடாது; என் ஆத்துமாவே, எக்காளத்தின் சத்தத்தையும், யுத்தத்தின் ஆர்ப்பரிப்பையும் கேட்டாயே. நாசத்திற்குமேல் நாசம் வருகிறதாகக் கூறப்படுகிறது; தேசமெல்லாம் பாழாகிறது'' (எரேமியா 4:19-20). பாபிலோன் தோல்வியைப் பற்றிய அவருடைய தீர்க்கதரிசன வெளிப்படுத்தல்களில், எரேமியாவால் உண்மையிலேயே பாபிலோனிய சேனைகளின் சத்தங்களையும் யூதா மக்களின் வீரிடும் சத்தங்களையும் கேட்க முடிந்தது. இந்த நிகழ்ச்சிகளின் பயங்கரங்களைத் தொடர்ந்து அனுபவிக்கிறதால் அவர், "நான் எதுவரைக்கும் கொடியைக் கண்டு, எக்காளத்தின் சத்தத்தைக் கேட்பேன்'' (21) என்கிறார். கர்த்தர், "என் ஜனங்களோ மதியற்றவர்கள், என்னை அவர்கள் அறியாதிருக்கிறார்கள்; அவர்கள் பைத்தியமுள்ள பிள்ளைகள், அவர்களுக்கு உணர்வே இல்லை; பொல்லாப்புச் செய்ய அவர்கள் அறிவாளிகள், நன்மை செய்யவோ அவர்கள் அறிவில்லாதவர்கள்'' (22) என்று சொல்லுகிறார்.

எரேமியாவின் பிரசங்கத்தை நம்முடைய தலைமுறையினருக்கும் போதிக்கலாம். பெரும் சேதம் உண்டாக்கும் ஆயுதங்களைத் தயாரிப்பதில் இன்று நாம் வல்லுநர்களாயிருக்கிறோம், எனினும் அது

சரியானதா என்பதும் நமக்குத் தெரியுமா? வன்முறையும் சட்ட விரோதமான குற்றங்களைச் செய்தலும் நம்முடைய உலகில் பெருவாரியாகப் பரவுகிற தொற்றுநோயாக இருக்கிறது. பயங்கரமான அணு ஆயுதங்கள் ரசாயன, நுண்கிருமி பரப்பும், ஆயுதங்கள் ஆகியவற்றைக் கண்டுபிடிக்க நம்மிடம் அறிவாளிகள் உண்டு, எனினும் சரியானதைச் செய்வதற்கான புத்தி நமக்கு இல்லாததுபோல தோன்றுகிறது. சரியான காரியம் எது என்று கூட நமக்குத் தெரியவில்லை.

### எரேமியாவின் நீடிய பொறுமை

எரேமியா இந்தப் புத்தகத்தின் மூலக் கருத்தை பாதாள இருட்டறையில் இருந்த தம்முடைய விசுவாசமுள்ள 'பாருக்கு' என்ற நகல் எழுதுபவரிடம் எழுதச் சொன்னார். தாம் பிரசங்கித்த பிரசங்கங்களை, தோற்சுருளை எழுதி முடித்து, பரிசுத்த நாளின் உபவாசத்தின்போது அதை மக்களுக்கு வாசிக்கும்படிக் கேட்டுக் கொண்டார். இது மக்களிடம் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது, கடைசியில் தோற்சுருள் முழுவதும் ராஜாவுக்கு வாசிக்கப்பட்டது. தோற்சுருள் ராஜாவுக்கு வாசிக்கப்பட்டபோது, அறையின் ஒரு பகுதி யில் அனல் வருவதற்காக தீ எரிந்துகொண்டிருந்தது. ராஜாவுக்கு சுருளின் ஒவ்வொரு பகுதியும் வாசிக்கப்பட்டபின், கூர்மையான ஒரு கத்தியினால் அந்தப் பகுதியை சுருளிலிருந்து வெட்டி, முழுச் சுருளும் எரிந்துபோகுமளவிற்கு தீயினுள் எறிந்தான்.

எரேமியாவிடம் இதைப்பற்றி சொன்னதும், அவர் பாருக்கைக் கூப்பிட்டனுப்பி, தான் மறுபடியும் தம் புத்தகத்தை எழுதப் போவதால் தம்முடைய நகல் எழுதுபவரிடம் ஒரு பெரிய தோற்சுருளை வாங்கும்படிச் சொன்னார். முதல் சுருளில் எழுதப்படாத இன்னும் அநேகப் பிரசங்கங்கள் அவர் ஞாபகத்திலிருந்தன. இப்போது நாம் மேற்பார்வையிடும் ஐம்பத்திரண்டு அதிகாரங்களை அவர் எழுதுவதற்குச் சொன்னார். இந்த மிகப்பெரிய தீர்க்கதரிசிக்கு நீடிய பொறுமை இல்லாமலிருந்தால் அவர் எழுதிய புத்தகம் நமக்குக் கிடைத்திருக்காது (அதிகாரம் 36).



## அத்தியாயம் ஏழு

# எரேமியாவின் புலம்பல் புத்தகம்

### "எப்படியிருந்தாலும் தேவன் உன்மேல் அன்பாயிருக்கிறார்"

எரேமியாவின் புலம்பல் புத்தகம் எரேமியாவின் புத்தகத்தின் ஒரு தொடர்ச்சியாகும். வரப்போகும் பாபிலோனிய சிறையிருப்பைப்பற்றிய தீர்க்கதரிசன வெளிப்பாட்டை தேவன் எரேமியாவுக்குக் கொடுப்பதால் அவர் அழுகிறார். பெரும்பாலான மக்கள் சிறைக் கைதிகளாகக் கொண்டுபோகப்பட்ட பின்பும், தீர்க்கதரிசி யூதாவில் இன்னும் இருப்பதோடு எரேமியாவின் புத்தகம் முடிவடைகிறது. அவர் எகிப்துக்குக் குடிபுகுந்ததுபோல் தோன்றுகிறது, பாரம்பரியப்படி அவர் அங்கே இரத்தசாட்சியாய் மரித்தார் என்று சொல்லப்படுகிறது. மற்ற வேதபண்டிதர்கள் எரேமியா, தாம் அதிகமாக நேசித்த யூதா மக்களுக்குப் பிரசங்கிக்க பாபிலோன் நாட்டுக்குப் போனாரென்றும், சிலர் அவர் தம்முடைய கடைசி நாட்களை யூதா நாட்டில் செலவிட்டார் என்றும் நினைக்கின்றனர்.

எரேமியாவின் புலம்பல் புத்தகம் சரியான பெயரைக் கொண்டுள்ளது. ''அழுதுகொண்டிருக்கும் தீர்க்கதரிசி'' இன்னும் அதிகமாய் அழுகிறார். ஏனெனில் அந்தத் தேசத்தைத் தோற்கடித்தவர் கள் அவர் நேசித்த மக்களில் பலரை படுகொலை செய்தனர். படுகொலை செய்யப்படாதவர்கள் சிறைக்கைதிகளாகவும் அடிமைகளாகவும் தூர தேசத்துக்குக் கொண்டுபோகப்பட்டனர்.

எசேக்கியேல், தானியேல் போன்ற மற்ற தீர்க்கதரிசிகளாலும் கூறப்பட்ட பிரச்சினைகளில் ஒன்றைப் பற்றி புலம்பலிலும் காண்கிறோம். அதாவது யூதர்கள் தேவாலயத்தின் அருகில் இருக்க முடியாது என்று வருந்தினர். யூதர்கள் தேவாலயம் தேவனுடைய பிரசன்னத்தினால்

நிறைந்துள்ளது, அவர் அங்கு வாசம் செய்கிறார் என விசுவாசித்தனர். உண்மையில் அவருடைய தெய்வீகப் பிரசன்னம் எருசலேம் தேவாலயத்தின் மகா பரிசுத்த ஸ்தலத்தில் இருந்தது. இந்த பக்தி நிறைந்த தீர்க்கதரிசிகளுக்கு தேவாலயம் தேவன் தங்கியிருக்கும் இடம் என்பதில் ஒரு அர்த்தம் இருக்கிறது. இதனாலேயே தானியேல் தீர்க்கதரிசி ஜெபிக்கும்போது எருசலேமுக்கு நேராகப் பார்த்து ஜெபித்தார். பாபிலோனில் வாசம் செய்யும் தேவனுடைய மக்களுக்கு தேவன் இப்போது எங்கேயிருக்கிறார்? எருசலேம் அவர்களுக்குரிய தேவனுடைய நகரம் என்பதால் அவர்கள் தங்கள் பரிசுத்த நகரத்திலிருந்து, பரிசுத்தராகிய தேவனிடமிருந்தும் பிரிக்கப்பட்டதாக உணர்ந்தனர்.

## எரேமியாவின் மலைக்குகை

ஒரு மலையின் மேலிருந்த குகையில் உட்கார்ந்து கொண்டு எரேமியா புலம்பல் புத்தகத்தை எழுதினார். ''கொல்கதா'' என்றழைக்கப்படும் மலையில் இன்றும் ''எரேமியாவின் குகை'' என்னப்பட்ட இடம் இருக்கிறது. தேவனுடைய தெய்வீக கிருபையின்படி இயேசு கிறிஸ்து உலகத்தின் பாவங்களுக்காக மரித்த கல்வாரி மலையில் எரேமியாவின் குகை இருக்கிறது.

## புலம்பலின் இலக்கிய வடிவம்

புலம்பல் ஒரு அழகான இலக்கியமாகவும் உள்ளது. அதனுடைய ஐந்து அதிகாரங்களும், ஐந்து பாடல்களை அல்லது இரங்கற்பா உடைய மிகச்சிறந்த கவிதைப் படைப்பாகும். ஒவ்வொரு அதிகாரமும் ஒரு தனிக் கவிதையாயிருக்கிறது.

புலம்பலில் காணும் ஏவப்பட்ட செய்தி, பாபிலோனின் தோல்வியையும் சிறையிருப்பையும் மையமாகக் கொண்டது. இந்தச் செய்தி விளக்கமாகவும் மிகுந்த உணர்ச்சியோடும் விவரிக்கப் பட்டிருக்கிறது, "எருசலேம் குமாரத்தியே, நான் உனக்குச் சாட்சியாக என்னத்தைச் சொல்லுவேன்? உன்னை எதற்கு ஒப்பிடுவேன்? சீயோன் குமாரத்தியாகிய கன்னிகையே, நான் உன்னைத் தேற்றும்படிக்கு உன்னை எதற்கு நிகர் சொல்வேன்? உன் காயம் சமுத்திரத்தைப்போல் பெரிதா யிருக்கிறதே, உன்னைக் குணமாக்குகிறவன் யார்?" (புலம்பல் 2:13). எரேமியா, பாபிலோன் வல்லரசு போன்ற ஒரு வல்லரசால் ஒரு பட்டணம் தோற்கடிக்கப்படும்போது அது எவ்வளவு பயங்கரமாக இருக்கும் என்று தெளிவாகக் கூறுகிறார்.

இந்தப் புத்தகம் துக்கத்தைப்பற்றியும் நம்பிக்கையின்மை பற்றியுமே கூறப் போகிறது என்று நாம் நினைக்கும் அந்த வேளையில்,



எரேமியா நம்பிக்கையின் அழகிய தீர்க்கதரிசனத்தோடு நம்மை வியப்பில் ஆழ்த்துகிறார். துன்புறுத்தப்படுதலின் உச்ச நிலையில் யோபு இதே காரியத்தைச் செய்தார் என்பது உங்களுக்கு ஞாபகமிருக்கக் கூடும் (யோபு 19:25, 26). தம்முடைய புலம்பலின் மூன்றாம் அதிகாரத்தில், சற்றும் நம்பிக்கையில்லாத நிலையில், எரேமியா அற்புதமான ஒரு தீர்க்கதரிசன வெளிப்பாட்டைப் பெற்றுக்கொண்டார், ''நாம் நிர்மூலமாகாதிருக்கிறது கர்த்தருடைய கிருபையே, அவருடைய இரக்கங்களுக்கு முடிவில்லை. அவைகள் காலைதோறும் புதியவைகள்; உமது உண்மை பெரிதாயிருக்கிறது. கர்த்தர் என் பங்கு என்று என் ஆத்துமா சொல்லும்; ஆகையால் அவரிடத்தில் நம்பிக்கை கொண்டிருப்பேன். தமக்குக் காத்திருக்கிறவர்களுக்கும் தம்மைத் தேடுகிற ஆத்துமாவுக்கும் கர்த்தர் நல்லவர். கர்த்தருடைய இரட்சிப்புக்கு நம்பிக்கையோடு காத்திருக்கிறது நல்லது" (22-26) என்று காண்கிறோம்.

எரேமியாவுக்கு வெளிப்படுத்தப்பட்ட நம்பிக்கையின் செய்தி இது: தேவன் நம்மீது அன்பு செலுத்துவதை ஒருபோதும் நிறுத்தமாட்டார்! நாம் பாவம் செய்யும்போதும், நம்மீது அன்பாயிருக்கிறார். நம்முடைய நம்பிக்கை தேவனுடைய அன்பில் இருக்கிறது. சிறைப்பிடிக்கப் பட்டவர்களை பாபிலோனுக்கு கொண்டு சென்றபோது எரேமியா அவர்களிடம், ''உங்களுடைய செல்வத்தையோ, பலத்தையோ ஞானத்தையோ அல்லது கல்வியறிவையோ குறித்து மேன்மை பாராட்டாதிருங்கள். தேவனுக்கு மகிமை செலுத்துங்கள். நீங்கள் தேவனைத் தெரிந்துகொண்டு அவரில் பரிபூரணப்படுங்கள். தேவனுடைய நிபந்தனையற்ற ஒருபொழுதும் மாறாத அன்பையும் இரக்கத்தையும் நம்புவதனால் நீங்கள் தேவனைக் காண முடியும். தேவனுடைய அன்பை ஒரு நேர்மறையான (நல்ல) நடவடிக்கை மூலம் பெற்று கொள்ளவோ அல்லது எதிர்மறையான (தவறான) நடவடிக்கையால் இழந்துவிடவோ முடியாது என்று தேவன் எரேமியாவுக்கு உணர்த்துகிறார். தேவன் நிச்சயமாய் ஒருபோதும் நம்மீது அன்புசெலுத்துவதை நிறுத்த மாட்டார்.

## தேவனுடைய அன்புக்கு நிரூபணம்

புலம்பல் மூன்றாம் அதிகாரத்தில், ''ஆண்டவர் கட்டளையிடாதிருக்கக் காரியம் சம்பவிக்கும் என்று சொல்லுகிறவன் யார்? உன்னதமானவருடைய வாயிலிருந்து தீமையும் நன்மையும் புறப்படுகிறதில்லையோ? உயிருள்ள மனுஷன் முறையிடுவானேன்? அவன் தன் பாவத்துக்கு வரும் தண்டனையைக் குறித்து முறையிடுகிறதென்ன? நாம் நம்முடைய வழிகளைச் சோதித்து ஆராய்ந்து, கர்த்தரிடத்தில் திரும்பக்கடவோம்" (37-40).

எரேமியா இந்த மிகப்பெரிய நம்பிக்கையை வெளிப்படுத்தும் போது, நல்ல நேரங்களும் கடினமான நேரங்களும் தேவனிடத்திலிருந்து வருகின்றன என்ற யோபுவின் புத்தகத்தில் நாம் கண்டுகொண்ட உண்மையை பகிர்ந்துகொள்ளுகிறார் (யோபு 2:10). நாம் செழுமையான காலத்தில் வாழும்போது மகிழ்ச்சியாய் இருக்க வேண்டும் என்ற சத்தியத்தை சாலொமோனும் போதித்தார். எனினும் துன்பமான நாட்களில் தேவனே அதையும் உண்டாக்கினார் என்று நாம் அறிந்துகொள்ள வேண்டும். இன்னொரு சமயத்தில் அவர் ஒரு மகிழ்ச்சியான வீட்டுக்குப் போவதைவிட ஒரு துக்கவீட்டுக்குப் போவது நலம் என்று போதித்தார், ஏனெனில் ஒரு துக்கவீட்டில் நீங்கள் நித்தியத்தின் மதிப்புகளைப் பற்றி சிந்திக்கிறீர்கள். உங்களுக்கும் மரணம் உண்டு என்ற உண்மையைப்பற்றி நினைக்கப்போகிறீர்கள். நீங்கள் தேவனைப்பற்றியும், வாழ்க்கையைப் பற்றியும், வாழ்க்கையின் நோக்கங்கள் மற்றும் அதன் அர்த்தத்தைப் பற்றியும் சிந்திக்கிறீர்கள் (பிரசங்கி 7:2, 14).

தேவனுடைய மக்கள் மாற்ற முடியாத விக்கிரகாராதனைக் காரர்களாயிருந்தார்கள். அவர்களின் விக்கிரகாராதனை என்ற பாவம் எல்லையிலடங்காதது. சீர்கெட்ட ஆசாரியர்களும் கள்ளத்தீர்க்க தரிசிகளும் கூட இந்தப் பாவத்தைச் செய்தனர். எனினும் எரேமியா மற்றும் சிறையிருப்பு தீர்க்கதரிசிகளின் செய்தி ஒரு நம்பிக்கையையும் பிரதிபலித்தது: அதாவது நாளுக்கு நாள் வீணே அழிந்துபோவதை தேவன் விரும்பவில்லை. பாவத்தில் வாழும் உங்களைத் தேவன் அதிகமாக நேசிக்கிறார். நீங்கள் அவருடைய மக்களாயிருப்பதால் தேவன் உங்களை அழிவுக்கு ஒப்புக்கொடுக்க மாட்டார்.

தேவன் நம்முடைய பாவங்களுக்காக நம்மைத் தண்டிக்கும்போது, அந்தத் தண்டனை நாம் தேவனுடைய பிள்ளைகள் என்பதையே நிரூபிக்கிறது. பெற்றோர்களாகிய நாம் நம்முடைய பிள்ளைகள் தவறு செய்யும்போது அவர்களைச் சிட்சிக்கிறோம். ஏனெனில், அவர்கள் நாம் அன்பு செலுத்தும் நம்முடைய பிள்ளைகள். நமது சுற்றுப்புறத்திலுள்ள பிள்ளைகள் நம்முடைய பிள்ளைகள் அல்ல என்பதால் அவர்களைச் சிட்சிக்க மாட்டோம். எபிரெயர் நிருபத்தை எழுதியவர், இந்த வகையான சிட்சை ஆண்டவராகிய பரமபிதா நம்மேல் அன்பாயிருக்கிறார் என்பதற்கு நிரூபணமாயிருக்கிறது (எபிரெயர் 12) எனக் கூறுகிறார்.



## அத்தியாயம் எட்டு
# எசேக்கியேலின் தீர்க்கதரிசனம்

### "எல்லாக் காரியங்களும் புதிரானதும் அற்புதமானவைகளும்"

தேவனுடைய மக்கள் பாபிலோனுக்கு அணிவகுத்துக் கொண்டுசெல்லப்பட்டபொழுது, அவர்களைத் துன்புறுத்தியவர்கள் அவர்களைப் பரிகசித்தனர் என்று சங்கீதக்காரன் சொல்லுகிறான், "நீங்கள் உங்கள் தேவனுக்கு துதிகீதங்களைப் பாட விருப்பமுள்ளவர்கள். இப்போது உங்களின் பாடல்கள் சிலவற்றை நாங்கள் கேட்கட்டும்!" எனினும் சங்கீதக்காரன், "கர்த்தரின் பாட்டை அந்நிய தேசத்தில் நாங்கள் பாடுவதெப்படி?" (சங்கீதம் 137:4) என்று எழுதுகிறார்.

எசேக்கியேலும் தானியேலும் தீர்க்கதரிசிகளாக தங்கள் அசாதாரண ஊழியங்களைச் செய்து வாழ்ந்த காலம் அது. எசேக்கியேலும் தானியேலும் ஏறக்குறைய சம வயதினர். சுமார் பதினொரு வயதாயிருக்கும்போது தானியேல் பாபிலோனுக்கு சிறைபிடிக்கப் பட்டவனாகக் கொண்டுபோகப் பட்டான். ஒன்பது வருஷங்களுக்குப் பின், எசேக்கியேல் இருபத்தைந்து வயதாயிருக்கும்போது, கொண்டுசெல்லப்பட்டான். அடிமைகளின் முகாமில் நேரடியாக சிறைபிடிக்கப்பட்டவர்களுக்குப் பிரசங்கித்து ஊழியஞ் செய்த ஒரே தீர்க்கதரிசி அவரே.

சிறைபிடிக்கப்பட்டவர்களாக இருந்தபொழுதும் தம்முடைய மக்கள் ஒரு தீர்க்கதரிசியில்லாமல் இருக்க வேண்டுமென்று தேவன் விரும்பவில்லை. இதனால் வாலிபனாயிருந்த எசேக்கியேலை சிறைபிடிக்கப்பட்டு நாடுகடத்தப்பட்டவர்களுக்கு ஊழியஞ்செய்ய அவர் கட்டளையிட்டார். இந்தப் புத்தகத்தில் ஒரு முக்கிய வசனம், "நான் தேசத்தை அழிக்காதபடிக்குத் திறப்பிலே நிற்கவும் சுவரை

அடைக்கவுந்தக்கதாக ஒரு மனுஷனைத் தேடினேன், ஒருவனையும் காணேன்'' (எசேக்கியேல் 22:30). சிறைபிடிக்கப்பட்டவர்களிலிருந்து, தேவனுக்கும் அவருடைய மக்களுக்கும் இடையில், "இடைவெளியில் நிற்க" ஒரு மனிதன் வேண்டும் என்று தேவன் விரும்பினார். அந்த மனிதனாக இருக்க அவர் எசேக்கியேலுக்குக் கட்டளை கொடுத்தார்.

## வெளிப்படுத்தப்பட்ட இலக்கியம்

''எல்லாக் காரியங்களும் புதிரானதும் அற்புதமானவைகளும்'' என்பது எசேக்கியேலின் புத்தகத்துக்கு ஒரு நல்ல தலையங்கம். இதற்குக் காரணம், அது சில தெய்வீக அற்புதமான தீர்க்கதரிசனங்களால் நிறைந்திருக்கிறது. ஒரு கருத்தில் பார்க்கும்போது எசேக்கியேல் தாமே ஒரு தெய்வீக அற்புதமான தீர்க்கதரிசி. தானியேல், எசேக்கியேல், அப்போஸ்தலர் யோவான் ஆகிய தீர்க்கதரிசிகளை ஒப்பிடும்போது, அவர்கள் "தானியேல்," "எசேக்கியேல்", "வெளிப்படுத்துதல்" ஆகிய புத்தகங்களை எழுதியபோது, நாடுகடத்தப்பட்டவர்களாயிருந்தனர். தானியேலும் எசேக்கியேலும் பாபிலோனில் நாடுகடத்தப்பட்டனர். யோவான் ரோமர்களால் பத்மு தீவுக்கு நாடுகடத்தப்பட்டான். இந்த மூன்று மனிதர்களும் ''வெளிப்படுத்துதல் இலக்கியம்'' என்றழைக்கப்பட்டப் புத்தகங்களை எழுதினார்கள். "வெளிப்படுத்துதல்" என்பதன் அர்த்தம், திரையை வெளியே இழுப்பது என்பது. இதனால் வேறு வழிகளில் மக்கள் காணமுடியாதவைகளைக் காணச் செய்வது.

வெளிப்படுத்துதல் இலக்கியம், கடைசிகால இலக்கியம் என்றும் அழைக்கப்பட்டது. இது நம்மைத் திரைக்குப் பின்னால் மட்டுமல்ல, எதிர்காலத்துக்கும் எடுத்துச் செல்கிறது. ஆங்கிலத்தில் Eschatology என்பது "கடைசி காரியங்களைப் பற்றி அறிந்துகொள்ளுவது'' என்று பொருள்படும். கடைசிகாலத் தீர்க்கதரிசி ஒருவர், தேவன் தம்முடையத் திட்டத்தின்படி மனித வரலாற்றை ஒரு முடிவுக்குகக் கொண்டு வரும்போது என்ன நேரிடும் என்று நமக்குக் காட்டுகிறார்.

## எசேக்கியேல் புத்தகத்தின் சுருக்கம்

எசேக்கியேலின் தீர்க்கதரிசனம் மிகவும் நன்றாக ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கிறது. இதைச் சுருக்கமாக இப்படிக் கூறலாம்: எருசலேமின் அழிவை எசேக்கியேல் தீர்க்கதரிசனமாக உரைக்கிறார். சிறையிருப்பிலிருந்த ஒரு தீர்க்கதரிசியாக, அவருடைய ஊழியத்தின் ஒரு நோக்கம், அந்த நாட்களிலிருந்த அநேகக் கள்ளத் தீர்க்கதரிசிகளின் செய்திக்கு எதிராக நடவடிக்கையெடுப்பது. ஏனெனில் அவர்கள் சிறையிருப்பவர்களை சந்தோஷப்படுத்தும்படியாக சிறையிருப்பிலிருந்து சீக்கிரமாகவே திரும்பிவிடுவார்கள் என்று கூறினர்.



எரேமியா சிறையிருப்பு 70 வருஷங்கள் இருக்கும் என்று கூறிக்கொண்டிருந்தபோது, அனனியா என்ற தீர்க்கதரிசி இரண்டே வருஷங்களில் சிறையிருப்பு முடிந்துவிடும் என கள்ளத் தீர்க்கதரிசனம் உரைத்தார். எரேமியா அவன் கூறியதை எதிர்த்து அந்த வருஷம் முடியுமுன்னரே அவன் மரணமடைவான் என்று அறிவித்தார். எரேமியாவின் இந்தத் தீர்க்கதரிசனம் அப்படியே நிறைவேறிற்று (எரேமியா 28:11-17). இதே செய்தியைப் பிரசங்கித்த அநேகக் கள்ளத்தீர்க்கதரிசிகள் இருந்ததுபோல் தோன்றுகிறது.

இந்தப் புத்தகத்தின் முதல் இருபத்து நான்கு அதிகாரங்களில், எசேக்கியேல் இந்தக் கள்ளத் தீர்க்கதரிசனங்களை மறுத்து, எருசலேம் அழிக்கப்படும் என்பதை அழுத்தமாகத் தெரிவித்தார். எரேமியாவைப் போலவே எசேக்கியேலும் பாபிலோனிய சிறையிருப்பையும் எருசலேமின் அழிவையும் தவிர்க்க எந்த வழியுமில்லை என்று பிரசங்கித்தனர்.

இருபத்தி ஐந்து முதல் முப்பத்தி இரண்டு வரையுள்ள அதிகாரங்களில், எசேக்கியேல் எருசலேமை அழிக்கும் பாபிலோனுக்கு எதிராகத் தீர்க்கதரிசனமுரைத்தார். இதைத் தொடர்ந்து அவர் எருசலேம் மறுபடியும் எழும்பும் என்ற நம்பிக்கை நிறைந்த தீர்க்கதரிசனத்தையும் உரைத்தார் (அதிகாரங்கள் 33-40). எசேக்கியேலின் கடைசி எட்டு அதிகாரங்களும் கடைசிக் காலங்களைப் பற்றிய தீர்க்கதரிசனத்தைக் கொண்டுள்ளன.

சாலொமோன் தேவாலயம் நின்ற அதே இடத்தில் இன்னொரு தேவாலயம் கட்டப்படும் என்று அவர் தீர்க்கதரிசனம் உரைத்தார். இது ஆயிர ஆண்டு தேவாலயம் (Millennial Temple) என்று குறிப்பிடப்பட்டது.

## எசேக்கியேலுக்குக் கொடுக்கப்பட்ட கட்டளை

எசேக்கியேலின் பெரும்பான்மையான பிரசங்கங்கள் தரிசனங்கள் மூலமாகத் தோன்றின. இவைகளில் அநேகம் வெளிப்படுத்துதல் புத்தகத்திலும் காணப்படுகிறது. எசேக்கியேலின் முதல் வெளிப்படுத்துதல், "இதோ, வடக்கேயிருந்து புசல்காற்றும் பெரிய மேகமும், அத்தோடே கலந்த அக்கினியும் வரக்கண்டேன்; அதைச் சுற்றிலும் பிரகாசமும், அதின் நடுவில் அக்கினிக்குள்ளிருந்து விளங்கிய சொகுசாவின் நிறமும் உண்டாயிருந்தது. அதின் நடுவிலிருந்து நாலு ஜீவன்கள் தோன்றின; அவைகளின் சாயல் மனுஷ சாயலாயிருந்தது. அவைகளில் ஒவ்வொன்றுக்கும் நன்நான்கு முகங்களும் ஒவ்வொன்றுக்கும் நன்நான்கு செட்டைகளுமிருந்தன... அவைகளுடைய முகங்களின் சாயலானது, வலப்பக்கத்தில் நாலும் மனுஷ முகமும், சிங்க முகமும், இடது பக்கத்தில் நாலும் எருது முகமும் கழுகு முகமுமாயிருந்தன... ஜீவன்களண்டையிலே நாலு முகங்களையுடைய ஒரு

சக்கரத்தைக் கண்டேன்.. ஜீவனுடைய ஆவி சக்கரங்களில் இருந்தது'' (எசேக்கியேல் 1:4-6, 10, 15, 21).

அந்த நான்கு ஜீவன்களும் தரிசனத்தில் முக்கியப் பகுதியாகும். அப்போஸ்தலர் யோவானுடைய பரலோகத் தரிசனத்தில், பரலோகத்தினுள் ஒரு கதவு திறக்கப்பட்டதும், இந்த நான்கு ஜீவன்களைப்பற்றி அவர் வெளிப்படுத்துதல் புத்தகத்தில் குறிப்பிட்டிருக்கிறார். சிங்காசனத்தைச் சுற்றிலும் பரலோகத்தில் இதே நான்கு உயிருள்ள ஜீவன்கள் இருந்தன. முதலாவது சிங்கத்தைப் போலவும் இரண்டாவது காளைக்கொப்பாகவும், மூன்றாவது மனிதனைப்போலவும் நான்காவது ஒரு கழுகைப் போலவுமிருந்தன (வெளி. 4:6,7).

சில வல்லுனர்கள் எசேக்கியேலும் யோவானும் பகிர்ந்துகொண்ட இந்தத் தரிசனம் வேதவாக்கியங்களில் தேவன் வெளிப்படுத்தியதின் ஒரு சுருக்கம் என்று நம்புகிறார்கள். சீனாய் மலையில் தேவன் முதலாவது தம்மை மனிதனுக்கு வெளிப்படுத்தியபோது, அவர் சிங்கத்தைப்போல கெர்ச்சித்தார். தேவன் தம்மை மனிதனுக்கு வெளிப்படுத்திய அடுத்த வழி யாத்திராகமத்திலும் லேவியராகமத்திலும் விவரிக்கப்பட்ட பெரிய பலியிடும் அமைப்பின் மூலம் மக்களுடைய பாவங்களுக்காக பலியிடப்பட்ட மிருகங்களைக் காளை குறிப்பிடுகிறது.

இந்த நான்கு ஜீவன்களுக்குமிடையேயிருந்த மனிதன் தேவன் ஒரு மனிதரான சுவிசேஷங்களுக்கு நன்மை எடுத்துச் செல்லுகிறான். தேவன் நம்மிடையே முப்பத்து மூன்று ஆண்டுகள் வாழ்ந்தார். நமக்கிடையே வாழ்ந்த இந்த மனிதர், பிரமாணங்கள் சொல்லுகிறபடி, ''மனிதரில் மனிதராகவும், தேவனில் தேவனாகவுமிருந்தார்.'' இயேசு கிறிஸ்து மனித உருவில் வந்தது இந்த உலகத்தில் தேவனுடைய வெளிப்பாட்டின் சிகரமாகும்.

சக்கரங்கள் நடந்துகொண்டிருக்கிற தொடர்ச்சியான தேவனுடைய வெளிப்படுத்துதலைக் குறிப்பிடுவதாக இருக்கக் கூடும். ஜீவனுடைய ஆவி சக்கரங்களில் இருந்ததால், ஒருவேளை வெளிப்படுத்துதலை பிரகடனம் செய்த தீர்க்கதரிசிகளை உள்ளடக்கியதாக இது இருக்கக் கூடும். இவை எசேக்கியேலின் முதல் தரிசனத்தைப் பற்றி சாத்தியமான சில வியாக்கியானங்கள்.

எசேக்கியேல் இந்தத் தரிசனத்தைக் கண்ட பின்பே தேவனிடமிருந்து தம் கட்டளையைப் பெற்றார். இதை, எசேக்கியேலின் ''வரப்போகிற அனுபவம்'' என்றழைக்கலாம். ஏசாயாவின் வரப்போகிற அனுபவம் நினைவிலிருக்கிறதா? பழைய ஏற்பாட்டின் எல்லா பெரிய தீர்க்கதரிசிகளுக்கும் தேவமனிதர்களுக்கும் வருவதும் போவதுமான



அனுபவங்கள் உண்டு. சில அனுபவங்கள் அவர்களை ''தேவனிடம்'' கொண்டு வந்தன. இதன்பின் அவர்கள் ''தேவனுக்காகப்'' போனபோது அவர்களுக்கு அனுபவங்கள் ஏற்பட்டன.

பழைய ஏற்பாட்டில் தீர்க்கதரிசிகளுக்கும் தேவ மனிதர்களுக்கும் ''வரும் அனுபவங்கள்'' இருந்தன. அது மோசேக்கு நடந்தது போல சில நேரங்களில் அநேக வருஷங்கள் நிலைத்திருந்தன. அவருக்கு எண்பது வருஷங்கள் வரும் அனுபவங்களும் நாற்பது ஆண்டுகள் போகும் அனுபவங்களுமிருந்தன. இதனாலேயே நாற்பது வருஷங்கள் போகிற அனுபவங்கள் அவ்வளவு சுறுசுறுப்பானவைகளாக இருந்தன; போகும் நாற்பது வருஷங்களுக்கு முன் வரும் எண்பது வருஷங்கள் இருந்தன.

முதல் அதிகாரத்தில், நான்கு உயிரோடுள்ள ஜீவன்களையும், சக்கரங்களையும் பற்றிய மிகப்பெரிய தரிசனம், எசேக்கியேலின் வரும் அனுபவங்கள். எசேக்கியா கட்டளை பெற்ற நேரத்தில் யூதா மக்கள் தேவனைப் பற்றிய தரிசனத்தை இழந்துவிட்டனர். அவர்களுக்கு எருசலேம் இல்லை, தேவாலயமில்லை, தேவனுடைய வசனங்கள் இல்லை. இன்னும், ஆராதனை செய்ய உதவிகள் எதுவுமில்லை. எனவே, அந்த நாட்களிலிருந்த ஆவிக்குரிய தலைவனான எசேக்கியேலுக்கு இயற்கைக்கு அப்பாற்பட்ட தேவனுடைய தரிசனம் அவசியமாயிருந்தது.

அநேக வழிகளில் தேவன் தம்மைப்பற்றிய ஒரு தரிசனத்தை எசேக்கியேலுக்குக் கொடுத்தார். முதலாவதாக, எசேக்கியேல் திரும்பத் திரும்ப ''கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி'' என்று சொன்னார். இது எல்லா தீர்க்கதரிசிகளைப் பொறுத்தவரையிலும் உண்மையாயிருக்கிறது. இன்னும் எசேக்கியேல், ''கர்த்தருடைய கரம் என்மேல் பலமாய் இருந்தது'' என்றும் சொன்னார். மற்ற எந்தத் தீர்க்கதரிசியையும் விட எசேக்கியேல் பரிசுத்த ஆவியைப்பற்றி அதிகமாக குறிப்பிடுவதால் அவர் 'பரிசுத்த ஆவியின் தீர்க்கதரிசி' என்று அழைக்கப் பட்டார். எனினும், வானங்கள் அவருக்காகத் திறக்கப்பட்டு உண்மையில் கர்த்தருடைய மகிமையைக் கண்டார் என்பது மற்ற தீர்க்கதரிசிகளின் மத்தியில் எசேக்கியேலைத் தனிப் பண்புடையவராக மாற்றியது.

தம்முடைய மக்கள் அழிந்து போகாமலிருக்கும்படி தேவன் தம்மைப்பற்றிய இந்தத் தரிசனத்தைக் கொடுத்தார். மிகக் கடினமான நேரங்களில் மிகக் கடினமான இடமாகிய பாபிலோனிய அடிமை முகாம்களில் ஒரு தீர்க்கதரிசியாக ஊழியஞ்செய்யும்படி, இதுவும் எசேக்கியேலுக்கு கொடுத்த தரிசனம்.

## ஆவிக்குரிய காவல்காரர்

எசேக்கியேலின் மிகப்பெரிய பிரசங்கம் ஒன்று மூன்றாவது அதிகாரத்தில் எழுதப்பட்டிருக்கிறது. இந்தப் பிரசங்கம் ''இஸ்ரவேல்

வீட்டுக் காவல்காரர்" என்றழைக்கப்படுகிறது. இந்த உவமை, இரக்கமற்ற வெற்றி வீரர்களால் முற்றுகையிடப்பட்ட பட்டணங்களின் கலாச்சாரத்தின் அடிப்படையிலானது. கர்த்தர் வீட்டைக் கட்டாராகில், அதைக் கட்டுகிறவர்களின் பிரயாசம் விருதா என்று சாலொமோன் இதை எழுதியபோது அதே உவமையைப் பயன்படுத்துகிறார் (சங்கீதம் 127:1). இரவில் எதிரியின் ஏதாவது சத்தம் கேட்கிறதா என்று பார்த்துக்கொண்டும் கேட்டுக் கொண்டும் காவல் கோபுரங்களின்மேல் காவல்காரர்கள் எப்பொழுதும் இருப்பார்கள். எசேக்கியேலின் உவமையுங்கூட, ஒரு எதிரி தோன்றினால் தங்கள் பட்டணத்தாரை எச்சரிக்க வேண்டிய காவல்காரனின் முக்கியமான பொறுப்பை அடிப்படையாகக் கொண்டுள்ளது. எசேக்கியேலின் காவல்காரன் பற்றிய பிரசங்கம், "ஏழுநாள் முடிந்த பின்பு கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி, அவர்: மனுபுத்திரனே, உன்னை இஸ்ரவேல் வம்சத்தாருக்குக் காவலாளனாக வைத்தேன்; நீ என் வாயினாலே வார்த்தையைக் கேட்டு, என் நாமத்தினாலே அவர்களை எச்சரிப்பாயாக... நீ துன்மார்க்கனை எச்சரித்தும், அவன் தன் துன்மார்க்கத்தையும் தன் ஆகாத வழியையும் விட்டுத் திரும்பாமற்போவானாகில், அவன் தன் துன்மார்க்கத்திலே சாவான் நீயோவென்றால் உன் ஆத்துமாவைத் தப்புவிப்பாய்" (16-17, 19), என்று துவங்குகிறது.

எரேமியா தம்முடைய நாட்களின் கள்ளத்தீர்க்கதரிசிகளைக் கடிந்துகொண்டபொழுது, "மக்களுடைய பாவங்களைப்பற்றி அவர்களை ஒருபொழுதும் நீங்கள் எச்சரிக்கவில்லை, இந்த எல்லா பெருந்துன்பத்திலிருந்தும் அவர்களை விடுதலை செய்யவும் முயற்சிக்கவில்லை" என்றார். இன்னும் தொடர்ந்து எசேக்கியேல், "ஒரு தீர்க்கதரிசியாக நீங்கள் அவர்களை எச்சரித்தும் தொடர்ந்து துன்மார்க்கத்திலிருந்தால், தங்கள் துன்மார்க்கத்தில் அவர்கள் சாவார்கள். ஆனால் நீங்களோ உங்களைத் தப்புவித்துக்கொள்ளுவீர்கள். எனினும் அவர்களை எச்சரிக்க நீங்கள் தவறினால் தேவன் உங்களையே பொறுப்பாக்குவார்" என்று சொன்னார்.

அப்போஸ்தலர் பவுல் தம்முடைய நாட்களில் இதை விசுவாசித்தார். "இரட்சிக்கப்படுகிறவர்களுக்குள்ளேயும், நாங்கள் தேவனுக்குக் கிறிஸ்துவின் நற்கந்தமாயிருக்கிறோம். கெட்டுப்போகிறவர்களுக்குள்ளே மரணத்துக்கேதுவான மரணவாசனையாகவும், இரட்சிக்கப்படுகிறவர் களு க்குள்ளே ஜீவனுக்கேதுவான ஜீவ வாசனையாகவும் இருக்கிறோம். இவைகளை நடப்பிக்கிறதற்கு எவன் தகுதியானவன்?" (2 கொரிந்தியர் 2:15-16) என்று அவர் எழுதினார்.

நமக்கான ஆவிக்குரிய வாழ்வில் செயல்படுத்த வேண்டியது: நீங்கள் சுவிசேஷத்தை மற்றொருவருடன் பகிர்ந்து கொண்டு, அவர்கள்



அதை விசுவாசித்தால், அவர்கள் ஜீவியத்தில் ஜீவவாசனையாக இருக்கிறீர்கள். எனினும் ஒருவரோடு சுவிசேஷங்களைப் பகிர்ந்துகொள்ளும்போது அவர்கள் அதைப் புறக்கணித்தால், நீங்கள் அவர்களுக்கு மரண வாசனையாயிருக்கிறீர்கள். ஏனெனில் அவர்களால், "சுவிசேஷம் பற்றி எனக்குத் தெரியாது, நான் கேட்டதேயில்லை," என்று சொல்ல முடியாது. வேதாகமம் தேவனால் ஏவப்பட்ட வார்த்தைகள் என்று நாம் விசுவாசித்தால், நாம் நம்முடைய வாழ்க்கைகளில் குறுக்கிடும் மக்களின் ஆத்துமாக்களுக்கு, எசேக்கியாவைப் போல் நாமும் "காவல்காரர்" என்பதை நம்பவேண்டும்.

இதனாலேயே எசேக்கியேல் தம்முடைய பிரசங்கங்களில் பரிசுத்த ஆவியானவரைப்பற்றி அழுத்தமாகக் கூறினார். எசேக்கியேலும் பவுலைப் போல தம்முடைய ஊழியத்துக்கு வேண்டிய யாவற்றையும் பரிசுத்த ஆவியானவரிடம் பெற்றுக் கொண்டார். பவுல், "எங்களுடைய தகுதி தேவனால் உண்டாயிருக்கிறது" என்று எழுதினார். கொரிந்தியர் போன்ற மக்களோடு சுவிசேஷத்தைப் பகிர்ந்துகொண்டபொழுது பவுல், அது தம்மிடமிருந்து வருவதல்ல, எல்லாம் பரிசுத்த ஆவியானவரிடமிருந்து வருபவை என்று விசுவாசித்தார் (2 கொரிந்தியர் 3:5; 1 கொரிந்தியர் 2:3-5). தேவனால் மட்டுமே நம்மைத் தகுதியுள்ள ஆவிக்குரிய காவல்காரர்களாக ஆக்க முடியும்.

அத்தியாயம் ஒன்பது

# "உலர்ந்த எலும்புகள்"

தங்கள் வாழ்நாள் முழுவதும் தேவனுடைய வசனங்களைப் பிரசங்கித்துள்ள அநேக போதகர்கள், அநேக மக்கள் படுகொலை செய்யப்பட்ட வயல்கள் என்று நம்பப்பட்ட ஒரு கல்லறை தோட்டத்தில் எரேமியா பிரசங்கித்த ஒரு பிரசங்கத்தை விரும்புகின்றனர். எசேக்கியேல் எலும்புகள் நிறைந்த ஒரு பள்ளத்தாக்குக்கு வெளியே கொண்டுபோகப்பபட்டார் என்று நாம் வாசிக்கிறோம் (அதிகாரம் 37). இந்த எலும்புகளுக்கு பிரசங்கிக்க வேண்டுமென்று தேவனிடமிருந்து எசேக்கியேலுக்குக் கட்டளை கொடுக்கப்பட்டது.

உலர்ந்த எலும்புகளுக்கு பிரசங்கிப்பதற்கான கர்த்தருடைய கட்டளைக்கு எசேக்கியா கீழ்ப்படிந்தபொழுது, "அவர் என்னை நோக்கி: மனுபுத்திரனே, இந்த எலும்புகள் உயிரடையுமா என்று கேட்டார்; அதற்கு நான்: கர்த்தராகிய ஆண்டவரே, தேவரீர் அதை அறிவீர் என்றேன். அப்பொழுது அவர்: நீ இந்த எலும்புகளைக் குறித்துத் தீர்க்கதரிசனம் உரைத்து, அவைகளைப் பார்த்துச் சொல்ல வேண்டியது என்னவென்றால்: உலர்ந்த எலும்புகளே, கர்த்தருடைய வார்த்தையைக் கேளுங்கள். கர்த்தராகிய ஆண்டவர் இந்த எலும்புகளை நோக்கி: இதோ, நான் உங்களுக்குள் ஆவியைப் பிரவேசிக்கப்பண்ணுவேன், அப்பொழுது உயிரடைவீர்கள்'' (37:3-5) என்று சொன்னார்.

யூதா மக்கள் உலர்ந்த எலும்புகளைப் போலிருந்தார்கள். எசேக்கியேல் தீர்க்கதரிசிக்கு முன்பாக தேவன் வைத்த சவால், "இந்த உலர்ந்த எலும்புகள் உயிர் பெறமுடியும் என்று நீ நினைக்கிறாயா?'' என்பதே. வேதவாக்கியங்களில், தேவன் தீர்க்கதரிசியின் தரிசனங்களுக்குத் திடமாக சவாலிட்டார். எசேக்கியேல் "ஆம், அவைகள் உயிர்பெற முடியும் என்பதை விசுவாசிக்க எனக்கு நம்பிக்கை இருக்கிறது'' என்று சொல்லவில்லை என்பதைக் கவனியுங்கள். மாறாக



அவர், "கர்த்தாவே, உமக்கு மட்டுமே தெரியும்'' என்று பதிலளித்தார். எலும்புகள் உயிர்பெறும் என்று மெய்யாகவே அவர் விசுவாசிக்கவில்லை என்பதால் தீர்க்கதரிசி தேவனுக்கு அப்படி வாக்குக் கொடுக்கவில்லை. அப்பொழுது தேவன் அவரிடம், "எலும்புகளுக்குப் பிரசங்கம் செய்!'' என்றார்.

எனவே, எசேக்கியேல் எலும்புகளுக்குப் பிரசங்கிக்க ஆரம்பித்தார். கொஞ்ச நேரத்தில் இரைச்சல் உண்டாகி, ஒரு சலசலப்பு சத்தம் கேட்டு, எலும்புகள் ஒன்றோடொன்று சேர்ந்து கொண்டன என்று எசேக்கியேல் சொல்லுகிறார். உலர்ந்த எலும்புகள் ஒன்றாகச் சேர்ந்தபின், எசேக்கியேலிடம் எலும்புக்கூடுகளின் கூட்டம், நரம்பும் மாம்சமுமில்லாமல் இருந்தன. ''பிரசங்கி!'' என்று எசேக்கியேலுக்கு மறுபடியும் கட்டளையிடப்பட்டது. அவர் பிரசங்கித்தபோது நரம்பும் மாம்சமும் அவைகளை மூடிற்று.

எசேக்கியேல் மாம்சத்தோடும் தசையினாலும் மூடப்பட்ட எலும்புக்கூட்டுப் படைகளோடு இருந்தபோதிலும், தேவனுடைய கேள்விக்கு அவன் இன்னும் பதிலளிக்கவில்லை, "இந்த எலும்புகள் மறுபடியும் உயிர்பெற முடியுமா?'' இந்த உயிரற்ற உடல்கள் இன்னும் உயிர்பெறவில்லை. அவைகளுக்குச் சுவாசமில்லை. எனவே தேவனிடமிருந்து கட்டளை வந்தது, "சுவாசத்தை நோக்கிப் பிரசங்கம் செய்!'' வேதாகமத்தில், காற்று, சுவாசம், ஆவி ஆகியவைகளைக் குறிப்பிடுவது ஒரே வார்த்தையே. சுவாசம் என்பது இங்கே பரிசுத்த ஆவியைக் குறிப்பிடுகிறது. வேதாகமம் முழுவதிலும் இந்தப் பெரிய தத்துவத்தை நீங்கள் காண்பீர்கள்: பரிசுத்த ஆவி இல்லாமல் பிரசங்கி முடியாத ஒரு காரியத்தை முயற்சி செய்கிறார்.

எசேக்கியேல் ஆவிகளுக்குப் பிரசங்கித்ததும், அந்தச் சடலங்களுக்குள் சுவாசம் வந்து, அவர்கள் ஒரு பெரிய சேனையாக மாறினார்கள்.

எசேக்கியேல் யூதர்களுக்குப்பிரசங்கிக்கும்படி கட்டளையிடப் பட்டதின் அடிப்படைச் செயல்திட்டத்தின் சுருக்கம் இது, "உங்கள் சிறையிருப்பு அனுபவத்திலிருந்து உங்களை மீட்க என்னால் முடியும், நான் மீட்பேன். பாபிலோனிலிருந்து உங்கள் சொந்த தேசத்துக்குத் திரும்பவும் கொண்டுவர என்னால் முடியும், நான் அப்படிச் செய்வேன். இஸ்ரவேலின் செல்வங்களை அவர்களுக்குத் திரும்பவும் கொடுப்பேன்."

இந்தப் பெரிய செய்தியின் இரண்டாம் செயல்திட்டம், இன்று சபையைக் கட்டியெழுப்பும் பெரிய ஊழியத்தின் ஒரு காட்சியை நமக்குக் கொடுக்கிறது. சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பது சபையைக் கட்டியெழுப்புகிறது. உலர்ந்த எலும்புகள் தொலைந்து போனவர்களைக்

குறிப்பிடுகின்றன. இன்று பூமியில் வசிக்கும் 600 கோடி மக்களுக்கும் அதிகமானவர்களில் எத்தனை மக்களுக்கு இயேசு கிறிஸ்துவைப்பற்றித் தெரியும்? எத்தனை பேர் இயேசு கிறிஸ்துவோடு உயிரோடிருக்கிறார்கள்? பரிசுத்த ஆவியானவரோடு வாழ்வதைப்பற்றியும் தேவ ஆவியினால் மாற்றப்படுவதைப் பற்றியும் அவர்களில் எத்தனை பேருக்குத் தெரியும்? மிகக் குறைந்தவர்களுக்கே. இன்றைய சபையை எதிர்நோக்கியிருக்கும் சவால் இதுதான். எசேக்கியேலின் உலர்ந்த எலும்புகள் பிரசங்கத்தின் முக்கிய சவால் இதுதான்: இயேசு கிறிஸ்துவின் சபை, பரிசுத்த ஆவியானவரால் வல்லமையளிக்கப்பட்டு இந்த உலகில் தொலைந்துபோன மக்களுக்கு சுவிசேஷத்தை எடுத்துச் செல்லும் கட்டளையை செயல்படுத்த முடியுமா?

நீ உலர்ந்த எலும்புகளில் ஒன்றாயிருக்கிறாயா? இரட்சிப்பின் சுவிசேஷத்தை ஒருபொழுதும் கேட்காமலும் விசுவாசிக்காமலுமிருந்ததால் நீ இழந்துவிட்டாயா? உன்னுடைய வாழ்க்கையிலும் ஊழியத்திலும் தேவ ஆவியானவரின் சுவாசம் உனக்கிருக்கிறா? உங்களுடைய சூழ்நிலைகள் எப்படியிருந்தாலும், ஒவ்வொரு நாள் காலையிலும் எசேக்கியா எழுந்தபோதிருந்த அவ்வளவு கடினமான சூழ்நிலைகளைப் போலிருக்க முடியாது. எசேக்கியேலுக்காக உலர்ந்த எலும்புகளை உயிருள்ளவைகளாக்க தேவனால் முடியுமென்றால் உங்களுக்கும் எனக்கும் அதை செய்ய அவரால் செய்யமுடியும்.

ஆவியானவர் உங்களில் வாழ்ந்திருந்தால், சபையைக் கட்டியெழுப்ப நீ என்ன செய்யப் போகிறாய்? மற்றவர்களோடு சுவிசேஷத்தைப் பகிர்ந்துகொள்ள நீ ஒரு பிரசங்கியாக இருக்க வேண்டுமென்ற அவசியமில்லை. தேவனுடைய வசனங்களை மற்றொருவருடன் பகிர்ந்து கொள்ளும்போது தேவ ஆவியானவர் உன்னை அபிஷேகம் செய்வார் என்று நீ விசுவாசிக்க வேண்டும். ஒரு நற்செய்தி பணியாளர் என்பவர் ஒரு பிச்சையெடுப்பவன் மற்றொரு பிச்சையெடுப்பவனிடம், ரொட்டி எங்கே கிடைக்கும் என்று சொல்லுபவன் என்று சொல்லப்பட்டது. ஆவிக்குரிய பிரகாரமாய் பேசும்போது நீ அப்படிப்பட்ட ஒரு பிச்சைக்காரனாய் இருந்தால், ஜெபம், வேத வசனங்கலைப் பகிர்ந்துகொள்ளுதல் ஆகியவற்றின் வல்லமையான இணைப்பைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தின் இரண்டாவது அதிகாரத்தில், சீஷர்கள் ஒன்றாகக் கூடி மிகப்பெரிய ஆவிக்குரிய சமுதாயமாய் வாழ்ந்தார்கள் என்று நாம் வாசிக்கிறோம். தங்கள் ஆஸ்திகளைப் பங்கிட்டு தங்கள் உணவை ஒன்றாக உண்டனர். அவர்கள் தூய்மையான பொதுவுடைமைத் தத்துவத்தைச் செயல்படுத்தினார்கள்.



அப்போஸ்தலர்கள் பரிமாறுபவர்களாக அல்லது உணவு சேவைத் திட்டத்தை நிர்வாகிப்பவர்களாக இருந்ததால் அவர்களுடைய போதக ஊழியத்திலிருந்து அது அவர்களைப் புறம்பே எடுத்துச் சென்றது. அதனால் அவர்கள் ஒரு முக்கியமான தீர்மானம் எடுத்தார்கள் என்று நாம் வாசிக்கிறோம். அவர்கள் தங்கள் முதல் சபை ஊழியர்களைத் தெரிந்தெடுத்து, அவர்களிடம், "நீங்கள் இந்த வேலையைக் கவனியுங்கள், எங்களை நாங்கள் ஜெபம் செய்யவும் வேதவசன ஊழியத்துக்கும் ஒப்புக் கொடுக்கிறோம்'' என்று சொன்னார்கள். அப்போஸ்தலர்கள் ஜெபித்து வேத வசனங்களைப் பிரசங்கித்தபோது தேவன் அவர்களுடைய தீர்மானத்தை வலிமையாக ஆசீர்வதித்தார்.

எசேக்கியேல் இதே வலிமைமிக்க இணைப்பைத் தம்முடைய ஊழியத்தில் பயன்படுத்தினார். நாம் ஒன்றாகக் கூடும்போது, ஒருவராவது மாற்றமடையவில்லையானால், ஒன்றும் நடைபெறவில்லை என்று ஒருவர் சொல்லியிருக்கிறார். நாம் வசனத்தைப் பிரசங்கிக்கும்போது, நாம் அறிவை மட்டும் கொடுத்தால், அதைக் கேட்பவர்களுக்கு உண்மையில் எதுவும் நடைபெறாது. எனினும் நாம் எசேக்கியேல் மற்றும் அப்போஸ்தலர்களின் எடுத்துக்காட்டைப் பின்பற்றி நம்முடைய பிரசங்கத்துக்கு முன்பாக ஜெபம் செய்தால், ஏதாவது காரியம் நடைபெறும். வசனங்களைக் கேட்கும் மக்களுடைய வாழ்க்கை சதாகாலங்களுக்குமாக மாறிவிடும்.

நீ தெரியப்படுத்த வேண்டுமென்று தேவன் விரும்புகிற நற்செய்தியை நீ தெரியப்படுத்தும்போது, நீ, ''எலும்புகளுக்குப் பிரசங்கிக்கும்போது,'' சுவாசத்துக்கும் ஆவிக்கும்கூடப் பிரசங்கிக்கிறாய். மற்றொருவரோடு நீ பிரசங்கிக்கும் அல்லது சுவிசேஷத்தைப் பகிர்ந்து கொள்ளும் முழு நேரமும், நீ பேசும் ஒவ்வொரு வார்த்தைக்கும் ஆவியானவருடைய அபிஷேகம் வல்லமையளிக்கும்படி தேவனை நோக்கிப் பார்க்க வேண்டும். அவருடைய வல்லமை உனக்கும் உன்னுடைய வார்த்தைகளுக்கும் ஊட்டமளிக்கும்போது, அந்த எலும்புகள் உயிர்பெறும்.

அத்தியாயம் பத்து

# தானியேலின் தீர்க்கதரிசனம்

## "விசுவாசிகசளுக்கு எதிராக பாபிலோனியர்கள்"

தானியேல் "பெரிய தீர்க்கதரிசிகள்" என்றழைக்கப்பட்டவர்களில் நான்காவது இடத்தில் உள்ளார், ''சிறையிருப்பு தீர்க்கதரிசிகள்'' என்றழைக்கப்படுபவர்களில் மூன்றாவது இடத்தில் உள்ளார். எருசலேம் முதல் முறையாக வீழ்ந்தபோது நாம் தானியேலைச் சந்திக்கிறோம். அப்போது அவருக்கு ஏறக்குறைய பதினான்கு வயது. இந்த நேரத்தில் மக்கள் அதிகமாக பாபிலோனுக்கு நாடுகடத்தப்படவில்லை. எனினும், தானியேலும் அவன் வயதினரான மூன்று நண்பர்களும் சிறையிருப்புக்குள் கொண்டுபோகத் தெரிந்து கொள்ளப்பட்டவர்களில் சிலராயிருந்தனர். பாபிலோனின் ராஜா நேபுகாத்நேச்சார் ஒரு கட்டளைப் பிறப்பித்தாகத் தோன்றுகிறது. "என்னுடைய கலாசாலைகளில் கல்விகற்க, பிரபுக்களும், ராஜகுமாரர்களும், உண்மையிலேயே புத்திகூர்மையுள்ள வாலிபர்களும் எனக்கு வேண்டும்'' என்பதே அந்தக் கட்டளை. தம்முடைய மக்களின் நலத்துக்காக பாபிலோனில் ராஜதந்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒரு இடத்தில் ஒரு ஊழியத்தை நிலைநாட்ட ஒரு புறமத ஆட்சியாளரைத் தேவன் பயன்படுத்தினார். இதனால் சிறைபிடிக்கப்பட்டவர்கள் பெரிய எண்ணிக்கையில் வரும்போது, நேபுகாத்நேச்சாரின் அரண்மனையில் அவர்களுக்குக் கொஞ்சம் செல்வாக்கு இருக்கும்.

## எடுத்துக்காட்டுகளும் எச்சரிக்கைகளும்

தானியேல் புத்தகத்தின் பன்னிரெண்டு அதிகாரங்களும் சமமான இரண்டு பிரிவுகளாக இருக்கின்றன. முதல் ஆறு அதிகாரங்களும் வரலாற்று விவரத்தைக் கொடுக்கிறது. ஏழு முதல் பன்னிரெண்டாம் அதிகாரம் வரை தீர்க்கதரிசன வெளிப்பாடுகளாகும். தானியேல் 1-6



அதிகாரங்களில் காணப்படுகிற வரலாற்று விளக்கங்களுக்கெல்லாம் விடையளிக்கும் வசனம் புதிய ஏற்பாட்டில் காணப்படுகிறது. இந்த வசனம், "இவைகளெல்லாம் திருஷ்டாந்தங்களாக அவர்களுக்குச் சம்பவித்தது; உலகத்தின் முடிவுகாலத்திலுள்ள நமக்கு எச்சரிப்புண்டாக்கும்படி எழுதப்பட்டும் இருக்கிறது" (1 கொரிந்தியர் 10:1).

பழைய ஏற்பாட்டில், தேவனுடைய மக்களின் ஆவிக்குரிய வாழ்க்கைகளில் ஏற்றங்களும் தாழ்வுகளுமிருந்தன என்று நாம் காண்கிறோம். எனினும் யோசேப்பு, தானியேல் ஆகியோரைப் பொருத்தவரை அப்படியில்லை. அவர்கள் இருவரும் தங்கள் முதிர்வயதில் தங்களுக்கு விரோதிகளாயிருந்த உலக வல்லரசுகளின் அரசியல் நாட்களில் வாழ்ந்தனர். தேவனுடைய வசனங்களில் நீங்கள் சந்திக்கும் இவர்கள் தூய்மையான மக்களில் இருவர். யோசேப்பு எகிப்திய அரசனாகிய பார்வோனின் வலது பக்கத்தில் வாழ்ந்தான். தானியேல் தன் முதிர்வயது வரை தன் மக்களைப் பகைத்த பாபிலோன் கலாச்சாரத்திலும், பாரசீக அரசியலின் கீழும் வாழ்ந்தான்.

அவர் நேபுகாத்நேச்சார், அவருடைய மகன் பெல்ஷாத்சார் அவர்கள் காலத்துக்குப் பின்னும் வாழ்ந்தான். பாபிலோனிய வல்லரசு பெர்சிய வல்லரசிடம் வீழ்ந்ததைக் காண அவன் உயிரோடிருந்தான். பாபிலோனிய சிறையிருப்பின் எழுபத்திரெண்டு வருஷ காலம் முழுவதும் அவர் உயிரோடிருந்து ஒரு தீர்க்கதரிசியாகச் செயல்பட்டார். சிறைபட்டவர்களோடுத் திரும்பப் போக அவர் பலவீனமுள்ள வராயிருந்தார், எனினும் பாபிலோனிய சிறையிருப்பிலிருந்து அவர்கள் திரும்பியதை அவர் கண்டார்.

சிறையிருப்போடு எப்படி ஒத்து வாழ வேண்டும் என்பதை மக்களுக்குக் காட்டுவதே தானியேலின் பங்காயிருந்தது. அவன் பதினான்கு வயதாய் இருக்கும்போதே இந்தக் கடமை வந்து விட்டது. தானியேல் சிறையிருந்தபோது உன்னதமான வழியில் நடந்து கொண்டார். இவ்விதமாக அவர் யூதா மக்களுக்கும், ஏன் இன்று நமக்குங்கூட ஒரு மிகச் சிறந்த எடுத்துக்காட்டாக இருக்கிறார்.

## தானியேலின் மனோதிடம்

அப்போஸ்தலர் பவுல், "நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகுகிறதினாலே மறுரூபமாகுங்கள்," (ரோமர் 12:2) என்று எழுதினார். இந்த வசனம், ''உலகம் அதன் வார்ப்பில் உன்னை அழுத்தி வார்த்துவிடாமல், தேவன் உனக்குள்ளிருந்து உன் மனதை திரும்பிவார்க்கட்டும்," என்ற அர்த்தமுடையது. இது புதிய ஏற்பாட்டு

விசுவாசிகளுக்கு புத்தி கூறுகிறது, எனினும் பாபிலோனுக்கு தானியேல் வந்து சேர்ந்தபொழுது, இதே சத்தியம் அவனில் செயல்பட்டது.

பாபிலோனிய கலாச்சாரத்துக்கு ஒத்தபடி இருக்கவேண்டும் என்ற அழுத்தம் கொடுக்கப்பட்டதை தானியேல் தெரிந்துகொள்ள அதிக காலம் ஆகவில்லை. அவன் தேர்ந்தெடுக்கப்பட்டுக் கட்டாயமாக பாபிலோனிய பல்கலைக்கழகத்தில் சேர்க்கப்பட்டு, ஒரு நாள் ஒரு நல்ல பாபிலோனிய தலைவனாக அவர்களுக்கிருப்பதற்காக, நேபுகாத்நேச்சாரின் ஞானமுள்ள மனிதர்களால் பயிற்சியளிக்கப்பட்டான். தானியேல் எதிர்கொண்ட முதல் பிரச்சினை பாபிலோனியர்களின் புஷ்டியான ஆகாரம். ஒரு யூத வாலிபன் உணவில் சேர்க்காத பன்றி இறைச்சி, இன்னும் மற்ற உணவுபொருட்களும் ஒருவேளை இதில் அடங்கியிருக்கலாம். ‘‘தானியேல் ராஜாவின் போஜனத்தினாலும், அவர் பானம் பண்ணும் திராட்சரசத்தினாலும் தன்னைத் தீட்டுப்படுத்தலாகாதென்று, தன் இருதயத்தில் தீர்மானம் பண்ணிக்கொண்டு... வேண்டிக்கொண்டான்'' (தானியேல் 1:8), என்று நாம் வாசிக்கிறோம்.

தானியேல் என்ற பெயரின் அர்த்தம், "தேவன் என் நீதிபரர்." தானியேல் தம்முடைய ஒவ்வொரு அசைவையும் நியாயந்தீர்க்கும்படி தேவனை கேட்டுக்கொண்டு, தேவனுக்கு முன்பாக அவன் நடந்தான். அவனுடைய மூன்று நண்பர்களின் பெயர்களுக்கும் ஆவிக்குரிய முக்கியத்துவம் வாய்ந்த பெயர்களிருந்தன. மீஷாவேல் என்றால், "தேவனைப் போலிருப்பவன் யார்?'' என்றும், அனனியா என்றால், "யெகோவாவின் ஆதரவைப் பெற்றவர்," என்றும் அர்த்தமுடையன. அசரியா என்ற பெயரின் பொருள், ‘‘யெகோவாவால் உதவிசெய்யப்பட்டவர்'' என்பதாகும்.

பாபிலோனியர்கள் செய்த முதல் காரியம், இந்த எபிரெய விடலைப் பருவத்தினரின் பெயர்களை மாற்றியதுதான். தானியேலின் பெயர் பெல்தெஷாத்சார் என்று மாற்றப்பட்டது. இதன் அர்த்தம், "பேல் அவன் உயிரைப் பாதுகாக்கட்டும்'' என்பதாயிருந்தது. பேல் ஒரு பாபிலோனிய தேவன். தானியேல் ஒரு புறமத தேவனின் பாதுகாப்பில் இருக்கிறார் என்று விசுவாசிக்கும்படிச் செய்ய பாபிலோனியர்கள் முயற்சி செய்தனர். மீஷாவேலின் பெயர் மேஷாக் என்று மாற்றப்பட்டது. இது பாபிலோனில் மர்டாக் என்ற மற்றொரு பாபிலோனிய தேவன். அனனியாவின் பெயர், பாபிலோனின் சந்திர தேவனின் பெயரான சாத்ராக் என்றும், அசரியாவின் பெயர் ஆபேத்நேகோ என்றும் மாற்றப்பட்டது. இதன் அர்த்தம் "பாபிலோனிய ஞான தேவனுக்குப் பணியாள்" என்பதாகும்.

நேபுகாத்நேச்சார் இந்த நான்கு வாலிபர்களிடத்திலும், "நாங்கள் உங்களை பாபிலோனியர்களாக ஆக்கப்போகிறோம்'' என்று கூறினார்.



எனினும் தானியேலும் இந்த மூன்று இளைஞரும் நேபுகாத்நேச்சாருக்கும் பாபிலோனிய வல்லரசு முழுவதற்கும் முன்பாக எழுந்து நின்று, "நீங்கள் எங்களை பாபிலோனியர்களாக்கப் போவதில்லை. நாங்கள் உங்களை விசுவாசிகளாக்குவோம்!'' என்று சொன்னார்கள்.

தானியேல் புத்தகத்தின் நான்காவது அதிகாரம், மகாப்பெரிய பாபிலோன் வல்லரசை ஒன்றாகத் திரட்டிய கெட்டிக்கார நேபுகாத் நேச்சார் தேவனை விசுவாசித்து, அதை வெளிப்படுத்தினார். வேதாகமத்தில் இது மிக அழகான அதிகாரங்களில் ஒன்றாகும். விசுவாசத்தை வெளிப்படுத்தும் அளவுக்கு நேபுகாத்நேச்சாரை நடத்திக் கொண்டுவந்தது எது? அது தானியேல் தூய்மையற்ற, எனினும் புஷ்டியுள்ளதும், அசுத்தமானதுமான பாபிலோன் ஆகாரத்தை உட்கொண்டு தன்னைத் தீட்டாக்கிக்கொள்ள மறுத்தபொழுதிலிருந்து துவங்கியது.

## சொப்பனங்களுக்கு அர்த்தம் சொல்லுவது

சிறையிருப்பு காலத்தின் துவக்கத்திலேயே தானியேலும் அவனுடைய நண்பர்களும் மற்றொரு எதிர்ப்பைச் சமாளிக்கவேண்டி யிருந்தது. நேபுகாத்நேச்சார் ஒரு சொப்பனங்கண்டான். அவனுடைய சொப்பனம், அவனை பெரிய தொல்லைக்குள்ளாக்கியது. அவன் தன் ஞானிகளை அழைத்து அவர்களிடம், "நான் என்ன சொப்பனம் கண்டேன் என்று சொல்லி, அதன் அர்த்தத்தையும் தெரியப்படுத்துங்கள்," என்று சொன்னான்.

பாபிலோனின் ஞானிகளுக்கு இது மிகக்கடினமான ஒரு பிரச்சினையாயிருந்தது. சொப்பனங்களுக்கு அர்த்தம் சொல்லுவது எளிது, எனினும் அது சரியான அர்த்தம் என்று எப்படி ஒருவர் தெரிந்துகொள்ள முடியும்? இப்படித்தான் நேபுகாத்நேச்சார் சிந்தித்துக்கொண்டிருந்தான். நேபுகாத்நேச்சார் ஞானிகளின் முன்பாக இந்தச் சவாலிட்டபோது, அவர்கள் மிகவும் கலக்கமடைந்து திகலடைந்தனர். நேபுகாத்நேச்சார் போன்ற ஒரு ஆட்சியாளர் உன்னிடம் ஒரு காரியத்தைச் செய்யும்படிச் சொன்னால், அவர் கேட்டதை நீ செய்யவேண்டும், அல்லது மிகுந்த துன்பப்பட வேண்டியிருக்கும்.

அவர்கள் ராஜாவிடம், "ராஜா கேட்கும் காரியத்தை அறிவிக்கத்தக்க மனுஷன் பூமியில் ஒருவனுமில்லை... மாம்சமாயிருக்கிறவர்களோடே வாசம்பண்ணாத தேவர்களேயொழிய ராஜசமுகத்தில் அதை அறிவிக்கத்தக்கவர் ஒருவரும் இல்லை'' (தானியேல் 2:10, 11) என்றார்கள். இந்தப்பதில் நேபுகாத்நேச்சாருக்குக் கடுங்கோபம் உண்டாக்கியது. எல்லா ஞானிகளையும் கொலைசெய்யும்படிக் கட்டளையிட்டார் - தானியேலையும் அவன் நண்பர்களையும் கூட ஏனெனில் அவர்கள்

இந்த ஞானத்தின் மாணவர்களாயிருந்தனர். அவர்களுக்கு மரணத்தண்டனையளிக்கும்படி தலையாரிகளின் அதிபதி வந்தான். தானியேல் அவனிடம் ஞானத்துடனும் தந்திரமாகவும் பேசினான். அவன், "ராஜாவினுடைய கட்டளை ஏன் இவ்வளவு கொடுமையாக இருக்கிறது?" என்று கேட்டான். தலையாரியின் அதிபதி, "ராஜாவுக்கும் அவனுடைய ஞானிகளுக்கும் ஒரு கருத்து வேறுபாடு ஏற்பட்டது. ஞானிகள் தேவர்கள் மனிதர்களுக்குள் வாழவில்லை, அதனால் ராஜா கண்ட சொப்பனத்தை அவர்களால் கூற முடியாமலிருந்தது,'' என்று பதிலளித்தான்.

தானியேலின் பதில் என்ன என்று சுருக்கமாகப் பகுத்துப்பார்த்தால், "தேவன் மனிதர்களுக்குள் வாசம் செய்கிறார். இந்த இடத்தில்தான் அவர்கள் தவறு செய்திருக்கிறார்கள்,'' என்பதே. தானியேல் ராஜாவைப் பார்க்கப்போனான். ராஜா கண்ட சொப்பனத்தையும் அதன் அர்த்தத்தையும் தெரிவிக்க சிறிது கால அவகாசம் கேட்டான். தானியேல் தான் செய்ததைத் தன் மூன்று நண்பர்களிடமும் சொன்னான். அவர்கள் ஜெபிக்கத் துவங்கினார்கள். அந்த இரவு ஒரு தரிசனத்தில் தேவன் இயற்கைக்கு அப்பாற்பட்ட விதத்தில் நேபுகாத்நேச்சாரின் சொப்பனத்தையும் அதன் அர்த்தத்தையும் தானியேலுக்கு வெளிப்படுத்தினார்.

தானியேல் நேபுகாத்நேச்சாரைச் சந்தித்தார். அவர்களுடைய உரையாடலின் சுருக்கம்: "வாலிபனே, நான் கண்ட சொப்பனத்தையும், அதன் அர்த்தத்தையும் எனக்குத் தெரிவிக்கப் போகிறாய் என்று நான் புரிந்துகொண்டேன்.'' இதற்குத் தானியேல், "உம்முடைய ஞானிகளிடம் நீர் கேட்ட கேள்விகளுக்கு தேவனால் மாத்திரமே தேவனால் மட்டுமே பதிலளிக்கமுடியும், வல்லமைமிக்க ராஜாவே. உம்முடைய ஞானிகள் கூறியது தவறு. தேவன் மனிதர்களோடும் வாழ்கிறார். அவர் உம்முடைய சொப்பனத்தையும் அதன் அர்த்தத்தையும் எனக்குத் தெரிவித்திருக்கிறார்,'' என்று பதிலளித்தான். தானியேல் அந்தச் சொப்பனத்தையும் அதன் அர்த்தத்தையும் நேபுகாத்நேச்சாரிடம் சொன்னபொழுது, ராஜா முகங்குப்புற விழுந்து, அந்த நாள் முதல் தானியேலை, "தேவனுடைய ஆவி வாசம் செய்யும் மனிதன்'' என எப்பொழுதும் குறிப்பிட்டான். ராஜாவின் சொப்பனத்தையும் அதன் அர்த்தத்தையும் கூறியது இயற்கைக்கு அப்பாற்பட்டவைகளாக இருக்கின்றன என்ற சத்தியத்தை நிரூபித்த ஐந்து அற்புதங்களில் ஒன்றாகும். இவை தானியேலின் புத்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறவை களில் ஒன்று. மற்ற நான்கு அதிசயங்களும்: தானியேலின் மூன்று நண்பர்களை எரியும் அக்கினி சூளையிலிருந்து காப்பாற்றியது. (அதிகாரம் 3). நேபுகாத்நேச்சார் வெளிப்படையாக விசுவாசத்தை ஏற்றுக் கொள்ளுவது (அதிகாரம் 4), சுவரில் கை விரல்கள் எழுதியது



(அதிகாரம் 5), சிங்கக் குகையினுள் சிங்கங்களிடமிருந்து தானியேல் விடுவிக்கப்பட்டது (அதிகாரம் 6).

இந்த அற்புதங்களின் மூலம், தானியேலும் அவனுடைய நண்பர்களும் கடினமான நேரங்களில் போராட உதவும். விசுவாசத்தைக் காட்டினார்கள். தேவனுடைய இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமையை பரிபூரணமாய் விசுவாசிக்கும் ஒரு நம்பிக்கை அவர்களுக்கிருந்தது. அவர்கள் ஜெபத்தின் வல்லமையை முற்றிலுமாக விசுவாசித்தார்கள், அவர்கள் தங்களை பாபிலோனுக்குக் கொண்டு வந்தது தெய்வீகச் செயலே என்பதை முற்றிலும் விசுவாசித்தார்கள்.

உங்களால் தப்புவிக்க முடியாத, தவிர்க்க முடியாத, சகிக்க முடியாத, முடியாது என்ற நிலையோடு எதிர்த்து நிற்கவேண்டிய ஆபத்தான நிலைகள் உங்களுடைய வாழ்க்கையில் எப்பொழுதாவது ஏற்பட்டதுண்டா? தானியேலும் அவனது நண்பர்களும் எதிர்கொண்ட ஆபத்துநிலைகள், தப்புவிக்கமுடியாததும், தவிர்க்கமுடியாததும், சகிக்கமுடியாததும், முடியாத நிலையிலுள்ளவைகளுமாய் இருந்தன. அவர்கள் அப்படிப்பட்ட ஆபத்தான சூழ்நிலைகளில் எப்படி வாழ்வது என்று நமக்குக் காட்டினார்கள். பாபிலோனில் தங்கள் ஆபத்து நேரங்களில் அப்படி வாழ்ந்து காட்டினார்கள்.

தானியேல் புத்தகத்தில் இந்த அதிசயங்களைப் பற்றிச் சிந்திக்கும்போது, இந்தக் கேள்விகளை நீங்களே கேட்டுக் கொள்ளுங்கள்: தேவனுடைய இயற்கைக்கு மேலான வல்லமையை நீ விசுவாசிக்கிறாயா? ஜெபத்தின் இயற்கைக்கு மேலான வல்லமையை விசுவாசிக்கிறாயா? தேவனுடைய மகிமைக்காக நீங்கள் இருக்குமிடத்தில் தேவன் உங்களை வைத்ததன் தெய்வீக செயலைப்பற்றியும் நோக்கங்களைப்பற்றியும் நீ விசுவாசிக்கிறாயா? இந்தக் காரியங்களை நீ முற்றிலுமாக நம்புகிறாயா?

அத்தியாயம் 11

# “மகிமையோடிருந்த பாபிலோன்”

இது ஒரு அறிவாளிகளின் ஆய்வாக இல்லாமல், ஒரு தியான புத்தகமாக இருக்கிறது. எனினும், தானியேல் புத்தகத்தை நீங்கள் நன்கு புரிந்துகொள்ள அதன் வரலாற்றுப் பின்னணியை அறிந்துகொள்ளுவது அவசியம். வேதாகமத்தின் நிகழ்ச்சிகள் நடந்த காலத்தைக் குறிப்பிட அன்று அரசாண்ட ராஜாக்கள் அல்லது சீசரின் அரசாட்சியை வேதாகமம் அடிக்கடிப் பயன்படுத்துகிறது. லூக்கா சுவிசேஷத்தின் இரண்டாவது அதிகாரத்தில் கிறிஸ்மஸ் கதையைச் சொல்லும் துவக்க வசனங்கள் இதற்கு ஒரு எடுத்துக்காட்டாகும்.

தானியேல் புத்தகத்தின் முதல் நான்கு அதிகாரங்களில் காணப்படும் நிகழ்ச்சிகள் நடந்தபோது நேபுகாத்நேச்சார் பாபிலோனிய உலக வல்லரசின் ராஜாவாயிருந்தான். ஐந்தாவது அதிகாரத்தில் நேபுகாத்நேச்சாரின் மகன் பெல்ஷாத்சார் ராஜாவாயிருந்தான் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதிகாரம் ஐந்தின் கடைசி வசனங்களிலும் ஆறாம் அதிகாரத்தில் முதல் வசனங்களிலும், பெர்சியர்கள் பாபிலோனை தோற்கடித்து மேதியனான தரியு ராஜாவாகிவிட்டானென்று நாம் வாசிக்கிறோம். இந்தப் பிரகாரமாக, தானியேல் புத்தகத்தின் முதல் ஆறு அதிகாரங்களும் பாபிலோனிய வரலாற்றின் எழுபது ஆண்டுகளைப் பற்றிச் சொல்லுகிறது என்று காண்கிறோம்.

வேதாகமப் பொருள் அடக்கத்தில் சொல்லப்பட்ட நிகழ்ச்சிகளின் வரலாற்று சந்தர்ப்பம், எகிப்து, அசீரியா, பாபிலோன், பெர்சியா, கிரேக்க நாடு, ரோமநாடு ஆகிய உலக வல்லரசுகளை இணைப்பதாயிருக்கின்றன. தானியேலின் புத்தகத்தில் இரண்டு உலக பேரரசுகள் ஒன்றின்மீது ஒன்று படிந்திருக்கிறது. எழுபது ஆண்டுகள் ஆட்சிசெய்த பாபிலோனிய வல்லரசும் 127 மீதிய-பெர்சிய மாகாணங்களாலான பெர்சிய வல்லரசும். இது எஸ்தர் புத்தகத்தின் வரலாற்றுப் பின்னணியுமாயிருக்கிறது. தானியேலின் தீர்க்கதரிசனங்களில் ஒன்றில், அவர் பாபிலோன், பெர்சியா,



கிரேக்க நாடு, ரோம நாடு ஆகிய நான்கு உலக வல்லரசுகளைப்பற்றி குறிப்பிடுகிறார்.

பாபிலோன் பட்டணத்தைப்பற்றி நீங்கள் சிறிது கற்றுக்கொண்டால், தானியேல் புத்தகத்தின் வரலாற்று அமைப்பைத் தெரிந்துகொள்ளவும், நேபுகாத்நேச்சார் ராஜாவின் ஆடம்பரத்தையும் பெருமையையும் தெரிந்துகொள்ளவும் முடியும். ஒரு பழைய ஏற்பாட்டு ஞானி இந்தப் பட்டணத்தைப்பற்றி எழுதிய விவரங்களை வாசியுங்கள்: “இது இருபது லட்சத்துக்கும் அதிகமான மக்கள் வாழுமிடமாயிருந்தது. பாபிலோனின் தொங்கு தோட்டங்கள் புராதன உலகின் ஏழு அதிசயங்களில் ஒன்றாயிருந்தது. வரலாற்று ஆசிரியர்கள் இந்தப் பட்டணத்தைச் சுற்றியுள்ள சுவர் ஏறக்குறைய 100 கிலோ மீட்டர் நீளமும், ஒவ்வொரு பக்கமும் 25 கிலோமீட்டர் நீளமுமாயுமிருந்தது என்று சொல்லுகின்றனர். இந்தச் சுவர் 110 மீட்டர் உயரமும் 30 மீட்டர் அகலமுமானது. எதிரி சுரங்கம் வெட்ட முடியாதபடி அது பூமியினடியில் 13 மீட்டர் ஆழம் வரை கட்டப்பட்டிருந்தது. எல்லாப் பக்கங்களிலும் பட்டணத்துக்கும் சுவருக்குமிடையே 400 மீட்டர் வெற்றிடமிருந்தது. வெளிப்புறம் வீதியும் ஆழமுமான தண்ணீரால் நிரப்பப்பட்ட அகழியால் பாதுகாக்கப் பட்டிருந்தது. சுவரில் 250 காவல் கோபுரங்களிருந்தன.

“இந்தப் பட்டணம் யூப்ரட்டீஸ் ஆற்றினால் ஏறக்குறைய இரண்டு சமபகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. இரண்டு கரைகளும் செங்கல் சுவரால் காக்கப்பட்டது. இவைகளுக்கு இருபத்தைந்து வாசல்களிருந்தன. அவைகள் மக்கள் வாழும் தெருக்களையும், ஆட்களை ஏற்றிச் செல்லும் படகுகளையும் இணைத்தன. சுமார் ஒரு கிலோமீட்டர் நீளமும் 11 மீட்டர் அகலமுள்ள படகுத் துறையின்மேல் ஒரு பாலம் இருந்தது. இவை இரவில் இழுத்துமூடக்கூடிய இழுவைப்பாலங்களோடிருந்தன. ஆற்றுக்கடியில் ஏழு மீட்டர் அகலமும் நான்கு மீட்டர் உயரமுமான சுரங்கம் இருந்தது. அந்தக்கால பழைய போர்முறைப்படி இந்த பட்டணம் தகர்க்க முடியாதாயிருந்தது.”

தானியேலின் நாட்களில் பாபிலோன் உலகத்தின் முதன்மையான பட்டணமாயிருந்ததோடல்லாமல், அந்த நாட்களிலிருந்த மிகவும் சக்தியுள்ள வல்லரசையும் ஆட்சி செய்தது. அப்படியிருந்தாலும் இந்த வல்லரசு எழுபது ஆண்டுகள் மட்டுமே நல்ல நிலையில் நீடித்திருந்தது. தானியேல் அதன் எழுச்சியிலிருந்து வீழ்ச்சிவரை அங்கே இருந்தான். நேபுகாத்நேச்சார், பாபிலோன் வல்லரசைக் கட்டியெழுப்பிய மேதையாகவும் வலிமைமிக்க ஆட்சியாளராகவும் இருந்தார். இந்த எழுபது ஆண்டுகளில் நாற்பத்தைந்து ஆண்டுகள் அவர் இந்த உலக சாம்ராஜ்ஜியத்துக்குத் தலைவனாயிருந்தார்.

நேபுகாத்நேச்சாரின் அதிகாரமும் பராக்கிரமும் எல்லாராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. தானியேல் புத்தகத்தின் ஐந்தாம் அதிகாரத்தில் நாம், “அவர் தமக்குச் சித்தமானவனைக் கொன்று போடுவார், தமக்குச் சித்தமானவனை உயிரோடே வைப்பார்” (19) என்று வாசிக்கிறோம். நேபுகாத்நேச்சாரைப் போன்ற எல்லா அதிகாரங்களையுமுடைய ஒரு சர்வாதிகாரியைப் பாராட்டுவது இன்றைய மக்கள் அநேகருக்கு கடினமான ஒரு காரியம். எனினும், இந்த மனிதனைப்பற்றி வரலாற்றை நாம் பார்க்கும்போது, தானியேலின் தேவனிடம் தான் கொண்ட விசுவாசத்தைப் பகிரங்கமாக அறிக்கையிடுவது, மிகப்பெரிய ஒரு அற்புதம் விவரிக்கப்பட்டுள்ளது என்று தெரிந்துகொள்ளுவீர்கள்.

நேபுகாத்நேச்சாரின் சொப்பனத்தைத் தானியேல் அற்புதமான வழியில் தெரிந்துகொண்டு அவன் அந்த சொப்பனத்துக்கு அர்த்தத்தையும் அறிவித்தது. இந்த அரசனின் மீது ஆழ்ந்த தாக்கத்தை ஏற்படுத்தியது (அதிகாரம் 2). அந்தச் சொப்பனத்தில் நேபுகாத்நேச்சார் ஒரு மனித சிலையைக் கண்டான். அதன் தலை பசும்பொன்னும், மார்புப் பகுதி வெள்ளியும், கால்கள் இரும்பும், பாதங்கள் பாதி இரும்பும் பாதி களிமண்ணுமாயிருந்தது.

தானியேலின் அர்த்தப்படி இவை நான்கும் நான்கு பெரிய ராஜ்ஜியங்கள். தானியேல் நேபுகாத்நேச்சாரின் சொப்பனத்துக்கு சொல்லிய அர்த்தத்தின் சாராம்சம், “இப்பொழுது நீர் உலக அதிகாரமாயிருப்பதால், பசும்பொன்னாலான தலை நீரே, ஆனால் உமது அதிகாரம் நிலைக்காது. உம்முடைய ராஜ்ஜியம் வீழ்ந்து, இன்னொரு ராஜ்ஜியத்தினால் வெற்றி கொள்ளப்படும். அதுவே சிலையின் வெள்ளிப்பகுதி. இந்த ராஜ்ஜியம் பெர்சியா உம்முடையதைப்போல மிக சிறந்ததாய் இருக்காது. இதைத் தொடர்ந்து வெண்கல ராஜ்ஜியமாகிய கிரேக்க ராஜ்ஜியம் ஆட்சி செய்யும். கடைசியாக இரும்புக் கால்கள் ரோம ராஜ்ஜியத்தைச் சித்தரிக்கிறது. பத்து கால்விரல்கள் ரோம சாம்ராஜ்ஜியத்தின் பத்து பரிமாணங்களை குறிப்பிடுவதாயிருக்கக் கூடும்.

நேபுகாத்நேச்சார் தன்னை “பசும்பொன்னாலான தலை” என்று குறிப்பிட்டதைக் கேட்டவுடன் பெருமையால் நிறைந்திருந்தவன் போல தோன்றுகிறது. அதனால் அவன் பொன்னால் ஒரு சிலையைப் பண்ணி, ஒவ்வொருவரும் கீழே விழுந்து பணிந்துகொள்ளும்படிச் செய்தான். இந்தக் கட்டத்தில் அவர் மனமாற்றமடைந்ததற்கு வெகு தூரமாயிருந்தார்! எனினும் நாம் காணப்போகிறபடி, தானியேல் மற்றும் அவன் மூன்று நண்பர்களுடைய சாட்சி, ஜீவனுள்ள தேவனை வெளிப்படையாக விசுவாசிக்கும்படி நேபுகாத்நேச்சாரில் ஆழ்ந்த தாக்கத்தை ஏற்படுத்தியது.



## நேபுகாத்நேச்சார் மனம் வருந்துகிறார்

நேபுகாத்நேச்சாரின் சொப்பனத்தில், ஒரு மலையிலிருந்து ஒரு கல் வெட்டியெடுக்கப்பட்டது, எனினும் அது மனிதகைகளால் வெட்டியெடுக்கப்படவில்லை. இந்த இயல்புக்கப்பாற்பட்ட கல் நேபுகாத் நேச்சாரின் இரும்பினாலும் களிமண்ணாலும் செய்யப்பட்ட பாதத்தில் விழுந்தது. இதன் விளைவாக முழுச்சிலையும் கீழே விழுந்து, நொறுங்கி, போரடிக்கிற களத்திலிருந்து பறந்துபோகிற பதரைப்போல பறந்து போயிற்று. பசும்பொன், வெள்ளி, வெண்கலம், இரும்பு ஆகியவைகளைகச் சித்தரிக்கப்பட்ட இந்த ராஜ்ஜியங்கள் எல்லாம் ஒரு நாள் இயல்புக்கப்பாற்பட்ட தேவனுடைய ராஜ்ஜியத்தால் வெற்றிகொள்ளப்படும் என்ற அர்த்தத்தை தானியேல் நேபுகாத்நேச்சாருக்குச் சொன்னான். தானியேலின் வாழ்க்கையும் வார்த்தைகளும் நேபுகாத்நேச்சாரைச் சென்றடைய தேவன் எப்படி பயன்படுத்தினார் என்பது சரியாக நமக்குத் தெரியாவிட்டாலும், தானியேல் புத்தகத்தின் நான்காம் அதிகாரத்தில் இந்த அற்புதமான பகுதியை வாசிக்கிறோம், “உன்னதமான தேவன் என்னிடத்தில் செய்த அடையாளங்களையும் அற்புதங்களையும் பிரசித்தப்படுத்துவது எனக்கு நன்மையாய்த் தெரிந்தது. அவருடைய அடையாளங்கள் எவ்வளவு மகத்துவமும், அவருடைய அற்புதங்கள் எவ்வளவு வல்லமையுமாயிருக்கிறது; அவருடைய ராஜ்யம் நித்திய ராஜ்யம்; அவருடைய ஆளுகை தலைமுறை தலைமுறையாக நிற்கும்” (2, 3).

இந்த அசாதாரண வேதாகம அதிகாரத்தில், நேபுகாத்நேச்சார் தாம் கண்ட மற்றொரு சொப்பனத்தை விவரிக்கிறார். இந்தச் சொப்பனத்தில் மிகவும் உயரமான ஒரு மரத்தைக் கண்டார். உலகத்திலுள்ள எல்லாராலும் காணக்கூடிய அளவுக்கு அது மிகவும் உயரமாயிருந்தது. உலகத்திலுள்ள எல்லாரும் சாப்பிடக்கூடிய அளவுக்கு அதன் கிளைகள் கனிகளால் நிறைந்திருந்தன. வானத்திலிருந்து ஒரு தேவதூதன் இறங்கிவந்து, உரத்த சத்தமிட்டு, “இந்த விருட்சத்தை வெட்டி, இதின் கொம்புகளைத் தறித்துப் போடுங்கள்; இதின் இலைகளை உதிர்த்து, இதன் கனிகளைச் சிதறடியுங்கள்... ஆனாலும் இதன் வேர்களாகிய அடிமரம் பூமியில் இருக்கட்டும்; இரும்பும் வெண்கலமுமான விலங்குகள் இடப்பட்டு, வெளியின் பசும்புல்லிலே தங்கி, ஆகாயத்துப் பனியிலே நனைவதாக” (4:14-15) என்று சொன்னான்.

தேவதூதன் தொடர்ந்து, “மிருகங்களோடே பூமியின் பூண்டிலே அவனுக்குப் பங்கு இருக்கக்கடவது. அவனுடைய இருதயம் மனுஷ இருதயமாயிராமல் மாறும்படி, மிருக இருதயம் அவனுக்குக் கொடுக்கப்படக்கடவது; இப்படியிருக்கிற அவன்மேல் ஏழு காலங்கள்

கடந்துபோக வேண்டும்'' (15-16). இந்தக் கட்டளையின் நோக்கம், "உன்னதமானவர் மனுஷருடைய ராஜ்யத்தில் ஆளுகை செய்து தமக்குச் சித்துமானவனுக்கு அதைக் கொடுத்து, மனுஷரில் தாழ்ந்தவனையும் அதின்மேல் அதிகாரியாக்குகிறார்'' (16) என்று உலகம் புரிந்து கொள்ளுவதற்காகவே என்று தேவதூதன் சொன்னார்.

இந்த சொப்பனத்தையும் ராஜா தானியேலிடம் சொன்னதாக நம்மிடம் சொல்லுகிறார். தீர்க்கதரிசி இந்த சொப்பனத்தைக் கேட்டபொழுது, அந்தச் சொப்பனத்தின் அர்த்தத்தினால் பிரமிப்படைந்து, திகைத்து அமைதியாய் ஒரு மணி நேரம் உட்கார்ந்திருந்தார். கடைசியாக அவர், ''என் ஆண்டவனே, அந்தச் சொப்பனம் உம்முடைய பகைவரிடத்திலும், அதின் அர்த்தம் உம்முடைய சத்துருக்களிடத்திலும் பலிக்கக்கடவது'' (19) என்றார்.

அந்தச் சொப்பனத்தின் அர்த்தத்தைத் தெரிவிக்கும்படி ராஜா தானியேலிடம் பணிவுடன் கேட்டுக்கொண்டபின் தானியேல், "உன்னதமானவர் மனுஷருடைய ராஜ்யத்தில் ஆளுகை செய்து, நமக்கு சித்தமாயிருக்கிறவனுக்கு அதைக் கொடுக்கிறார் என்பதை நீர் அறிந்துகொள்ளுமட்டும் ஏழு காலங்கள் உம்முடைய பேரில் கடந்துபோக வேண்டும்'' (25) என்று சொன்னார்.

எனினும், தேவனுடைய ஆட்சி உரிமையை ஒத்துக்கொள்ளும்போது, தேவன் நேபுகாத்நேச்சாருக்கு ராஜ்ய அரசுரிமையை மீண்டும் கொடுப்பார் என்று தானியேல் தொடர்ந்து சொன்னார். அப்பொழுது தானியேல், ''நீதியைச் செய்து உமது பாவங்களையும், சிறுமையானவர்களுக்கு இரங்கி உமது அக்கிரமங்களையும் அகற்றிவிடும்; அப்பொழுது உம்முடைய வாழ்வு நீடித்திருக்கலாம்'' (27) என்று மன்றாடிக் கேட்டுக்கொண்டார்.

இந்தச் சொப்பனத்தில் அவர் தீர்க்கதரிசனமாய்த் தெரிவித்த அர்த்தம் நிறைவேறிய சில வசனங்களை விவரித்து எழுதுவதுபோல் தோன்றுகிறது. இந்தப் பயங்கரமான சோதனை முடிந்ததும், நேபுகாத்நேச்சார் ஜீவனுள்ள தேவனாகிய தானியேலின் தேவனிடம் தனக்குள்ள விசுவாசத்தையும் துதியையும் வெளிப்படையாக அறிக்கையிட்டு தொடர்ந்து எழுதத்துடங்கினார். அவர் தம்முடைய கண்களை வானத்துக்கு நேராக ஏறெடுத்து உன்னதமானவருக்கு துதிசெலுத்தி, கனப்படுத்தி அவரை மகிமைப்படுத்தினார்!

இந்த பயங்கரமான அனுபவத்திற்குள் நேபுகாத்நேச்சாரை கொண்டுசெல்ல தேவனுக்கு ஒரு நோக்கமிருந்தது என்பதைக் கவனியுங்கள்: இதன் மூலம் உன்னதமானவர் மனிதர்களுடைய ராஜ்ஜியங்கள் மேல் ஆட்சி செய்கிறார் என்பதைக் கற்றுக் கொடுத்தார்.



நேபுகாத்நேச்சார் இறுதியில் என்ன கற்றுக்கொள்ள வேண்டும் என்று தேவன் விரும்பினாரே, அதைக் கற்றுக்கொள்ளும் வரை, ஏழு வருஷங்கள் நேபுகாத்நேச்சார் ஒரு மிருகத்தைப்போல வாழவேண்டியிருந்தது. இந்த உலக ஆட்சியாளர் தன்னுடைய தலையைக் குனியும்படிச் செய்ய தேவனுக்கு ஏழு வருஷங்களாயிற்று. அவருக்கு எப்படிப்பட்ட தற்பெருமை இருந்திருக்கவேண்டும்!

நாமும் சில சமயங்களில் பயங்கரமான துன்பங்களை அனுபவிக்கிறோம். அது இந்த உலகத்தையும் நம்முடைய வாழ்க்கைகளையும் ஆட்சி செய்ய தேவனுக்கு எல்லா உரிமையும் இருக்கிறது என்று காட்டுவதற்காக இருக்குமோ? அப்படி நடைபெறும்போது, "என் கர்த்தாவே, என் தேவனே! நீரே என்னை ஆட்சி செய்கிறவர். நீரே பேரரசர். என் வாழ்க்கையின்மேல் உமக்குப் பூரண அதிகாரம் இருக்கிறது." என்று நீ தேவனிடம் சொல்ல எவ்வளவு நேரம் நீ எடுத்துக்கொள்ளுவாய்?

அத்தியாயம் பன்னிரண்டு

# “தானியேலின் தரிசனங்களும் வெளிப்படுத்துதல்களும்”

தானியேலின் முதல் ஆறு அதிகாரங்களையும் சரித்திரம் என்பதால் மிகவும் எளிதாக விளங்கிக்கொள்ள முடியும். கடைசி ஆறு அதிகாரங்களும், வெளிப்படுத்தின விசேஷம், எசேக்கியா, சகரியா ஆகியோரின் தீர்க்கதரிசனங்களைபோல புரிந்துகொள்ள மிகக் கடினமானது. தானியேல் இரண்டாம் அதிகாரத்தில் நேபுகாத்நேச்சாரின் முதல் சொப்பனத்துக்கு தானியேல் அர்த்தம் சொல்லியது, தானியேல் புத்தகத்தின் கடினமான வெளிப்படுத்துதல்களுக்கும் தரிசனங்களுக்கும் நாம் அர்த்தம் காண முயற்சிக்கும்போது வழிகாட்டும் ஒரு மாதிரியாயிருக்கிறது. நம்முடைய உலகத்தில், தேவனுடைய மிகப்பெரிய கிரியையான தீர்க்கதரிசன வெளிப்படுத்துதல்களாகிய இந்தத் தரிசனங்களை நாம் பரிசுத்த ஆவியானவரின் உபதேச ஊழியம் வழி மட்டுமே தெரிந்துகொள்ள முடியும்.

தானியேலின் தரிசனங்களையும், வெளிப்படுத்துதல்களையும் நீங்கள் தெரிந்துகொள்ள முயற்சிக்கும்போது கடைப்பிடிக்க வேண்டிய சில வழிகள் இங்கே கொடுக்கப்பட்டிருக்கின்றன. முதலாவதாக, இந்தத் தரிசனத்தின் சில அடையாளங்களைக் கவனியுங்கள். எடுத்துக்காட்டாக, ஏழாம் அதிகாரத்தில் எழுதப்பட்டுள்ள தானியேலின் கடினமான முதல் தரிசனத்தின் அடையாளங்கள் நேபுகாத்நேச்சாரின் முதல் தரிசனத்துக்கு ஒத்ததாயிருந்தன.

நான்கு பெரிய காற்றுகள் சமுத்திரத்தின் மேல் அடித்தது. அப்பொழுது நான்கு பெரிய மிருகங்கள் சமுத்திரத்திலிருந்து எழும்பின. இவற்றில் நான்காம் மிருகம் பயங்கரமும் கொடியதாயுமிருந்தது. இது மற்ற மிருகங்களை அழித்தது. அழிப்பதற்கு முன்பாக அந்த



மிருகத்துக்குப் பத்து கொம்புகள் முளைத்தன. இந்தப் பத்துக் கொம்புகளிலிருந்து, சின்னக் கொம்பு ஒன்று எழும்பிற்று. இந்தச் சின்ன கொம்புக்கு கண்களும் ஒரு பெரிய வாயுமிருந்தன. இந்த வாய் பெரிய, மாட்சிமை பொருந்திய வசனங்களைப் பேசியது.

இரண்டாவதாக, இந்த அடையாளங்களுக்கிடையேயுள்ள வினையையும் எதிர்வினையையும் கவனியுங்கள். வசனங்களில் கொடுக்கப்பட்ட அர்த்தம் அந்தப் பகுதியின் ஏவப்பட்ட அர்த்தமாயிருக்கிறது என்பதைச் சிந்தித்துப் பாருங்கள். இப்படிச் செய்தபின் இவை எல்லாவற்றிற்கும் என்ன அர்த்தம் என்று ஜெபத்தோடு பரிசுத்த ஆவியானவரைக் கேளுங்கள்.'' அது என்ன சொல்லுகிறது, அதன் அர்த்தம் என்ன, அவர்களுக்கு அது என்ன அர்த்தத்தைக் கொடுக்கிறது, எனக்கு என்ன அர்த்தத்தைக் கொடுக்கிறது?'' என்று உங்களையே கேளுங்கள்.

ஏழாவது அதிகாரத்தில் தானியேலின் சொப்பனத்துக்கு ஏவப்பட்ட அர்த்தம், நாம் மறுபடியும் நான்கு பெரிய ராஜ்ஜியங்களை நோக்கிப் பார்க்கிறோம் என்று சொல்லுகிறது. ''அந்த நாலு பெரிய மிருகங்களும் பூமியிலிருந்து எழும்புகிற நாலு ராஜாக்கள். ஆனாலும் உன்னதமானவருடைய பரிசுத்தவான்கள் ராஜரிகத்தைப் பெற்று, என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் ராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள்'' (17, 18). பூமியில் நான்காவது ஒரு ராஜ்ஜியம் தோன்றி அவைகளை அழித்துப் போடும். இந்தப் பத்து கொம்புகளும் பத்து ராஜ்ஜியங்களிலிருந்து வருகிற பத்து ராஜாக்கள். ''அந்தப் பத்துக் கொம்புகள் என்னவென்றால், அந்த ராஜ்ஜியத்திலே எழும்பும் பத்து ராஜாக்களாம்; அவர்களுக்குப் பின்பு வேறொருவன் எழும்புவான்; அவன் முந்தினவர்களைப் பார்க்கிலும் வேராயிருந்து, மூன்று ராஜாக்களைத் தாழ்த்திப்போட்டு, உன்னதமானவருக்கு விரோதமாக வார்த்தைகளைப் பேசி, உன்னதமானவருடைய பரிசுத்தவான்களை ஒடுக்கி, காலங்களையும் பிரமாணங்களையும் மாற்ற நினைப்பான்; அவர்கள் ஒரு காலமும், காலங்களும், அரைக்காலமும் செல்லுமட்டும் அவன் கையில் ஒப்புக்கொடுக்கப்படுவார்கள்'' (24-25).

வேதாகமத்தில் கொம்புகள் குறிப்பிட்டபொழுதெல்லாம், மற்ற மிருகங்களைப் பீறிப்போடும் ஒரு மிருகத்தின் கொம்புகளைப்போல, அவை 'அதிகாரத்தைக்' குறிப்பிடுகின்றன. இந்தப் பத்து கொம்புகளும், ஒரு சிறிய கொம்புகூட அதிகாரங்களை ராஜ்ஜியங்களைக் - குறிப்பிடுகின்றன. அநேக மக்கள் இந்த நாலாவது ராஜ்ஜியத்தை, எழுப்பப்பட்ட ஒரு ரோம சாம்ராஜ்ஜியம் என்று அர்த்தம் தெரிவிக்கின்றனர். நேபுகாத் நேச்சாரின் தரிசனத்தில், நான்காவது ராஜ்ஜியமாகிய இரும்பு கால்கள், ரோம சாம் ராஜ்ஜியத்தைக் குறிப்பிட்டது. சிலர் இந்தத் தரிசனம், சில காலத்துக்குப்

பின் புதிதாக்கப்பட்ட ரோம சாம்ராஜ்ஜியத்தைக் குறிப்பிடுகிறது என்று நம்பினார்கள். மற்றவர்கள், இல்லை, இந்த நாலாவது ராஜ்ஜியம் மற்ற எல்லாவற்றையும்விட பயங்கரமானது என்று சொல்லுகிறார்கள். இது தேவனுடைய ராஜ்ஜியம், இது தேவனுடைய கடுங்கோபத்தைத் தீர்க்கதரிசன ரீதியில் காட்டுகிறது.

என்னுடைய கருத்துப்படி, தானியேலின் இந்தத் தீர்க்கதரிசனங்களின் நம்முடைய அர்த்தத்தைப்பற்றி நாம் நன்கு ஆராய்ந்து அறிய வேண்டும். எல்லா விவரணங்களைப்பற்றியும் நாம் சரியான கருத்துடையவர்களாயிருந்தாலும் இல்லாவிட்டாலும், தானியேலின் ஏழாம் அதிகாரத்தின் இந்தத் தீர்க்கதரிசனத்திலிருந்து ஒரு பெரிய சத்தியத்தை நாம் மனதில் வைக்க வேண்டும்.

நீங்கள் தேவனுடைய மக்களில் ஒருவராயிருந்தால், வெற்றிபெறப் போகிற ராஜ்ஜியத்தின் ஒரு பகுதியாக நீங்கள் இருக்கிறீர்கள். இந்தத் தரிசனங்கள் எல்லாம் ஒரு நல்ல நம்பிக்கையை உருவாக்குவதோடு முடிவடைகின்றன. தேவனுடைய ராஜ்ஜியம் மற்ற எல்லா ராஜ்ஜியங்களையும் தோற்கடித்து, ஒரு அழிவில்லா நித்திய ராஜ்ஜியமாகச் சித்தரிக்கப்படுகிறது.

## எழுபது வாரங்களின் தரிசனம்

யாவரும் அறிந்த தானியேலின் தரிசனம் அல்லது தீர்க்கதரிசன வெளிப்படுத்துதல் "எழுபது வாரங்களின் தரிசனம்" என்று அழைக்கப்பட்டது. தானியேல் தாம் எரேமியாவின் தீர்க்கதரிசனங்களை வாசிக்கும்போது, பாபிலோன் சிறையிருப்பிலிருந்து தேவனுடைய மக்கள் திரும்ப வேண்டிய காலம் என்பதை அவர் உணர்ந்து கொண்டதாகச் சொல்லுகிறார். ஏசாயாவும் எரேமியாவும் யூதாவின் மக்கள் ஏழுபது வருஷங்ளுக்கு பாபிலோனின் சிறையிருப்பில் இருந்தபின் தங்கள் சொந்த தேசத்துக்குத் திரும்புவார்கள் என்று முன்னறிவித்தனர். ஐந்தாவது அதிகாரத்தின் இறுதியிலும் ஆறாம் அதிகாரத்தின் ஆரம்பத்திலும், தானியேல் இப்போது மேதியனாகிய தரியு ராஜாவின் ஆட்சியின்கீழ் இருப்பதாகச் சொல்லும்போது, அவர் எழுபது வருஷ சிறையிருப்பின் இறுதிக் காலத்தைக் குறிப்பிடுகிறார்.

அதிகாரம் ஒன்பதில் நம்முடைய அழகான ஜெபத்தை ஜெபிக்கும்போது, எழுபது வருஷங்களின் இறுதி வந்துவிட்டது, என்ற உண்மையை நினைந்து கிளர்ச்சியடைந்தார் என்பது வெளிப்படையாய் தெரிகிறது. தானியேல் இதைப்பற்றி ஜெபித்தபொழுது அவர் தம்முடைய பாவங்களையும் மக்களின் பாவங்களையும் அறிக்கையிட்டார். வேதாகமத்திலுள்ள தூய்மையான குணஇயல்புடையவர்களில் தானியேல் ஒருவர் என்றாலும், மக்களுடைய பாவங்களோடு தம்மையும் அடையாளம் காட்டி,



இந்த ஜெபத்தில் முப்பத்திரண்டு முறை, "நம்முடைய பாவம்," "நாம் பாவஞ்செய்தோம்" போன்ற காரியங்களைச் சொல்லுகிறார்.

தானியேல் தேவனுடைய மன்னிப்பைக் கெஞ்சிக் கேட்டுக்கொண்டார். இதனால் அவர், "தேவனே, நீர் எங்களுக்கு மன்னிப்பளிக்கச் சித்தமாயிருக்கிறீர் என்பது மட்டுமல்ல, எங்களைத் தண்டிப்பதற்கும் ஆயத்தமாயிருக்கிறீர்" என்று சொன்னார். இந்த ஜெபத்தில், தேவன் தம்முடைய மக்களை மன்னித்து மீட்கப்போகிறார் என்ற உண்மையைப்பற்றி அவர் கிளர்ச்சியடைந்தவர்போல் காணப்பட்டார்.

தானியேல் ஜெபித்துக்கொண்டிருக்கும்போது, காபிரியேல் என்ற தூதன் அவருக்குத் தோன்றி, *"நீ வேண்டிக்கொள்ளத் தொடங்கினபோதே கட்டளைவெளிப்பட்டது, நான் அதை அறிவிக்கவந்தேன்"* (தானியேல் 9:23) என்று சொன்னார். தானியேலின் ஜெபத்துக்கு இது தேவனுடைய பதில். இது வேதாகமத்தில் வேறு எங்கும் காணப்படாத மிகச்சிறந்த மேசியாவின் தீர்க்கதரிசனங்களில் ஒன்று. இந்தத் தரிசனத்தின் சாராம்சம்; உன் மக்களையும் உன் பரிசுத்த நகரத்தையும் பற்றி வருஷங்களில் எழுபது வாரங்கள் கட்டளை கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த கட்டளை கொடுக்கப்பட இந்த எழுபது வாரங்களின் நோக்கங்கள் – அக்கிரமங்களை ஒழிப்பது, பாவத்துக்கு ஒரு முடிவு கட்டுவது, பாவச்செயல்களுக்கு பரிகாரம் காண்பது, சதாகாலங்களுக்குமான நீதியைக் கொண்டு வருவது, தரிசனங்களுக்கும் தீர்க்கதரிசிகளுக்கும் முத்திரையிடுவது, ஒரு உன்னத பரிசுத்த ஸ்தலத்தை அபிஷேகம் செய்வது ஆகியவை.

மீட்பைப்பற்றிய நற்செய்தியோடு கலந்து மேசியா இயேசு கிறிஸ்துவின் தோற்றம் அல்லது வருகை என்ற செய்தியும் காணப்படுகிறது. இந்த அசாதாரண தீர்க்கதரிசனத்தின் அர்த்தம் சில எளிய கணக்கீட்டை உள்ளடக்கியது. தேவன் தானியேலிடம், சிறையிருப்பு எழுபது ஆண்டுகள் நீடித்ததுபோல, மேசியாவின் வருகை ஏழு முறை எழுபது ஆண்டுகள் (7 x 70) அல்லது நானூற்று தொண்ணூறு ஆண்டுகளாகும் என்று சொன்னார். இந்த ஆண்டுகள், ஆண்டுகளின் வாரங்களாகப் பிரிக்கப்பட்டு (ஒரு ஆண்டு காலம்), பின்பு இந்த ஆண்டுகளின் எழுபது வாரங்கள் இவ்விதமாகப் பிரிக்கப்படும்: ஏழு வாரங்கள், அறுபத்திரண்டு வாரங்கள், மற்றும் ஒரு வாரம் இந்த ஒரு வாரத்தின் மத்தியில், அபிஷேகம் பண்ணப்பட்டவர் "தொடர்பற்றுப்போவார்" அல்லது மரணத்துக்குட் படுத்தப்படுவார்.

மக்கள் எருசலேமைத் திரும்பவும் கட்டுவதற்காக திரும்பலாம் என்று கோரேஸ் கட்டளையளித்த காலத்திலிருந்து இந்தத் தீர்க்கதரிசனம் கணக்கிடப்பட வேண்டும். இப்படிப்பட்ட திரும்பிவருதல் மூன்றிருந்தன, அவைகளில் முக்கியமான ஒன்று கி.மு. 457 ஆம் ஆண்டு.

அறுபத்திரண்டு வாரங்களோடு ஏழைக்கூட்டி, அதை ஏழால் பெருக்கும்போது 483 ஆண்டுகள் கிடைக்கின்றன. கி.மு. 457-இல் இருந்து வரலாற்றில் அத்தனை ஆண்டுகள் முன்னால் செல்லும்போது, கி.பி. 26-க்கு வந்து சேருகிறீர்கள். இந்த ஆண்டு மேசியா தம்முடைய பொது ஊழியத்தைத் துவங்கிய ஆண்டு என்று கல்வி அறிவாளிகள் கூறுகின்றனர். இதைத்தொடர்ந்து ஒரு வார ஆண்டுகள் (அல்லது ஏழு ஆண்டுகள்) இருக்க வேண்டும், அந்த வார ஆண்டுகளின் மத்தியில் பரிசுத்த மானவர் தொடர்பற்றுப்போவார். சரியாக கி.பி. 26-லிருந்து மூன்றரை ஆண்டுகளில் இயேசு கிறிஸ்து சிலுவையில், அறையப்பட்டார் என்று அறிவாளிகள் நம்புகின்றனர்.

ஞானிகள் நுண்ணிய விவரங்களைப்பற்றிய கருத்தில் வேறுபாட்டிலிருந்தாலும், இந்தத் தீர்க்கதரிசனத்தைப்பற்றிய ஒரு அற்புதமான முன்னறிவிப்பு, மேசியா வருகையையும் சிலுவையில் அறையப்படுவதையும் பற்றிய மிகவும் சரியான காலம், முடிவில்லாத அவருடைய ராஜ்ஜியத்தின் ஆரம்பம் ஆகியவற்றைப்பற்றியது. இது தானியேல் அர்த்தம் சொன்ன நேபுகாத்நேச்சாரின் இரண்டாம் சொப்பனம் / தரிசனத்தில் தீர்க்கதரிசனமாகச் சொல்லப்பட்ட ராஜ்ஜியம் (2:34,35,44,45). நான்கு உலக ராஜ்ஜியங்களையும் சித்தரித்த சிலையின் காலில் விழுந்து, அதைப் பதரைப்போல பறக்கடித்த பெரிய கல்லாக அந்த ராஜ்ஜியம் விவரிக்கப்பட்டது.

இந்தக் கல் சிலையின்மேல் விழுந்த பகுதி ரோமப் பேரரசை குறிப்பிட்டச் சிலையின் பகுதி. ரோம சாம்ராஜ்ஜியத்தின் காலத்தில் இயேசு தம்முடைய ராஜ்ஜியத்தைத் துவங்கினார் என்பதை இது மிகவும் துல்லியமாக சொல்வன்மையால் முன்னறிவித்தது. அந்த இயேசுவால் துவங்கப்பட்ட தேவனுடைய ராஜ்ஜியம் இப்போது இரண்டாயிரம் ஆண்டுகள் ரோம சாம்ராஜ்ஜியத்தைவிட அதிகமாக வாழ்ந்து, முடிவில்லாததாயிருக்கும்.

## இந்தத் தீர்க்கதரிசனத்தின் தனிப்பட்டச் செயல்பாடு

இந்த நித்திய ராஜ்ஜியத்தின் பகுதியாக இருப்பவர்களுக்கு நித்திய ஜீவன் உண்டு ஏனெனில் அவர்கள் நித்திய ராஜ்ஜியத்தின் ஒரு பகுதி என்பது இந்த அற்புதமான தீர்க்கதரிசனத்தின் வெளிப்படையான ஒரு அர்த்தமாகும்.

இந்த உவமையை மாற்றிச் சொன்னால், நீ ஒரு விசுவாசியாயிருந்தால், நீ தேவனுடைய மக்களில் ஒருவனாயிருந்தால், இப்பொழுது நீ நன்மைக்கும் தீமைக்கும் இடையே நடக்கும் போரில் வெற்றிபெரும் சேனையில் ஒரு போர்வீரனாய் இருப்பாய். நன்மைக்கும் தீமைக்குமிடையே நடக்கும் போர் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக நடைபெற்று



வருகின்றது, இன்றும் உலகின் அநேகப் பகுதிகளில் அந்தப் போர் நடந்துகொண்டிருக்கிறது. போர் நடக்குமிடங்கள் அவ்வப்போது மாறிக் கொண்டிருக்கின்றன; நன்மையும் தீமையும் வித்தியாசமான முகத்தோற்றமுடையவைகளாயிருக்கின்றன, எனினும் காயீன் தன் சகோதரன் ஆபேலைக் கொன்ற நாளிலிருந்து அந்தப் போர் நடந்துகொண்டேயிருக்கிறது.

## பரலோகப் பிரஜைகள்

அப்போஸ்தலர் பவுல் நம்முடைய பிரஜா உரிமைப் பரலோகத்திலிருக்கிறது என்று எழுதுகிறார். விசுவாச மக்கள், தேவனால் கட்டப்பட்டதும் உருவாக்கப்பட்டதுமான அஸ்திபாரங்களுள்ள ஒரு பட்டணத்தைத் தேடிச்செல்லும்போது அவர்களை இந்த உலகத்தைக் கடந்து செல்லும் யாத்ரீகர்கள் என்று வேதவசனங்கள் சொல்லுகின்றன. தேவனுடைய மக்கள் தேவனுடைய நகரத்துக்கு இந்த உலகத்தின் வழியாய் பாய்ந்து செல்லும் ஒரு நதியைப் போலிருக்கிறார்கள் என்று விவரிக்கப்பட்டிருக்கிறது. அந்த ஆறு அந்த நகரத்தினுள் பிரவேசிக்கும்போது அங்கே மிகுந்த ஆனந்த களிப்பு உண்டாயிருக்கும் (எபிரெயர் 11;13-16; சங்கீதம் 46:4,5).

இந்த நித்திய ராஜ்ஜியத்தில் நீ ஒரு பிரஜையாயிருக்கிறாயா? கிறிஸ்துவும் அவரது பிதாவாகிய தேவனும் நிச்சயமாக ஜெயம் கொள்ளும் வெற்றியை நீ பகிர்ந்துகொள்ளுகிறாயா? இயேசு கிறிஸ்து ராஜாதி ராஜனும், கர்த்தாதி கர்த்தரும், இந்த உலகத்தின் தீய சக்திகள்மேல் இறுதியில் வெற்றி காண்பவருமாயிருக்கிறார். நாம் அவருடைய உண்மையான சீஷர்களாயிருந்தால், அவருடைய ஆவிக்குரிய சேனையில் நாம் போர் வீரர்களாயிருப்போம். போகும் வழியில் சில போர்களில் நாம் தோல்வியடையலாம். எனினும், இறுதியில், நாம் போரில் வெற்றி பெறப் போகிறோம். நித்தியத்துக்கும் நாம் இந்த உண்மையோடு வாழ்வோம். அவருடைய வெற்றியின் பகுதியில் எந்த அளவுக்கு நாம் ஒரு பகுதியாயிருக்கிறோமோ, அது நம்முடைய நித்தியத்தின் தரத்தை நிர்ணயிக்கிறது.